பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை (29.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 337

# நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சை செயற்படுத்துவதற்கு ஆலோசனைக் குழு

## அமைத்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக்ரோபர் 29

**நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆலோசனைகளை வழங்கவென குழு ஒன்றை ஜனாதிபதி நியமிக்கவுள்ளார். இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் கெஹலிய அங்கு கூறியதாவது:-

நல்லிணக்க ஆணைக்குழு வெறும் கண்துடைப்பென உள்ளூரிலும், சர்வதேசத்திலும் விமர்சிக்கப்பட்டது. ஆனால், அக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதி உயர் பாதுகாப்பு வலயத்தின் பரப்பளவு படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. அப்பிரதேசத்தில் வசித்தவர்களுக்கு காணி உறுதியின்படி அவர்களது காணிகள் மீள ஒப்படைக்கப்படுகின்றன.

மேலதிகக் காணிகள் சமூக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

2009 ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 11,696 புலிச் சந்தேகநபர்கள் பாதுகாப்புப் படையினரிடம் (28 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் கெஹலியவுடன் ஊடகவியலாளர்கள் வாதம்

கொழும்பு, ஒக்.29

பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டது மற்றும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையில் நேற்று காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியது, களனியில் பெற்றோர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது பல்கலைக்கழக மாணவரொருவர் பொலிஸார் முன்னிலையில் தாக்கப்பட்டது ஆகியன தொடர்பாக ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் சரமாரியாகக் கேள்விகளை எழுப்பினர்.

**கேள்வி:-** களனியில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக மாணவரொருவர் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடைபெற்றபோது பொலிஸார் அதைப் பார்த்துக் (28 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களிடம் சொல்ஹெய்ம் மன்னிப்புக் கேட்க வேண்டும்

### பிரபல சட்டத்தரணி கோமின் தயாசிறி நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம்

கொழும்பு, ஒக். 29

''நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், அப்பாவித் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.''

- இவ்வாறு பிரபல சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''யுத்தத்தின்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கிய அவலங்களுக்கு எரிக் சொல்ஹெய்மும் முக்கிய பொறுப்பாளி.

''எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான முறையில் செயற்பட்டு வந்தார். அதேவேளை, அரசைச் சேர்ந்த சிலரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

''சொல்ஹெய்ம் புலிகளுடன் நட்புறவைப் பேணினாரே தவிர, அவர் சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படவில்லை.

''தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான முனைப்புக்களின்போது நோர்வேயை சமாதான ஏற்பாட்டாளராக தெரிவு செய்தமை பெரும் தவறாகும்.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.29

பொருள் விலையேற்றம், சம்பளப் பற்றாக்குறை, தொழிலாளர் பிரச்சினை, ஊழியர் சேமலாப நிதிப் பிரச்சினை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கூட்டுறவு, கூட்டுத்தாபனம் மற்றும் வர்த்தகத்துறைத் தொழிலாளர்கள் சங்கத்தினர் நேற்று கண்டி நகரில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்டி வை.எம்.பி.ஏ. கட்டடத்துக்கருகாமையிலிருந்து ஊர்வலமாகச் சென்று தலதா மாளிகை வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த பகுதியில்(28 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

**சீன ஆதிக்கத்தை தடுக்க தமிழகத்தில் கடற்படைத்தளம்**
இலங்கை ஊடாக இந்தியாவிலிருந்து சீனா ஆதிக்கம் செலுத்துவதைக் கட்டுப்படுத்த தமிழகத்தில் கடற்படைத்தளம் — பக்கம் 2

**குடாநாட்டில் இளவயதுக் கர்ப்பங்கள் அதிகரிப்பு** — பக்கம் 9

**பெண்கள் முக்காடு அணியத் தடை**
பெண்கள் முக்காடு அணியத் தடை என பின்லேடன் ஒலிநாடாமூலம் எச்சரிக்கை — பக்கம் 13

**புலிகளின் விமானப்படை பொறுப்பாளருக்கு பிடிவிறாந்து** — பக்கம் 05

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

கொழும்பு, ஒக். 29

சம்மாந்துறை மாவடிப்பள்ளி, தீவு வட்டை பகுதியில் நேற்று பகல் மின்னல் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அதேவேளை இளைஞர் ஒருவர் அதிர்ச்சியடைந்த நிலையில் சம்மாந்துறை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மழைக்கு மத்தியில் மாவடிப் பள்ளியிலிருந்து தீவு வட்டை நோக்கி(28 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புக்கு உட்பட்டதா இராணுவ நீதிமன்றம்? விளக்கம் கேட்கிறது மேன்முறையீட்டு நீதிமன்று

கொழும்பு, ஒக். 29

இராணுவ நீதிமன்றத்தை இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் கீழ் ஒரு நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ள முடியுமா என உயர் நீதிமன்றத்திடம் மேன்முறையீட்டு நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது.

நீதிபதிகள் ஆர்.எல்.ரஞ்சித் சில்வா மற்றும் உபாலி அபயரட்ண ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு அமர்வு நீதிமன்றம் தமக்கு அரசமைப்புத் தொடர்பான இந்த விளக்கத்தைத் தருமாறு நேற்று உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளது.

இதேசமயம் -

தமது நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்துச் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை முடியும்வரை அவரை நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிப்பதா அல்லது இல்லையா(28 ஆம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி - கொழும்பு இடையே பயணிகள் கப்பல்சேவை விரைவில்

தூத்துக்குடி,ஒக்.29

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பயணிகள் சேவைக்கு வேண்டிய உட்கட்டுமான வசதிகள் தூத்துக்குடி துறைமுகத்தில் ஏற்படுத்தப்படவுள்ளன.

நவம்பர் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பணிகள் ஒரு மாத காலத்துக்குள் நிறைவடையும்.

தூத்துக்குடித் துறைமுக அதிகாரசபையின் பிரதித்தலைவர் சுப்பையா இந்தத் தகவலைத் தெரிவித்தார். (28 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் சரவணா ரெக்ஸ்

தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

இல.526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



## டக்ளஸ் தேடப்படும் குற்றவாளியே சென்னை உயர் நீதிமன்று அறிவிப்பு

சென்னை, ஒக். 29

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேடப்படும் குற்றவாளியே என சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

1986ஆம் ஆண்டு சென்னை சூளைமேட்டில் நடந்த துப்பாக்கி சூட்டில் திருநாவுக்கரசு என்பவர் கொல்லப்பட்டார். அப்போது அங்கு தங்கி இருந்த டக்ளஸ் தேவானந்தா இந்த வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை சென்னை 4ஆவது மேலதிக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

வழக்கு விசாரணைக்கு டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்திற்கு வராததனால் அவரை தேடப்படும் குற்றவாளியாக 1994இல் நீதிமன்றம் அறிவித்தது.

இந்த நிலையில் சமீபத்தில் இந்தியா வந்த டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்ய வேண்டும் என்று (28 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி சென்றலில் தங்கியுள்ளவர்களை சொந்த இடத்தில் குடியமர்த்த ஏற்பாடு விரைவில்

## மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் உறுதிமொழி

கிளிநொச்சி, ஒக். 29

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள இடைத்தங்கள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இதற்கான உறுதிமொழியை வழங்கி உள்ளார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு நேற்று மாலை வருகை தந்த பிரதி அமைச்சர் அங்கு தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த ஏற்பாடு செய்ய வேண்டும் என அப்போது அந்த மக்கள் பிரதி அமைச்சரிடம் கோரினார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சொந்த இடத்தில் அவர்களை குடியமர்த்த ஏற்பாடு செய்வார் என அவர் உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து கல்லூரியின் பிரதி அதிபர் எஸ். ஆலாலசுந்தரம் மற்றும் ஆசிரியர்களுடன் பிரதி அமைச்சர் கலந்துரையாடினார். பாடசாலையின் தேவைகள் குறித்து அவரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

கல்வியமைச்சருடன் தொடர்பு கொண்டு கல்லூரியின் தேவைகளை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்வார் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ஐ-405)

# ஜேர்மன் குடிவரவுச் சட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன

## அந்நாட்டு பேராசிரியர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 29

ஜேர்மனியில் குடிவரவு குடியகல்வுச் சட்டங்கள் இறுக்கமானவை. தற்போது அவற்றில் சில மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு ஜேர்மன் பல்கலைக்கழக முகாமைத்துவ பேராசிரியர் மாரிவோன் பேக்மன் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் மொழி கற்கைநெறி நிலையத்தினை யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் :-

மொழிகளால் பல பிரச்சினைகள் ஏற்படுவதினை நீங்கள் அறிவீர்கள். இங்கு பலர் வேற்று மொழிகள் கற்க முடியாமல் இருக்கின்றார்கள். இங்கிருந்து கொழும்புக்குச் சென்று கல்வி பயில்வது கடினம். அதனை நானும் உணர்வேன். அந்த வகையிலேயே இங்கு இந்தக் கற்கைநெறி நிலையத்தினை ஆரம்பிக்கின்றோம். இதன் மூலம் இலவச வகுப்புகளை மேற்கொண்டு இங்குள்ளவர்களின் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று நம்புகின்றேன்.

இங்கிருந்து பலர் எமது நாட்டுக்கு வருகின்றார்கள். அவர்கள் அங்கு வந்து மொழி தெரியாப் பிரச்சினையினால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் எமது நாட்டில் குடும்பங்களுடன் மொழி கற்கக் காத்திருக்கின்றார்கள். எனவே அந்தப் பிரச்சினைகள் இனிமேல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இங்கு எமது ஜேர்மன் மொழிக் கல்வி நிலையத்தை ஆரம்பிக்கின்றோம். அத்துடன் சிங்கள மொழியும் இலவசமாக இங்கு கற்பிக்கப்பட இருக்கின்றது.

நீங்கள் ஜேர்மன் மொழியினைக் கற்றுவிட்டு எமது நாட்டுக்கு விசாவுக்கு விண்ணப்பிக்கும்போது கட்டுப்பாடில்லாத விசாவினையும் பெறமுடியும்.- என்றார். (ஐ-15)

### வசந்தபுரத்தில் தொடரும் கண்ணிவெடி அகற்றும் பணி

யாழ்ப்பாணம்,ஒக்.29

கொழும்புத்துறை, வசந்தபுரத்தில் கண்ணிவெடி அகற்றல் தொடர்பான குறிப்பு ஆவணங்களை ஒரு வார காலத்தினுள் வழங்குவதாக டீ.டீ.ஜி. கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தெரிவித்துள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வசந்தபுரத்தின் மேற்குப்பக்கமாக இராணுவ காவலரண் காணப்படுவதாகவும் கிழக்குப் பக்கமாக 300 மீற்றர் தூரத்துக்கு மிதிவெடி அகற்றல் செயற்பாடு இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-15)

### குருகுலராஜா பணியில் தொடர்வார்

கிளிநொச்சி,ஒக்.29

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தொடர்ந்தும் கிளிநொச்சியிலேயே தனது பணிகளை முன்னெடுக்க இருக்கிறார்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் கிளிநொச்சி வலய அதிகாரிகளுக்கும் இடையில் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் காணப்பட்ட இணக்கத்தையடுத்து குருகுலராஜா வலயப் பணிப்பாளராக கிளிநொச்சியில் பணியைத் தொடர்வார்.

தருமபுரம் இல.1 பாடசாலையின் கட்டடங்கள் பூர்த்தியாகாத செயற்பாடு குறித்து ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இவரை இடமாற்றம் செய்ய ஆளுநரால் முயற்சிமேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனை எதிர்த்து வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் போர்க் கொடி உயர்த்தினர். (உ-ஐ)

### தெற்கு தொழிற்சாலைகளுக்கு இங்கிருந்து மேலும் யுவதிகள்

வலி.வடக்கு, ஒக்.29

யாழ்.மாவட்டத்தில் இருந்து மேலும் ஒரு தொகுதி யுவதிகள் தென்பகுதி ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரிய அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

தென்பகுதி ஆடைத்தொழிற்சாலைகளில் கடமையாற்ற ஒரு தொகுதியினர் ஏற்கனவே இரண்டு கட்டங்களாக அழைத்துச் செல்லப்பட்டு பணிபுரிகின்றனர்.

வலி.வடக்கு தெல்லிப்பழை, வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 16 பேர் மகரகமவில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிய வென நேற்று முன்தினம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

மனித வலு அமைச்சின் ஏற்பாட்டில் கீழ் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து இந்த நடவடிக்கை கட்டம் கட்டமாக நடத்தப்படுகிறது. பயிற்சி வகுப்புகள் வைக்கப்பட்டு பெற்றோர்களுடன் கலந்துரையாடிய பின்னரே யுவதிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை யாழ்ப்பாணத்தில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட யுவதிகள் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். (உ-86)

## ஜனாதிபதி சீனாவுக்கு இரு நாள் சுற்றுப்பயணம்

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று சீனாவுக்குச் செல்கிறார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. சீனாவில் நடைபெறும் எக்ஸ் போ கண்காட்சியின் இறுதி நாளன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ மற்றும் பிரதமர் சென் ஜியாபாவோ ஆகியோருடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி சீனாவிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் சென்று பார்ப்பார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளார்.

பௌத்த விகாரைகளுக்குச் செல்வதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். அந்த நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத்துறை அபிவிருத்தி பற்றியும் இந்தப் பயணத்தின்போது கவனம் செலுத்தப்படவுள்ளது. (உ-5)



சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

சிறந்த மாணவர் ஒருவருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பட்டமளிப்பதைக் காணலாம். அருகில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மேஜர் ஜெனரல் டெனிஸ் பெரேரா காணப்படுகிறார்.(ஐ)

### லண்டன் வாழ் ஈழத் தமிழ் பெண் கொலைக் குற்றச்சாட்டில் கைது

லண்டன், ஒக். 29

லண்டனில் வாழ்ந்த ஈழத் தமிழ்ப் பெண்ணொருவர் மீது லண்டன் பொலிஸார் கொலைக் குற்றச்சாட்டைச் சுமத்தி உள்ளனர். நபரொருவரை சுரங்க ரயில் பாதையில் தள்ளிவிட்டுக் கொலை செய்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு.

நினா கனகசிங்கம் (வயது34) என்ற தமிழ்ப் பெண் மீதே லண்டன் பொலிஸார் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தி உள்ளனர். கடந்த திங்கட்கிழமை குறிப்பிட்ட கொலை இடம்பெற்றதாக லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெண்களின் ஆடைகளை அணிந்திருந்த 63 வயதான ஆணொருவரையே நினா ரயிலின் முன்பாகத் தள்ளி விட்டார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

மரணித்தவரின் சடலத்தை ரயில் பாதையிலிருந்து எடுப்பதற்காக கடந்த திங்கட்கிழமை சன நெரிசலான மாலை நேரத்தில் கிங்ஸ் குரோஸ் ரயில்வே ஸ்டேசன் மற்றும் பக்காடில்லி ரயில் பாதை என்பன தற்காலிகமாக மூடப்பட்டன. (உ)

# இலங்கை ஊடான சீன ஆதிக்கத்தினை தடுக்கத் தமிழகத்தில் கடற்படைத்தளம்

## இந்திய அரசு முடிவு

புதுடில்லி, ஒக். 29

இலங்கைக்கு ஊடாக இந்தியா மீது சீனா ஆதிக்கம் செலுத்துவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை தடுக்கும் நோக்குடனும் தமிழகத்தில் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கப் புதுடில்லி முடிவு செய்துள்ளது.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டக் கரையோரத்தில் இந்தக் கடற்படைத் தளம் அமைக்கப்படவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்படை அதிகாரிகளை சந்தித்துப் பேசிய பின்னர் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தவும் ஏனைய நாடுகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் ஒரிசா பரடீப் கரையோரத்தில் மற்றொரு கடற்படைத்தளத்தை அமைக்கவும் இந்தியா திட்டமிட்டுள்ளதாக அந்தோனி குறிப்பிட்டார். (உ)

### யாழ்.பட்டினம் உட்பட சில பகுதிகளில் நாளை மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.பட்டினப் பகுதி உட்பட பல்வேறு இடங்களில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை மின்தடை இருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால் அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் உயரமுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இதே தினத்தில் அதேநேரத்தில் இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங்கப்படலாம் என்றும் மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

### நரம்பியல் விசேட நிபுணர் மயங்கி வீழ்ந்து மரணம்

கொழும்பு, ஒக்.29

கொழும்பு குடும்ப சுகாதார வித்தியா பீடத்தின் பணிப்பாளரும் விசேட நரம்பியல் நிபுணருமான டாக்டர் சரத் சந்திர விஜேமான அண்மையில் பாகியங்கல புராதன பூமியைப் பார்த்து விட்டு திரும்பி வந்த சமயம் திடீரென மயங்கி வீழ்ந்து அவ்விடத்திலேயே மரணமானார். கடந்த ஞாயிற்றுக் கிழமை (24) தனது மனைவி பிள்ளைகளுடன் பாகியங்கல புராதன விகாரையைத் தரிசித்து விட்டு திரும்பிய சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக புளக் சிங்கள பொலிஸார் கூறினர்.

## புலமைப் பரிசில் மீளாய்வுக்கு 7,000 பேர் விண்ணப்பிப்பு

கொழும்பு, ஒக்.29

இவ்வருடம் நடந்து முடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கென 7 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெருமளவு மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதால் அவற்றுக்கான விடைத்தாள்களைத் தேடியெடுக்கவும் மீள் திருத்தம் செய்யவும் நீண்ட காலம் எடுக்கும் எனவும் எவ்வாறாயினும் இயன்றவரை இப்பணி துரிதமாக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அதற்கமைய இப்பரீட்சையில் 90 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள சான்றிதழ்களின் விநியோகமும் சற்று தாமதப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டினார். (உ-5)

### சுற்றுலாப் பயணிகள் குறித்து நூலகத்தில் கலந்துரையாடல்

கடந்த 23 ஆம் திகதி யாழ்.நூலகத்தில் இடம்பெற்ற அசௌகரிய நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் சுற்றுலாப் பயணிகள் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயவிருப்பதாக பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (ஐ)

### கசூரினா கடற்கரை வீதி இன்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

கசூரினா பீச்சின் அணுகு வீதி திறப்பு விழா இன்று பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரும் கலந்து கொள்வர். வீதி அபிவிருத்தித் திணைக்களமும் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-10)

## யுத்தத்தில் கொல்லப்பட்ட 40 அரச ஊழியரின்

# 'அக்ரஹார' கொடுப்பனவு குறித்து ஜனாதிபதிக்கு செல்வம் கடிதம்



கொழும்பு, ஒக்.29

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கொல்லப்பட்ட 40 அரச ஊழியர்களின் உறவினர்கள் 'அக்ரஹார' காப்புறுதிக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கும் திகதியை நீடிக்குமாறு கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

'அக்ரஹார' காப்புறுதிக்கு அரச ஊழியர் இறந்து மூன்றுமாத காலத்துக்குள் விண்ணப்பிக்க வேண்டும். யுத்தத்தில் கொல்லப்பட்ட 40 அரச ஊழியர்களின் உறவினர்களும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்ததன் காரணமாக அந்தக் காப்புறுதிக்கொடுப்பனவுக்காக உரிய நேரத்தில் விண்ணப்பிக்க முடியாமல் போனது. அவ்வாறு விண்ணப்பிக்க முடியாமல் போனவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

'அக்ரஹார' காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியாமற்போன, யுத்தத்தில் உயிரிழந்த 40 அரச ஊழியர்களது உறவினர்களின் நிலைமையைக் கருத்தில்கொண்டும், அவர்களது எதிர்காலத்தைக் கவனத்தில்கொண்டும் விசேட கவனம் செலுத்திக் காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் கால எல்லையை நீடிக்குமாறும், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ரான்லின் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை ஏற்கனவே அனுப்பி வைத்திருந்தார். இந்த நிலையில், இது தொடர்பில் உடன் ஜனாதிபதி தலையிட்டு அந்த 40 ஊழியர்களின் உறவினர்களுக்கு 'அக்ரஹார' காப்புறுதிக் கொடுப்பனவு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (சி)

# சிவபூமி பாடசாலை மாணவரின் கலைவிருந்து இன்று கொழும்பில்

யாழ்ப்பாணம்,ஒக்.29

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவ, மாணவிகள் வழங்கும் கலைவிருந்து நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும் மனிதநேய அறநிதியத்தின் தலைவருமான மனிதநேய இந்து சிரோ இரத்தினம் வி.கயிலாசபிள்ளை கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு விவேகானந்த சபைத் தலைவரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான ஏ.ஆர். சுரேந்திரன், இந்து வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.இராமச்சந்திரன், பம்பலப்பிட்டிய இந்துக்கல்லூரி அதிபர் கலாநிதி த.முத்துக்குமாரசாமி, கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன், யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவி செல்வி சற்சொருபவதி நாதன், இலங்கை மாதர் சங்கத் தலைவி திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம், கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவி திருமதி வனஜா தவயோகராஜா, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(த-201)

## திடீர்ப் பரிசோதனையின் போது

# காலாவதியான பொருள்கள் சிக்கின திருநெல்வேலிச் சந்தையில்

யாழ்ப்பாணம்,ஒக்.29

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் நேற்று திடீர்ப் பரிசோதனைக்கு நேற்று உட்படுத்தப்பட்டன. இதன்போது காலாவதியான பெருமளவான பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லூரிபொதுச்சுகாதாரபரிசோதகர் பணிமனையுடன் இணைந்து, உணவு மருந்து பரிசோதகர், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பயிற்சி சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் நேற்றுக்காலை முதல் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது காலாவதியான பிஸ்கெட் பைக்கற்றுக்கள், ரின்னில் அடைக்கப்பட்ட உணவு வகைகள்,பால்மா வகைகள், குளிர்பானங்கள், பைக்கற்றில் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டு கடை உரிமையாளர்களின் அனுமதியுடன் எரிக்கப்பட்டன. அத்துடன் கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

இனிவரும் காலங்களில் இவ்வாறு காலாவதியான பொருள்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-15)

# மணியந் தோட்டம் கர்த்தர் ஆலய புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்



சேதமடைந்த நிலையில் காணப்படும் கர்த்தர் ஆலயம்

கொழும்புத்துறை,ஒக்.29

யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்து கூரைகளின்றிக் காணப்படும் மணியந் தோட்டம் கர்த்தர் ஆலய புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பங்குத் தந்தைதலைமையில்குழுவொன்று அமைக்கப் பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கானகத் தோலிக்க குடும்பங்கள் வாழ்ந்து வந்த மணியந்தோட்டப் பகுதியில் அமைந்திருந்த இந்த ஆலயம் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து ஆலயத்தைப் புனரமைக்கபங்குத் தந்தை அருட்திரு ஜோய் பேடினன் அடிகள் குழுவொன்றை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு உடைந்த ஆலயத்தின் உட்பகுதியில் திருப்பலி நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (204-135)

# யாழ். கைதடியில் மீண்டும் பனை ஆராய்ச்சி நிலையம்

கொழும்பு, ஒக்.29

யாழ்.கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தை 9 கோடியே 80 லட்சம் ரூபா செலவில் மீண்டும் ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது. கைதடியில் இயங்கி வந்த பனை ஆராய்ச்சி நிலையம் குடாநாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக முழுதாக நிர்மூலமானது.

பனம் பொருள் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் இந்த ஆராய்ச்சி நிலையம் மிகவும் பயனுள்ள ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றி கண்டது.

சிறு கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்தியாவால் சலுகை அடிப்படையில் இதற்காக 7கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதில் பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு 2011ஆம் ஆண்டு அரசு 2கோடியே 50 லட்சம் ரூபாவை வழங்கும்.

அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இத் தகவலைத் தெரிவித்தார். (சி)

# பல்கலைக்கழகங்களுக்குள் மோதல் ஏற்படுத்துவதற்கு அரசு தீவிர முயற்சி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.29

"நாட்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபை என்பன விற்பனை செய்யப்பட்டன. இதுபோலவே இலவசக் கல்வியையும் விற்பனை செய்ய அரசு தயாராகி வருகின்றது. இதற்காகப் பல்கலைக்கழகங்களுக்குள் மோதலை ஏற்படுத்தி அதற்கான சூழலை ஏற்படுத்த அரசு முயற்சிக்கின்றது" - இப்படி ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:

நாட்டில் பல பல்கலைக்கழகங்கள் உள்ளன. எனினும், வெளிநாட்டுத் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அரசு எத்தனிக்கின்றது. இதன் மூலம் பல்கலைக்கழகங்களில் இலவசமாகக் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன், நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களை நடத்திச் செல்ல ஒதுக்கப்படும் நிதியைக் குறைத்து அந்த நிதியில் அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்யவும் அரசு தயாராகின்றது.

இலவசக் கல்வியை மேம்படுத்த அரசிடம் உரிய வேலைத்திட்டங்களும், நோக்கங்களும் இல்லை. மாறாக பல்கலைக்கழகங்களில் பிரச்சினைகளை அரசு கிளப்பிவிடுகிறது. அதனூடாகப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது குண்டர்களைப் பயன்படுத்தி தாக்குதல்களையும் மேற்கொள்கிறது.

நாட்டிலுள்ள மக்களில் 41 சதவீதமானோர் நாள் வருமானமாக 200 ரூபாவுக்கும் குறைவாகவே பெறுகின்றனர். இந்நிலையில், வறிய குடும்பத்திலுள்ள மாணவர்களை அவர்களது பெற்றோர் எவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவார்கள்.

பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்குத் தகுந்த வசதிகள் இல்லை எனத் தெரியவருகிறது. போதிய கதிரைகள் கூட இல்லாமல் மாணவர்கள் வகுப்புக்கு வெளியில் காத்திருந்து கல்வி கற்பதையும் கேள்விப்படுகிறோம். இந்த நிலையில் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும். இவ்வாறானமிகமுக்கிய பொறுப்புகளைச் செய் யாது, தனியார் பல்கலைக்கழகங்களை அமைத்து, இலவச கல்வியையும் விற்பனைச் செய்யும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது. எனவே, இதற்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றுதிரண்டு இலவசக் கல்வியை விற்பனை செய்யும் அரசின் முயற்சியை தோற்கடிக்க வேண்டும்.

இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# ரணிலுக்கு தேசப்பற்று இருந்தால் ஒரு மரக்கன்றையாவது நடட்டும்

## ஜனாதிபதியின் 2ஆவது பதவியேற்பின் போது என்கிறார் டலஸ்



கொழும்பு, ஒக்.29

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்கால பதவியேற்பை முன்னிட்டு நாடு முழுவதும் பதினொரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசப்பற்றுள்ளவர் என்றால் அவரும் ஒரு கன்றை நடவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும், இளைஞர் விவகார அமைச்சருமான டலஸ் அழகப்பெரும கேட்டுள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி காலை 10.07மணியளவில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதியின் இரண்டாம் பதவியேற்பை முன்னிட்டு ஆறு நாள் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இதற்கு கட்சி, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை நடத்த வேண்டும்" - என்றார்.

இதே வேளை, இந்த ஊடக வியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ, "இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் பதவியேற்ற போது நாட்டில் தீவிரவாதம் நிலைகொண்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பதவியேற்ற காலத்தில் தீவிரவாதம் காணப்பட்ட போதிலும் அதனை முடிவுக்குக் கொண்டுவந்து வரலாற்றில் இடம் பிடித்தார். அதனையடுத்து கூடிய பலத்துடனும், சாதனையுடனும் இரண்டாவது பதவிக்காலத்தை மக்களின் ஆசியுடன் ஆரம்பிக்க உள்ளார்"- என்றார். (சி)

# ரிஷானாவுக்காக மன்னிப்புச்சபையும் பரிந்துரை

கொழும்பு, ஒக்.29

மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஷானா நபீக்கின் மரண தண்டனையை நிறுத்தி வைக்குமாறு சவூதி அரேபிய மன்னருக்கு சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ரிஷானா நபீக் 17 வயதாக இருக்கும்போது குழந்தையொன்றைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2005ஆம் ஆண்டு மே மாதம் சவூதி அரேபியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாவின் இறுதி முடிவுக்காக ரிஷானா நபீக்குக்கு எதிரான வழக்கு தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரிஷானா நபீக்கின் மரண தண்டனையை நிறுத்தி வைக்குமாறு சவூதி அரேபிய மன்னருக்கு சர்வதேச மன்னிப் புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகமும் இதே கோரிக்கையை மன்னரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, ரிஷானா நபீக்குக்கு கருணை காட்டுமாறு கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே சவூதி அரேபிய மன்னருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளமை தெரிந்ததே. (சி)

# பாகிஸ்தானுடனான அனைத்துப் பிரச்சினைகளையும் பேச்சு மூலம் தீர்க்கவே விரும்புகின்றது இந்தியா


## 'நியூ ஸ்டிரைட்ஸ் டைம்ஸ்' பத்திரிகைக்கு மன்மோகன்சிங் தெரிவிப்பு

கோலாலம்பூர், ஒக்.29

பாகிஸ்தானுடனான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியா விரும்புவதாகப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் 3 நாள்கள் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, பிரதமர் மன்மோகன்சிங் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரைச் சென்றடைந்தார்.

அங்கு அந் நாட்டின் பிரதமர் முகமது நஜிப் துன் அப்துல் ரசாக்கை நேற்றுமுன்தினம் அவர் சந்தித்துப் பேசினார். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து இருவரும் பேச்சு நடத்தினார்கள்.



மலேஷியா சென்ற மன்மோகன் சிங் மற்றும் அவரது பாரியாரை அந்நாட்டுப் பிரதமர் முகமது நஜிப் துன் அப்துல் ரசாக் மற்றும் அவரது பாரியார் இணைந்து வரவேற்கின்றனர்...

அப்போது, இந்தியாவுக்கும் மலேஷியாவுக்கும் இடையே 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதோடு வர்த்தகத்தை அதிகரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை அடுத்த ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் ஏற்படுத்துவது என்றும், ஜூலை முதலாம் திகதி முதல் அதைச் செயற்படுத்துவது என்றும் பேச்சுகளின்போது முடிவுசெய்யப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தகம், சேவை, முதலீடுகள் போன்றவற்றை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் வகை செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் 2015ஆம் ஆண்டுக்குள் இந்திய மதிப்பில் 67 ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கு வர்த்தகம் செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதாவது இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் வழமையை விட 2 மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுகள் முடிந்ததும், இரு தலைவர்களும் கையெழுத்திட்ட கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

சந்திப்பை முடித்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த பிரதமர் மன்மோகன் சிங், அடிப்படை கட்டுமான வசதி, உற்பத்தி ஆகிய துறைகளில் மலேஷியாவிடம் இருந்து பெருமளவில் முதலீடுகளை இந்தியா வரவேற்பதாகவும், இதே போல் இந்திய நிறுவனங்களும் மலேஷியாவில் முதலீடு செய்ய விரும்புவதாகவும் தெரிவித்தார்.

---

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் தி.மு.கவினருக்கு வீடுகளா?

# குற்றச்சாட்டை நிரூபித்தால் பதவி விலகவும் நான் தயார்

ஜெயலலிதாவுக்கு மு.க.ஸ்டாலின் சவால்

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் தி.மு.கவினருக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்வதாகக் கூறுவது பொறுப்பற்ற குற்றச்சாட்டு, ஆதாரத்துடன் நிரூபித்தால் நான் பதவி விலகத் தயார் என துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேலூர் கோட்டையின் தென்புறத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் பெரியார் பூங்கா இந்திய மதிப்பில் ரூ.85 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. சுற்று லாத்துறையின் நிதியுதவியோடு அமைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்கா திறப்பு விழா நேற்றுமுன் தினம் நடந்தது.

விழாவில் துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பூங்காவைத் திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோது, ஒரு நிருபர், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் அனைத்து வீடுகளும் தி.மு.கவினருக்குத்தான் வழங்கப்படுகிறது. என எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா குற்றம்சாட்டி இருப்பது குறித்து உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார்.

அதற்கு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இது பொறுப்பற்ற குற்றச்சாட்டு. இதை ஏதாவது ஆதாரத்துடன் நிரூபித்தால், நான் இந்தப் பதவியில் இருந்து விலகத் தயார். நிரூபிக்கவில்லை என்றால் அவர் விலகத் தயாரா?... பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் பொறுப்பற்ற முறையில் இவ்வாறு கூறியுள்ளார்.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் திரு. நா.நவதாசன் அவர்களின் தந்தை

## அமரர் தம்பிப்பிள்ளை நாகேந்திரம்

அவர்களின் மறைவையொட்டி துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

*உதவிப்பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,*
*உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,*
*வலிகிழக்கு, பிரதேச செயலகம், கோப்பாய்.* (105307)

---

# மரண அறிவித்தல்

## சின்னக்குட்டி முத்துத்தம்பி



கோப்பாய் மத்தி, காளிகோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி முத்துத்தம்பி (ஆசாரி) நேற்று (28.10.2010) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - முத்தாச்சி தம்பதியின் மகனும், தையலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அப்பாத்துரை மற்றும் குட்டித்தம்பி (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராசப்பு ஆகியோரின் சகோதரனும், தனபால சிங்கம், தியாகராஜா (ஜேர்மனி), இந்துமதி (ஜேர்மனி), காலஞ் சென்ற ஜெயராசா மற்றும் உஷாமதி (சுவிஸ்), பாலசிங்கம் (சுவிஸ்), சாந்திமதி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெயரஞ் சினி, கமலகுமாரி (ஜேர்மனி), சோதிலிங்கம் (ஜேர்மனி), பரலோகவதி (லண்டன்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), மாலினி (சுவிஸ்), இரகுராமன் ஆகியோரின் மாமனும், டினோஜன், கனோ ஜன், லக்ஸ்சிகா, வினோஷ்கிகா, கோகிலன், ஆதவன், டிலக் ஷன், அபிரா, கெனுஷன், மாதுஷன், தட்ஷனா, ஹர்னிஸ்யா, ஷஹர்ஸ்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.10.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக இளம்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
காளிகோவிலடி, கோப்பாய் மத்தி.
மு.தனபாலசிங்கம் (மகன்)
மு.கோபால் (மகன்)
சி.இரகுராமன் (மருமகன்)

## இளையதம்பி தம்பிராசா

உடுவிலைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தம்பிராசா நேற்று (28.10.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தின் அன்புக் கணவரும், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, மற்றும் இரத்தினேஸ்வரன், வேல்முருகன், காலஞ் சென்ற பாலசந்திரன் மற்றும் பாஸ்கரன் (ஜேர்மனி), ரஞ்சினிதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற உலகநாதன் மற்றும் துரைசிங்கம், மகாராசா, வள்ளியம்மை, நகுலேஸ்வரி, ராதிகா (ஜேர்மனி), வேல்முருகையா (கனடா) ஆகியோரின் மாமனாரும், தவராசா, உதயகுமாரி, கிரிசாந்தி, உஷா, அனுஷா, சுதர்ஷன், சுதா, ஜங்கரன், சர்மிலன், நந்தினி, பரீதன், றேகா, மயூரன், சுதா, மகிந்தன், திசாந்தன், கஜானி, றஜீவன், கிருபன், சரீனா, றஜீனா, நிலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (105313) தகவல் மக்கள், மருமக்கள்

---

# காவிரி நீரை தற்போது திறந்துவிட முடியாது; தமிழக அரசின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

பெங்களூரு, ஒக். 29

காவிரியிலிருந்து இப்போதைக்குத் தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளது. பெங்களூரில் நடந்த அம்மாநில அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வைத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. காவிரி நடுவர்மன்ற உத்தரவுப்படி, தமிழகத்துக்கு ஆண்டுக்கு 205டி.எம்.சி. தண்ணீரை காவிரியில் கர்நாடகம் திறந்து விடவேண்டும். காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியிலுள்ள கே.ஆர்.எஸ். அணை, வழக்கமாக ஜூலை மாதமளவில் நிரம்பிவிடும். ஆனால், இந்த ஆண்டு இம்மாதம் 17ஆம் திகதிதான் நிரம்பியது. கபனி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகள் இன்னும் முழுமையாக நிரம்பவில்லை.

இந்நிலையில், காவிரி நடுவர்மன்ற உத்தரவின்படி தமிழகத்துக்கு ஜூன் முதல் ஒக்டோபர் மாதம் வரை தர வேண்டிய 156 டி.எம்.சிக்குப் பதிலாக இதுவரை 79 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமே கர்நாடகம் திறந்து விட்டுள்ளது. மீதித் தண்ணீரை உடனடியாக விடுவிக்குமாறு, கர்நாடக அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியிருந்தது. இதற்கிடையே, கர்நாடக அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டு, அம் மாநிலத்தில் அரசியல் குழப்பம் உருவாகியது. இதனால், தமிழக அரசின் கோரிக்கை கண்டுகொள்ளப்படவில்லை.

இந்நிலையில், தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிடுவது குறித்து முதல்வர் எடியூரப்பா தலைமையில் அவரது வீட்டில் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சித்தராமையா, ம.ஜ.த. சட்டமன்றக் கட்சித் தலைவர் எச்.டி. ரேவண்ணா, மேலவை எதிர்க்கட்சித் தலைவர் மோட்டம்மா, ம.ஜ.த. தலைவர் எம்.சி.நாணய்யா, மாநிலத் தலைவர் செயலாளர் எஸ்.வி. ரங்கநாத் மற்றும் நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## வேலையாள்கள் தேவை

பிரதான வீதி, நெல்லியடியில் இயங்க இருக்கும் தனியார் பார்மசி நிறுவனத்திற்கு அனுபவமுள்ள பார்மஸிஸ்ற் (அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். (ஆண், பெண் இருபாலாரும்)

Contact
T.P.No.: 0212264582, 077 843 5999 (105311)

---

## சாவகச்சேரி நகரசபையின் டெங்கு ஒழிப்பு அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்பு பெருகக்கூடிய வகையில் காணப்படும் பற்றைக் காணிகளை உடனடியாக துப்பரவு செய்யுமாறு அவற்றின் உரிமையாளரும், பராமரிப்பாளரும் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

டெங்கு ஒழிப்புச் செயலணியின் திட்டத்துக்கு அமைவாக இவ்வறிவித்தல் வெளியான தினத்திலிருந்து 14 நாள்களுக்குள் துப்பரவு செய்யப்படாத காணிகள் நகரசபையால் துப்பரவுசெய்யப்பட்டு, அதற்குரிய அனைத்து செலவினங்களையும் ஆதன வரியுடன் சேர்த்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரியப்படுத்துவதுடன் டெங்கு ஒழிப்புத் திட்டத்துக்கு பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி. 28.10.2010

செல்வி வி.சிவக்கொழுந்து
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி (சி/572236)

---

!!யாழ் மண்ணில் முதன் முறையாக!!

CERTIFICATE IN ETHICAL HACKING AND IT SECURITY

எந்தக் கணனிகளையும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரலாம்...

- Introduction to Cyber crimes
- Introduction to Ethical Hacking
- Introduction to Internet and e mail
- Windows Management and Configurations.
- Windows Hacking and Cracking
  - Hacking Windows XP Administrator passwords
  - Hacking Windows XP System password
  - Recover Forgot E mail login id & passwords
  - Remote spy Hacking & Key logs capturing.
  - Unlocking & Cracking the Application sofwares
  - Google Hack, Proxy servers & Resource hacker
  - 25 Important Secrets & Tricks About Windows XP
  - Hack Zip, RAR, pdf, doc ... Files' Passwords
  - Portable operating system & softwares & More...
- Safety Moves Against Hackers
  - How to safe your pc from hackers
  - How to safe System Administrator Acc
  - How to safe E mail Acc from spy and hackers
  - How to safe USB Flash drive from Virus
  - Antivirus Guard and spy remover
  - How to identify anonymous websites & More...

Duration One Month

..அதிகரித்து வரும் சைபர் குற்றங்களுக்கு எதிரான செயற்திட்டம்.. இணைய திருட்டுக்களிடமிருந்து உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்

Online classes

Free Hand out Materials & Tools CDs

மறந்த விண்டோஸ் Administrator பாஸ்வேட்கள்&ஈமெயில் Login Id மற்றும் பாஸ்வேட்களை கண்டுபிடித்தல். உங்கள் கணனியை பயன்படுத்துபவர்களை இணையமூடாக முகாமை செய்தல்(Spy), மென்பொருட்களை Unlock செய்தல், மென்பொருள் கோப்புக்களை Unlock செய்தல், Proxy, Google hacks, USB மென்பொருட்கள், 25 விண்டோஸ் XP தந்திரோபாயங்கள் மற்றும் வைரஸ், Spy போன்ற இணைய திருட்டுகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பல விடயங்களை உள்ளடக்கிய பாடத்திட்டம் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்......

விபரங்களுக்கு!!!
UNI - ICT Campus
No - 83, Palaly Road, Kantharmadam
T.P No:0777-110862

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எத்தனை காலம் தான் ஏமாற்றலாம் சர்வதேச அரங்குகளை...?

உலகின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள எல்லா நாடுகளிலும் வாழும் சகல பிரசைகளுக்கும், வாழ்வதற்கான உரிமை மட்டுமன்றி, சிறந்த வாழ்வுக்கான உரிமையும் வழங்கப்பட வேண்டும்.நான் குறிப்பிடும் சிறந்த வாழ்வு என்பது உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் எல்லாப் பிரசைகளும் கல்வி,சுகாதாரம், சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் திருப்திகரமான வசதிகளைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 65 ஆவது வருடாந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் தொடரப்படுவதோடு அவற்றின் உற்பத்திப் பொருள்களுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சந்தைப் படுத்தல் வசதியும் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தி உள்ளனர்.

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப பிரச்சினைகளின் தன்மைகள் மாற்றம் கண்டு வருகின்றன. பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகளைக் காண்பதில் புதிய இலக்குகளைக் கடைப்பிடிக்கும் தன்மை,பாங்கு வளர்ந்துள்ளது -

ஆகையால், காலத்துக்கு உகந்த, பொருத்தமான புதிய பெறுமானங்களை அறிமுகப்படுத்து வதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டும் என்றும், அங்கு அமைச்சர் பீரிஸ் பெரும் அறிவுரை நிகழ்த்தியுள்ளார். 'சபாஷ்!'

கடந்த சில வருடங்களில், பூமிப்பந்தின் நாடுகளில் உண்டாகும் பிரச்சினைகளின் தன்மைகள் மிகவும் மாற்றம் அடைந்து விட்டன.அத்தோடு பிரச்சினைகளுக்கு இறுதியும் அந்தமுமான தீர்வுகளைக் காண்பதில் புதிய அணுகுமுறைகளைக் கையாளும் தன்மைகளும் கைக்கொள்ளப்படுகின்றன - என்றும் பேராசிரியர் பீரிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் விழாவில் சிலாகித்துப் பேசியுள்ளார்.

நியூயோர்க்கில் நின்று பெரும் அரசியல் வேதாந்தம் பேசிய பேராசிரியர் பீரிஸ், தமது சொந்த நாட்டில், தாம் அங்கம் வகிக்கும் அரசாங்கம் இலங்கையின் மிக முக்கிய விவகாரமான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உகந்த, நியாயமான தீர்வு ஒன்றைக் காண்ப தனை இழுத்தடித்துக் காலம் கடத்துவதை மிக வசதியாக மறந்துவிட்டார். இல்லை, இல்லை, மறைத்துவிட்டார் என்பதே உண்மை.

தமது சொந்த நாட்டில் மிக முக்கியமான, சமாதான சகவாழ்வுக்கும், இன ஒற்றுமைக்கும் வகை செய்யக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, இதய சுத்தியுடன் உழைப்பதற்கு, செயற்படுவதற்குப் பதிலாக, வேண்டாத காரணங்களையும் குதர்க்க வாதங்களையும் முன்வைத்து இந்த நாட்டின் தமிழர்களையும் இந்தியா உட்பட்ட உலக நாடுகளையும் ஏய்க்காட்டி வரும், போக்குக் காட்டி வரும் இப்போதைய அரசின் திருகுதாளங்கள், உலக நாடுகளுக்குத் தெரியாது என்ற நினைப்புடன் தனது சித்தாந்தங்களைப் பீரிஸ் அவிழ்த்து விட்டிருக்கிறார்.

சந்திரிகாவின் பதவிக் காலத்தில் மூத்த அமைச்சராக விளங்கியதோடு மட்டு மன்றி, ரணிலின் பதவிக் காலத்தில், அரசுக்கும் விடுலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பிரதான பங்குவகித்தவர் பேராசிரியர் பீரிஸ். இப்போது மீண்டும் மஹிந்த அரசில் வெளிவிவகார அமைச்சராகப் முக்கிய பதவி வகிக்கிறார் அவர்.

ஐக்கிய நாடுகள் சபையை, சர்வதேசங்களின் புதிய போக்குகளுக்கு ஏற்ற புதிய பெறுமானங்கள் நோக்கிச் செல்லுமாறு புத்திமதி கூறும் அவருக்கு, தாம் அங்கம் வகிக்கும் அரசுக்கு, ஆட்சித் தலைமைக்குச் சிபார்சு செய்து உகந்த தீர்வைக் கொண்டுவரும் திராணி இல்லை. தமது பதவி கருதி ஆட்சித் தலைவருக்குப் பக்கவாத்தியம் வாசித்து தமது அரசியல் அந்தஸ்தை அவர் தக்க வைத்துக் கொண்டிருப்பது நாடு அறிந்த உண்மை.

உலக நாடுகள் எல்லாவற்றிலும் வாழும் பிரசைகளுக்குச் சிறந்த வாழ்வுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று'ஞானமொழி' பேசும் அவர், தாம் சார்ந்துள்ள அரசின் உத்தியை தலைமேற் கொண்டு வெறும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்ற வாய்ப்பாட்டை மனனம் செய்து கொண்டிருக்கிறார்.

இந்த அரசியல் நாடகத்தைத்தான் அவர் புதிய இலக்கு என்று ஐ.நா.விழாவில் விளாசினார் என்றே கருதலாம்.

'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி கண்ணே' என்ற அமைச்சர் பீரிஸினதும் அவரது அரசினதும் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வைக் காண்பதனை ஒளித்து வைக்கும் தந்திரத்தை, உலக அரசியல் அரங்காளர்கள் புரிந்து கொண்டிருப்பர். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த உலகத்தை, சர்வதேச அரங்கத்தை?.

# புலிகளின் விமானப் பொறுப்பாளரான அச்சுதனுக்குச் சர்வதேச பிடிவிறாந்து

கொழும்பு, ஒக். 29

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட அச்சுதன் எனப்படும் பிருந்தவன் சிவராசா என்பவருக்கு சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நபரை கைது செய்வதற்காக சர்வதேசக் காவல்துறையினரால் இந்தப் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் கடவுச் சீட்டை உடைய அச்சுதன் பிரான்ஸில் விமானப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 58 ஆவது படையணியினரால் விஸ்வமடு பிரதேசத்தில் மீட்கப்பட்ட இரகசிய ஆவணங்களின் மூலம் அச்சுதன் தொடர்பான தகவல்கள் கிடைக் கப் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள், பங்களாதேஷ் நிறுவனமொன்றிடம் விமானங்களை கொள்வனவு செய்து இந்தோனேஷியாவிற்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. - என்று அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## முதல் தடவையாக ஸ்ரேலுக்கு 300 இலங்கைத் தொழிலாளர்கள்

இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சியின் பயனாக முதல் தடவையாக இஸ்ரேலில் பணிபுரிவதற்காக இலங்கைத் தொழிலாளர் குழு ஒன்று கடந்த 27ஆம் திகதி இஸ்ரேலுக்குப் பயனமானதாக இலங்கையின்வெளிநாட்டு வேலை வாய்ப்புச்சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் எட்டப்பட்டுள்ள இணக்கத்துக்கு அமையவே இக்குழுவினர் இஸ்ரேலுக்குப் பயணமானதாகவும் விவசாயத் துறை சார்ந்த வேலை வாய்ப்புக்களைப் பெறவுள்ள இவர்களுக்கு ஆறுமாத காலத்துக்கு மட்டுமே விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு அந்நாட்டில் இஸ்ரேலிய மொழி, இஸ்ரேலிய கலாசாரம், மக்களின் வாழ்க்கை முறை, அந்நாட்டின் தொழில்நுட்பம், சூழல் மற்றும் சட்ட திட்டங்கள் பற்றிய பயிற்சிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்ப கட்ட நகர்வொன்றாகவே இது நடமுறைப்படுத்தப்படுவதாகவும் இதன் சாதகமான பெறுபேறுகளையடுத்து மேலும் பணியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் சேவைகள் பணியகத்தின் தலைவரான கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். (த-22)

## செயலமர்வு

கிளிநொச்சி,ஒக்.29

கிளிநொச்சிக் கல்வி வலயப்பாடசாலைகளில் கடமையாற்றும் வணிகத் துறை சார்ந்த ஆசிரியர்களுக்கான மூலதனச்சந்தை தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வு இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு உத்தியோகத்தர்களால் நடத்தப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார். (201 - 405)

## சுன்னாகத்தில் ஒடியற்கூழ் விற்பனை நிலையத்தை நிறுவுக

### பனை அபிவிருத்திச் சபையிடம் கோரிக்கை

கைதடி,ஒக்.29

சுன்னாகம் பிரதேசத்தில் ஒடியல் கூழ்விற்பனைசெய்யும்நிலையம்ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பிரதேசப் பொதுமக்களால் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரிடம் நேரடியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் தற்போது வர்த்தக நிலையங்கள் பல திறக்கப் பட்டுள்ளதுடன் மக்களின் நடமாட்டம் பெருமளவில் தினமும் காணப்படுவதாகவும் அத்துடன் தென்பகுதி உல்லாசப் பயணிகளின் வருகையும் நிறைந்துள்ளதனால் அங்கு ஒடியற்கூழ் வியாபாரம் மிக அமோகமாக நடக்க வாய்ப்புள்ளதாகவும் பொது மக்களால் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை ஏற்றுக்கொண்ட பனை அபிவிருத்திச் சபைத் தலைவரும் இது சம்பந்தமாக தாம் ஆராய்ந்து ஒடியற் கூழ் விற்பனை நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த - 288)

## ஊனமுற்றோருக்கு உபகரணங்கள்

நாவற்குழி,ஒக்.29

இதம் உள சமூக நிறுவனம் யாழ். மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் இணைந்து மிக அண்மையில் 30 ஊனமுற்றோருக்கு உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

சக்கரநாற்காலிகள், ஊன்று கோல்கள், நடப்பதற்கு துணை செய்யும் சாதனங்கள் என்பவையே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

வன்செயல்கள், பிறப்பு, நோய், விபத்து போன்ற காரணங்களால் ஊனமுற்றவர்கள் இந்த உபகரணங்களைப் பெற்றுள்ளனர்.

இதன்மூலம் அவர்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை ஓரளவு மீளமைக்க முடிந்துள்ளது. (த - 121)

## மெதடிஸ்த திருச்சபையின் புதிய ஆயர் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

வடமராட்சி, ஒக். 29

யுத்தத்திற்குப் பின்னரான புனரமைப்புப் பணிகளை ஆராயும் பொருட்டு இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புதிய ஆயர் பேரருட் திரு ஏ. டபிள்யூ. ஜெபநேசன் அடிகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரும் ஆயர் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வார்.

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவருக்கு இன்று வெள்ளிக்கிழமை கல்லூரிச் சமூகம் வரவேற்புபசாரம் அளிக்கவுள்ளது.

நாளை 30 ஆம் திகதி சனிக்கிழமை மெதடிஸ்த திருச்சபையின் யாழ். சேகரத்தின் குருமனையை வண்ணார்பண்ணை தேவாலய வளவில் பிரதிஷ்டை செய்து கொள்வதோடு அங்கு அளிக்கப்படும் வரவேற்பு நிகழ்விலும் கலந்து கொள்வார். இந்நிகழ்வு சேகர முகாமைக் குரு அருட்திரு எஸ். எஸ். ஞானராசா தலைமையில் இடம்பெறும்.

நாளை மறுதினம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தூர் திருப்பணித்தளத்தில் சேகர முகாமைக்குரு அருட்திரு சி. கே.தங்கராசா தலைமையில் இடம்பெறும் வரவேற்பில் கலந்து கொள்வதுடன் அன்று பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் திடப்படுத்தல் வழிபாட்டையும் மற்றும் சிறப்பு வழிபாட்டையும் நடத்துவார்.

அன்றையதினம் பி.ப 4 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர குரு முதல்வர் அருட்திரு என். அருள்நாதன் தலைமையில் பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்திலும் அவருக்கு வரவேற்பளிக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து முதலாம், 2ஆம் திகதிகளில் வன்னிப் பிரதேசத் தை இவர் தரிசிப்பார். (த-236)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 13 | : | 30.10.2010 சனிக்கிழமை |
| திதி: | : | அட்டமி பி.இ. 02.33 வரை |
| நட்சத்திரம் | : | பூசம் மு.இ. 10.32 வரை |
| சுபநேரம் | : | 03.03-04.33 வரை |
| ராகுகாலம் | : | 09.03-10.33 வரை |

## சுற்றுலாப் பயணிகள் தங்கி நிற்கும் பொது இடங்களின் விவரம் சேகரிப்பு

நாவற்குழி,ஒக்.29

தென்பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளாக யாழ்ப்பாணம் வருபவர்களைத் தங்க வைப்பதற்கான பொது இடங்களின் விவரங்களை யாழ். மாவட்டச் செயலகம் திரட்டி வருகின்றது.

பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மூலமாக இத் தகவல்களைத் திரட்டி அரசாங்க அதிபருக்கு அறிக்கையிடுகின்றனர்.

தென்பகுதியிலிருந்து மிகப் பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதனால் அவர்களுக்குப் போதுமான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்க முடியாதுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கிராம அலுவலர் பிரிவுகளில் சுற்றுலாப் பயணிகள் தங்கக்கூடிய பொது இடங்கள் காணப்படுமிடத்து அவற்றுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த - 121)

## சமயமும் வாழ்க்கையும்

ஞானக்கதிர்

மனிதன் அறிவு, ஆற்றல் போன்றவற்றுடன் மட்டுமல்லாமல், ஆன்மீக உணர்வுடனும் வாழ்கின்றான். இந்துமகன் ஒவ்வொருவனுடைய வாழ்க்கையிலும் சமயத்தின் செல்வாக்கு மேலோங்கி இருப்பதைக் காணலாம். சமய உணர்வு இல்லாத வாழ்க்கை உப்பிலாப்பண்டம் போன்றதாகும். மனிதனுடைய மனத்தைப் பண்படுத்தி, இறையுணர்வை ஊட்டி அவனைச் செம்மையாக வாழ வைப்பது சமயமே. அமைதி, ஆனந்தம், அமரத்துவம் முதலியவற்றைப் பெறுவதற்கு அவனுடைய ஆன்மீக உணர்வே உதவுகின்றது. மனதைக் கட்டுப்படுத்தவும் புலன்களை நெறிப்படுத்தவும் சமயம் வழிகாட்டுகின்றது.

சமய உணர்வும், சமய எண்ணங்களும் காலம் காலமாக மனிதனைப் பற்றியே வருகின்றன. ஆனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட வாழ்நாளோ மிகக் குறுகியதாகும். இந்தச் சிறிய காலப்பகுதிக்குள் சமய அறிவையும், அதன் தாற்பரியங்களையும் அவனால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாது. என்றாலும் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகள் சமயத்தின் அடிப்படையிலும், நம்பிக்கையிலும் நடைபெற்று வருகின்றன.

இந்துசமயம், மக்களை ஆன்மீகப் பாதைக்கு அழைத்துச் செல்கின்ற, அப்பாதையிலே நடப்பவர்களை, தொடர்ந்தும் வழிநடத்துகின்ற ஒரு மதம் மட்டுமே என்று நினைப்பது தவறு. உலகியல் வாழ்க்கைக்கும், எப்படிச் சிறப்பாக வாழலாம் என்பதற்கும் அது வழிகாட்டி உதவுகின்றது. (நன்றி)

## கந்தபுராணப் படிப்பு

வடமராட்சி, ஒக். 29

கரவெட்டி, தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் படிப்புப் பூர்த்தியும் நடைபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் பூசையைத் தொடர்ந்து, 7.30 மணிக்கு வள்ளியம்மன் திருமணப் படனம் ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப் பெருமான் வீதி வலம் வருவார்.

(204-236)

## EXPO PAVILION VACANCY

### உதவி முகாமையாளர்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மேற்படி விருந்தினர் விடுதிக்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணணி அறிவும், கணக்கியல் அறிவும் உள்ளவர்களாகவும் முன் அனுபவம் மேலதிக தகைமையாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
EXPO PAVILION
40, KANDY ROAD,
CHUNDIKULI, JAFFNA.

(105238)

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 68
திகதி - 27.10.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: G — அதிர்ஷ்ட இலக்கம்: 05 — வெற்றி இலக்கம்: 8 5 5 9 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G | 05 | 8 | 5 | 5 | 9 | 4 | ரூ. 20,513,760.00 | - |
| 1 பரிசு | | 05 | 8 | 5 | 5 | 9 | 4 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 8 | 5 | 5 | 9 | 4 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 5 | 5 | 9 | 4 | ரூ. 10,000.00 | 30 |
| 4 பரிசு | | | | | 5 | 9 | 4 | ரூ. 1,000.00 | 277 |
| 5 பரிசு | | | | | | 9 | 4 | ரூ. 50.00 | 2721 |
| 6 பரிசு | | | | | | | 4 | ரூ. 20.00 | 26226 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | |
| 7 பரிசு | | | 8 | 5 | 5 | 9 | | ரூ. 1,000.00 | 25 |
| 8 பரிசு | | | 8 | 5 | 5 | | | ரூ. 100.00 | 273 |
| 9 பரிசு | | | 8 | 5 | | | | ரூ. 50.00 | 2749 |
| 10 பரிசு | G | | | | | | | ரூ. 20.00 | 10999 |
| 11 பரிசு | G | 05 | | | | | | ரூ. 100.00 | 1223 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,069,600.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 20,923,881.00

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வையாளர், பிரதேச சபை, சுன்னாகம்)



டச்சு வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகேந்திரம் நேற்றுமுன்தினம் (27.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், தேவநாயகியின் அன்புக் கணவரும், நவநீதன் (Engineer, SLT யாழ்ப்பாணம்), நவதாசன் (D.A. பிரதேச செயலகம், கோப்பாய்), நவரூபன் (Engineer, London) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அருந்ததி, தயாழினி, துஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சண்முகநாதன், பஞ்சநாதன், நவீனச்சந்திரன், இராசேந்திரன், கஜநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி பிலிப்பானந்தம், மகாலக்சுமி, மதிவதனி, இராசலட்சுமி, தவாம்பிகை, மனோரஞ்சினி மற்றும் விஜயராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷாயினி, தக்ஷாயினி, ஷஜீவன், அக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுவீதி, உடுவில், சுன்னாகம். (105303)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## இடி மின்னலால் ஆலய கோபுரம் சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 29

புங்குடுதீவு - 3, சிவன் ஆலயம் நேற்று முன்தினம் இடி மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகியது.

ஆலயத்தின் ராஜ கோபுரத்தில் உள்ள கலசங்கள் தூக்கி வீசப்பட்டதுடன், ஆலய விக்கிரகங்களும், ஓடுகளும் பலத்த சேதத்திற்கு உள்ளாகின. (ஐ-311)

## சிறுகைத்தொழிலாளர் சங்க நிகழ்வு கொழும்பில்

யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கை சிறு கைத்தொழிலாளர் சம்மேளனம் தனது 47ஆவது நிறைவு தினத்தை ஒட்டிய நிகழ்வை எதிர்வரும் 3ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு தேசிய சிறுகைத்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அலோய் ஜெயவர்த்தன தலைமையில் கொழும்பு பத்திரமுல்லையில் நடத்தவுள்ளது.

அன்றைய தினத்தில் இலங்கையின் சிறந்த தேசிய கைத்தொழிலாளர்களுக்கான விருதினை அண்ணாதொழிற்சாலை உரிமையாளர் எஸ்.பி. நடராஜாவுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறு கைத்தொழிலானது யாழ்ப்பாணத்திலும் தனது முயற்சியினை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது என தேசிய சிறுகைத்தொழிலாளர் சம்மேளத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-311-313)

## முகாமைத்துவப்பட்ட கற்கைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப்பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்லைக்கழகத்தின் ஈ.எஸ்.பி.எம். சான்றிதழ் கற்கைநெறியினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தெரிவுப்பரீட்சை மூலம் இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் விண்ணப்பப்படிவங்களை அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமெனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## புலமையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

பண்டத்தரிப்பு சூரியன் அக்கடமியின் ஆசிரியர் தினமும், புலமையாளர் கௌரவிப்பும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்வி நிறுவனமாணவன் அ. ஸ்ரீபன் இதயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(ஐ-9)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் MAX International Company க்கு பணியாள் தேவை. (Manager, A.S.M. Distributor) O/L சாதாரண ஆங்கில அறிவு அவசியம். பயிற்சியின்போது தங்குமிட வசதி இலவசம். 10,000+35,000 வரை பெற முடியும். வெற்றிடம் 15 பேர் மட்டும்.

தொடர்பு:-
077 5566224, 0214922177

## தவறிவிட்டது

V.சிவஞானசீலன் என்பவரது காப்புறுதி அனுமதிப் பத்திரம் மற்றும் S. தவராஜா என்பவரது HNB அடைவுப்பத்திரம், மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் (500 -7428) என்பன யாழ். நகருக்குள் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 316, ஆலடி சந்தி பலாலிறோட் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே. 0783260525




சிவமயம்

சிவபதமடைந்த
## உயர்திரு கனகசபாபதி அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி



அன்புள்ள அப்பா, ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே இன்பமே ஆக
சிவபதமடைந்த ஆலவாய் செல்வமே!
சரணடு போனது யுகமொன்று ஆனதாய்
உம் நினைவொன்று தானே
எம்மை நிழலாய் தொடருது!
வணணத்தில் வடிவத்தில் வையகத்தில் இல்லை
எம் எண்ணத்தில் எழுத்தில் என்றென்றும் அவருண்டு
உயர்கிரி கனகசபைக்கு ஓர் அரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம் !!!

உம் நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், உடன்பிறந்தோர்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள் நண்பர்கள்.

Contacts
shobankanax@pacific.net.sg
kuhakumaran@hotmail.com
shanthy18@gmail.com
Shoban- (Singapore) 0065 98508748
Shanthy Mohan-(Newzeland) 0064 421 00491

## ஓராண்டு (நீங்காத) நினைவில்



தோற்றம் 29★ 01 ★1960 — மறைவு 09★ 11 ★2009

### அனந்தசயனன் ஆனந்தராசா (செல்லக்குட்டி)

திதி:ஸப்தமி

பாயினில் படுக்காமல்
நோயினில் வாடாமல்
தீயுடன் சங்கமித்த
அன்பு அப்பாவே-உமை
எப்பிறப்பில் காண்போமோ.

வாகையடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

துயருடன்:
மனைவி, பிள்ளைகள்.

(சி/572202)

## ஆங்கிலத்தில் பேச விரும்புகிறீர்களா

ஆங்கிலம் பேசுவது மிக இலகுவானது

பேசுவதென்பது இலக்கண ரீதியாக வசனங்களை உருவாக்குவதோ அல்லது தமிழ் வசனங்களை ஆங்கிலத்தில் மொழி மாற்றுவதோ இல்லை

இலக்கண தேர்ச்சிபெற்றவர்கள் மட்டுமல்ல, ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் தமிழைப்பேன்று சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கலாம்

எழுத்துப்பயிற்சியோ. மனப்பாடமோ இன்றி கணினி. CD உதவியின்றி ஆசிரியரால் முழுமையாக வழிநடத்தப்படும்

சனி, ஞாயிறு 3 மாத கற்கையின் புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்

பிரிவுகள் : காலை 8–9. காலை 10–11. மாலை 1–2. மாலை 2–3. மாலை 3–4 மாலை 4–5. மாலை 5–6 (ஏதாவதொரு பிரிவில் பயிற்சிபெறலாம்)

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர்கள், உயர்கல்வி மாணவர்கள் பயிற்சியில் சேரலாம்

MyWay English — 182, Stanley Rd Jaffna — 077 33 63 456

# வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளருக்கு உதவி வழங்கும் கூட்டம் யாழ்.செயலகத்தில்

## ஐ.நா, அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துகொள்ளும்

யாழ்ப்பாணம், ஒக். 29

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள கடற்றொழில் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குவது தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று அடுத்த மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் ஐ.நா. முகவர் நிறுவனங்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உயர் மட்ட அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ள நிறுவனங்களின் பெயர் விவரப்பட்டியல் ஏற்கனவே கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரால் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட 2,321 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்களில் 1,406 குடும்பங்களுக்கு உதவி வழங்குவது தொடர்பாகவே இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

அங்கு மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 915 கடற்றொழில் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த 25 ஆம் திகதியும் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அன்று இடம்பெற்ற மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தின் போதே இந்த விடயமும் ஆராயப்பட்டது. அதன் விளைவாக 915 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கு வதற்கான அனுமதியை ஜனாதி பதி விசேட செயலணி வழங்கியுள்ளது.

மாவட்ட செயலகத்தில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்துக்கு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமை வகிப்பார். (த-14)

# பற்றைக் காணிக் கிணற்றிலிருந்து துர்நாற்றம்; வீதியால் பயணிக்கும் மக்கள் அசௌகரியம்



நவாலி, ஒக்.29

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஞானவைரவர் ஆலய வீதிக்கருகிலுள்ள பற்றைக் காணிக்குள் அமைந்துள்ள கிணற்றிலிருந்து கடந்த சில நாள்களாக துர்நாற்றம் வீசுவதாக அவ்வீதியால் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

இதனால் மேற்படி வீதியால் பிரயாணம் செய்வோர், அச்சுற்றாடலிலுள்ள குடியிருப்பாளர்கள் ஆகியோர் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் வேளையில் மேற்படி விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அத்துடன் பராமரிப்பின்றி இருக்கும் காணிகளை அரசுடைமையாக்கி திணைக்களங்களின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

(201-100)

# குடாநாட்டின் பல பகுதிகளிலும் வேகமாகப் பரவும் பாதீனியம்

வலி.வடக்கு,ஒக்.29

குடாநாட்டின் பாதீனியச் செடியின் பரம்பல் அதிகரித்து வருகின்றது. எனினும் அதனை அழிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் சமூக மட்டத்தில் பாதிப்பை எதிர்நோக்கும் சந்தர்ப்பம் உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.



குறிப்பாக வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள இந்த பாதீனியத்தின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தப் பாதீனியப்பயிரானது ஏனைய பயிர்களின் உற்பத்தியைக் குறைப்பதாகவும் நிலத்தின் பசளையை அகத்துறிஞ்சுவதாகவும் காணப்படுகின்றது.

பொது இடங்கள், பாடசாலை வளாகங்கள், மைதானங்கள், திணைக்கள வளாகங்கள், விவசாய நிலங்கள், வீடுகள் என பல்வேறு இடங்களிலும் பாதீனியத்தின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதேவேளை பாதீனியச் செடி அழிக்கப்பட வேண்டும் என அரசால் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இருந்தபோதும் இதனை அழிப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் உரிய அதிகாரிகள் முன்னெடுக்காது அசமந்தமான நிலையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(201-86)

# காட்டுப் பன்றிகளின் அட்டகாசம்; வலிகாமம் பகுதியில் பயிர்கள் நாசம்

அச்சுவேலி, ஒக். 29

வலிகாமம் பகுதியில் காட்டுப் பன்றிகளின் கட்டுமீறிய அட்டகாசத்தினால் விவசாயிகளுக்கு பெருமளவில் பாதிப்பு, பொருளாதார நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பன்றிகளைக் கட்டுப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலி.வடக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்தின் பற்றைக் காடுகளில் பெருமளவில் காட்டுப்பன்றிகள் கூட்டம் கூட்டமாக வசித்து வருகின்றன. இந்தப் பன்றிக் கூட்டம் இரவு வேளையில் விவசாயிகளின் பயிர்ச்செய்கை நிலங்களுக்கு படையெடுத்துச் சென்று மரவள்ளி, பீற்றூட், வாழை, வெங்காயம், இராசவள்ளி, கருணைக் கிழங்கு போன்ற சகல பயிர் வகைகளையும் பெருமளவில் சேதமாக்கி விடுகின்றன.

அத்துடன் கூட்டமாக வரும் பன்றிகள் எதிரேவரும் விவசாயிகளையும் இடித்துத் தள்ளி காயப்படுத்திவிட்டுச் செல்கின்றன. பன்றிகளை கட்டுப்படுத்துவதனால் அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அல்லது சுட்டுக் கொல்லப்பட வேண்டும்.

மேலும் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையில் உள்ள விவசாய நிலங்களில் பன்றித் தொல்லை ஏற்படுவதால் வெடி கொளுத்தி துரத்தவும் முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பயிர் அழிவுகள் ஏற்படுவதால் பொருளாதார ரீதியில் பெரும் நஷ்டப்படுத்துவது தொடர்பாக விவசாய சம்மேளனங்கள் ஊடாக முறையீடுகள் செய்தபோதிலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஈவினை, புன்னாலைக்கட்டுவன், ஏழாலை அளவெட்டி, மல்லாகம்,குட்டியாப்புலம், பத்தமேனி, அச்சுவேலி மேற்கு, இடைக் காடு, வளளாய் உள்ளிட்ட கிராமங்கள் வலி.வடக்கு அதிஉயர் பாது காப்பு வலயப் பிரதேசத்துக்கு அருகில் இருப்பதால் இந்தப் பகுதியில் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களே பன்றிகளால் சேதமாக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

(201-11)

# தெல்லிப்பழை துர்க்கையம்மன் வளாகத்தில் சைக்கிள் திருட்டுக்கள்

வலிவடக்கு, ஒக். 23

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயச் சுற்றாடலில் சைக்கிள்கள் களவு போகும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

கடந்த காலங்களில் ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் ஆலய முகப்பு வெளியிலும் தெற்குப் புறவெளியிலும் சைக்கிள்களை விட்டுச் செல்வது வழமையாக இடம்பெற்றது.

கடந்த இரண்டு வார காலத்தில் இவ்வாறு விட்டுச் செல்லப்பட்ட நான்கு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கௌரிகாப்பு விரதம் அனுஷ்டிக்கப்படும் இவ்வேளையில் பூசைகளில் அதிகமான அடியார்கள் தினமும் மேற்படி ஆலய பூசைக்குக் கலந்து கொள்வதை சாதகமாகப் பயன்படுத்தி சைக்கிள்களை திருடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(201 - 86)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு நான்கு புதிய வைத்தியர்கள்

வடமராட்சி, ஒக் 29

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் வைத்திய அதிகாரிகளின் பற்றாக் குறையைப் போக்குமுகமாக நான்கு புதிய வைத்திய அதிகாரிகள் சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மருந்தாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நான்கு புதிய வைத்தியர்களும் மருத்துவப் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்து உள்ளகப் பயிற்சியைப் பெற்ற பின்னர் இந்த வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (204 - 236)

# பத்திரிகையியலுக்கான பயிற்சி நெறி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

சுன்னாகம், ஒக். 29

யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தால் பத்திரிகைத்துறை சார்ந்தோருக்கான பத்திரிகையிய லுக்கான அடிப்படை பயிற்சிநெறியொன்று நடத்தப்படவுள்ளது. 30 மணித்தியாலங்கள் கொண்ட மேற்படி குறுங்கால பயிற்சி நெறி இலவசமாக நடத்தப்படவுள்ளது. பத்திரிகைகளின் பிரதேச மற்றும் அலுவலக செய்தியாளர்கள், சிறு சஞ்சிகை ஆசிரியர்கள், பருவகாலப் பத்திரிகைகளில் பணிபுரிவோர், நிறுவனங்களின் தொடர்பாடல் மற்றும் ஊடக உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் ஊடகக் கல்வி ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

விரிவுரைகளையும், செயல்முறைப் பயிற்சிகளையும் கொண்ட இக்குறுங்கால பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகவும் - இங்கிலாந்திலிருந்து வருகை தரும் முப்பது வருடகால பத்திரிகை அனுபவத்தையுடைய திருமதி பியானோ பார்டன் பிரதான வளவாளராகப் பணியாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோரை அடுத்த மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய பயிற்சி இணைப்பாளர் தே.தேவானந்த் கேட்டுள்ளார். (201-38-236)

# வடமாகாண அதிபர்களுக்கு அடுத்த வருடம் இடமாற்றம்

அச்சுவேலி, ஒக். 29

வடக்கு மாகாண பாடசாலைகளின் அதிபர்கள் அடுத்த வருடத் தொடக்கத்தில் பாடசாலைகளுக்கு இடையே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இது தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றை அடுத்த வருடத்தில் இருந்து நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த வேளையில் அதிபர் சேவையில் உள்ளவர்களையும் குறிப்பிட்ட சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு இடமாற்றம் செய்வது அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக அதிபர் சேவையில் உள்ளவர்கள் மத்தியில் திட்டமிட்ட இடமாற்ற வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. அத்துடன் பாடசாலையின் தர நிலைக்கு ஏற்புடைய வகையில் அதிபர்கள் நியமனம் செய்யப்படாமல் இருப்பதும், பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில் முரண்பாடுகளையும் எதிர்பாராத சிக்கல்களையும் ஏற்படுத்தி இருப்பதும் கல்விச் சமூகத்தால் மாகாணக் கல்வி நிர்வாகத்துக்கும் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை தற்போதைய பாடசாலைக் கட்டமைப்பில் ஆகக் கூடியதாக கொள்ளப்படும் வகை ஏ.பி.பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு குறைந்த நிலையில் உள்ளவர்கள் அதிபர்களாக இருக்கும். அதேவேளையில் இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த பட்டதாரிகள் தரம் II தரம் I சீ பாடசாலைகளில் அதிபர்களாக இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி அதிபர்களின் இடமாற்றம் தொடர்பாக வடக்கு கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

''அதிபர்கள் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமைப் பொறுப்பில் இருப்பதால் நிதி நிலை தொடர்பான முறையீடுகள் தொடர்ச்சியாக வந்த வண்ணம் உள்ளன. இதில் நியாயம் இல்லாமல் இல்லை. எனவே அதிபர் சேவையில் உள்ளவர்களும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும்'' எனத் தெரிவித்தார். (201-11)

# சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறக்கப்படும்

வடமராட்சி, ஒக்.29

தீபாவளி தினத்தையொட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி புதன் கிழமை கடைகளைத் திறந்து தொழில் புரியுமாறு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க வடமராட்சிக் கிளை சிகை ஒப்பனை உரிமையாளர்களைக் கேட்டுள்ளது.

புதன்கிழமைக்குப் பதிலாக எதிர்வரும் 5 ஆம் திகதி தீபாவளி தினத்தன்று கடைகளைப் பூட்டுமாறு உரிமையாளர்களிடம் மேலும் கோரப்பட்டுள்ளது. (204-236)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



மாகாண மட்டத்தில் துரித கணிதச் செய்கைப் போட்டியில் தரம் -2 பிரிவில் இரண்டாம் இடம்பெற்ற சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை மாணவன் ஜிதுர்சன் சிறிரங்கராஜா பாடசாலை அதிபர், உபஅதிபர், பொறுப்பாசிரியர் மற்றும் தாயாருடன் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (த)

# AL-QAREEM AGENCY (PVT) LTD.

## FOREIGN EMPLOYMENT AGENT

143, GRANDPASS ROAD, COLOMBO - 14,

# வெளிநாட்டு தொழில் வாய்ப்பு
# அபுதாபி- ஐ.அ.எ உடனடி வேலை வாய்ப்பு

ஊழியர்களுக்கான வேலைகள், தங்குமிடம் மற்றும் ஒழுங்கமைப்புகள் செய்து கொடுப்பதில் முன்னோடி நிறுவனம்.
வெளிநாட்டவரினால் நேர்முகத்தேர்வு 2010 ஒக்ரோபர் 30,31 ஆம் திகதிகள் மற்றும் நவம்பர் 1ஆம் திகதி
மூன்று நாள்களும் மு.ப.10மணி முதல் பி.ப.5 மணிவரை நடைபெறும்.
தெரிவு செய்யப்பட்டவர்கள் 15 வேலை நாள்களில் பயணத்தினை மேற்கொள்ளமுடியும்.

| | | Salary in UAE Dirhams | | Salary in Sri Lanka Rupees. | |
|---|---|---|---|---|---|
| பதவி | எண்ணிக்கை | குறைந்தது | அதிகபட்சம் | குறைந்தது | அதிகபட்சம் |
| * பாண் செய்பவர் | 8 | 2000 | 3000 | 64,000.00 | 96,000.00 |
| * கசாப்பு வேலை (இறைச்சிக்கடை) | 5 | 900 | 1400 | 28,800.00 | 44,800.00 |
| * இறைச்சிக்கடை உதவியாளர் | 5 | 750 | 900 | 24,000.00 | 28,800.00 |
| * சப்பாத்தி செய்பவர் | 40 | 700 | 1000 | 22,400.00 | 32,000.00 |
| * சப்பாத்திசெய்யும் உதவியாளர் | 4 | 650 | 700 | 20,800.00 | 22,400.00 |
| * பிரதான நிர்வாகி | 1 | 4500 | 7000 | 144,000.00 | 224,000.00 |
| * Chef Sous | 3 | 3000 | 3750 | 96,000.00 | 120,000.00 |
| * பிரதம மேலாளர் | 1 | 4000 | 5000 | 128,000.00 | 160,000.00 |
| * கேட்டரிங் கிளார்க் | 2 | 1500 | 2000 | 48,000.00 | 64,000.00 |
| * களஞ்சிய எழுதுவினைஞர் | 2 | 1500 | 2000 | 48,000.00 | 64,000.00 |
| * சமையலாளர் (அரபிக் உணவு) | 3 | 2500 | 4000 | 80,000.00 | 128,000.00 |
| * அரபி சமையல் உதவியாளர் (அரபிக் உணவு) | 3 | 1800 | 2000 | 57,600.00 | 64,000.00 |
| * சீன சமையலாளர் (சீன உணவுகள்) | 2 | 1800 | 2500 | 57,600.00 | 80,000.00 |
| * சீன சமையல் உதவியாளர் (சீன உணவுகள்) | 2 | 1600 | 1800 | 51,200.00 | 57,600.00 |
| * சமையலாளர் ஏனையவை (கிழக்கு-மேற்கு) | 3 | 1200 | 1800 | 38,400.00 | 57,600.00 |
| * சமையலாளர் ஏனையவை உதவியாளர் | 3 | 1000 | 1200 | 32,000.00 | 38,400.00 |
| * பொது சமையலாளர் | 3 | 1200 | 1800 | 38,400.00 | 57,600.00 |
| * இந்திய சமையலாளர் (இந்திய உணவுகள்) | 24 | 1800 | 2200 | 57,600.00 | 70,400.00 |
| * இந்திய உதவி சமையலாளர் (இந்திய உணவுகள்) | 12 | 1200 | 1500 | 38,400.00 | 48,000.00 |
| * தலைமை சமையலாளர்/சிரேஷ்ட சமையலாளர் | 3 | 2000 | 3000 | 64,000.00 | 96,000.00 |
| * பாகிஸ்தான் சமையலாளர் | 4 | 1200 | 1800 | 38,400.00 | 57,600.00 |
| * பாகிஸ்தான் உதவி சமையலாளர் (பாகிஸ்தான் உணவுகள்) | 4 | 1000 | 1200 | 32,000.00 | 38,400.00 |
| * பிலிப்பைன்ஸ் சமையலாளர் ( பிலிப்பைன்ஸ் உணவு) | 2 | 1800 | 2200 | 57,600.00 | 70,400.00 |
| * பிலிப்பைன்ஸ் உதவிசமையலாளர் (பிலிப்பைன்ஸ் உணவு) | 2 | 1500 | 1800 | 48,000.00 | 57,600.00 |
| * தாய்லாந்து சமையலாளர் (தாய்லாந்து உணவு) | 2 | 1800 | 3000 | 57,600.00 | 96,000.00 |
| * வியட்நாம் சமையலாளர் ( வியட்நாம் உணவு) | 2 | 1800 | 2200 | 57,600.00 | 70,400.00 |
| * வியட்நாம் உதவி சமையலாளர் ( வியட்நாம் உணவு) | 2 | 1600 | 1800 | 51,200.00 | 57,600.00 |
| * தரவு பதியும் இயக்குநர் | 25 | 1750 | 2750 | 56,000.00 | 88,000.00 |
| * சாரதி (ஐக்கிய அரபு எமிரெட் உரிமம் மட்டும்) | 12 | 1800 | 2200 | 57,600.00 | 70,400.00 |
| * சலவையலாளர் | 23 | 700 | 800 | 22,400.00 | 25,600.00 |
| * பொருள்கள் பொறுப்பு ஒருங்கிணைப்பாளர் | 1 | 2500 | 3000 | 80,000.00 | 96,000.00 |
| * பொருள்கள் பொறுப்பு அதிகாரி | 1 | 2500 | 3000 | 80,000.00 | 96,000.00 |
| * அடையளமிடுபவர்/ பிரித்தெடுப்பவர் (லோன்றி) | 46 | 700 | 800 | 22,400.00 | 25,600.00 |
| * கையால் அழுத்தும் இயக்குநர் (லோன்றி) | 12 | 800 | 1000 | 25,600.00 | 32,000.00 |
| * நீராவியால் அழுத்துபவர் (லோன்றி) | 12 | 800 | 1000 | 25,600.00 | 32,000.00 |
| * பாஸ்ட்ரி முதல்வர் | 1 | 3000 | 4500 | 96,000.00 | 144,000.00 |
| * பாஸ்ட்ரியாளர் | 2 | 2500 | 3000 | 80,000.00 | 96,000.00 |
| * உதவியாளர் பாஸ்ட்ரி | 4 | 1000 | 1200 | 32,000.00 | 38,400.00 |
| * சலாது செய்பவர் | 5 | 1200 | 1500 | 38,400.00 | 48,000.00 |
| * சலாது உதவியாளர் | 5 | 1000 | 1200 | 32,000.00 | 38,400.00 |
| * களஞ்சிய பொறுப்பாளர் உணவு | 1 | 2000 | 3000 | 64,000.00 | 96,000.00 |
| * களஞ்சிய பொறுப்பாளர் உணவுகள் அல்லாத | 3 | 2000 | 3000 | 64,000.00 | 96,000.00 |
| * உதவியாளர் (உணவு) | 3 | 2000 | 3000 | 64,000.00 | 96,000.00 |
| * தங்குமிடவசதி மேற்பார்வையாளர் | 3 | 2500 | 4000 | 80,000.00 | 128,000.00 |
| * தங்குமிடவசதி உதவியாளர் மேற்பார்வையாளர் | 5 | 1800 | 2500 | 57,600.00 | 80,000.00 |
| * வெதுப்பக மேற்பார்வையாளர் | 1 | 3500 | 4500 | 112,000.00 | 144,000.00 |
| * கேற்றரிங் மேற்பார்வையாளர் | 6 | 3500 | 6000 | 112,000.00 | 192,000.00 |
| * கேற்றரிங் உதவி மேற்பார்வையாளர் | 6 | 2500 | 3000 | 80,000.00 | 96,000.00 |
| * சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் | 3 | 1800 | 2500 | 57,600.00 | 80,000.00 |
| * சுத்திகரிப்பு உதவி மேற்பார்வையாளர் | 9 | 1200 | 1600 | 38,400.00 | 51,200.00 |
| * இரா போசன மேற்பார்வையாளர் (இரவு உணவு மண்டபம்) | 3 | 4000 | 5000 | 128,000.00 | 160,000.00 |
| * வீட்டுப்பரமரிப்பு மேற்பார்வை செய்பவர் | 23 | 2750 | 4500 | 88,000.00 | 144,000.00 |
| * வீட்டுப்பரமரிப்பு உதவி மேற்பார்வை | 24 | 1800 | 2500 | 57,600.00 | 80,000.00 |
| * சலவைப்பகுதி மேற்பார்வையாளர் | 4 | 2750 | 4000 | 88,000.00 | 128,000.00 |
| * மெஸ் மேற்பார்வையாளர் (மெஸ் மண்டபம்) | 8 | 2000 | 3000 | 64,000.00 | 96,000.00 |
| * மெஸ் உதவி மேற்பார்வையாளர் | 16 | 1500 | 2000 | 48,000.00 | 64,000.00 |
| * கழுவுபவர் (டிஷ்/பொட் போன்றவை) | 8 | 700 | 800 | 22,400.00 | 25,600.00 |
| * அப்லூஷன் கிளீனர் | 182 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |
| * காம் (கட்டடத்தின் உள்புற, வெளிப்புற சுத்தம்செய்பவர்) | 28 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |
| * பரிமாறுபவர் (உணவு) | 100 | 600 | 650 | 19,200.00 | 20,800.00 |
| * பொது சுத்திகரிப்பாளர் | 120 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |
| * கேற்றரிங் உதவியாளர் | 175 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |
| * மெஸ் போய்/மெஸ்மண்டப உதவியாளர் | 100 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |
| * துணி பொதிசெய்பவர் (லோன்றி) | 24 | 600 | 650 | 19,200.00 | 20,800.00 |
| * உணவு பொதிசெய்பவர் | 25 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |
| * றூம் போய்- அறைசுத்தம் செய்பவர் | 240 | 600 | 650 | 19,200.00 | 20,800.00 |
| * களஞ்சிய சுமைதூக் குபவர் (ஏற்றுவதும், இறக்குவதும்) | 15 | 500 | 550 | 16,000.00 | 17,600.00 |

### தொழில்களுக்கான காலம் மற்றும் நிபந்தனைகள்

★ தொழில் செய்யும் இடத்தைப் பொறுத்து , உணவு இல்வசமாக வழங்கப்படும். இல்லையெனில் Dhs 200 கொடுப்பனவு வழங்கப்படும்.

★ தங்குமிடத்திலிருந்து வேலைத்தலத்திற்கும் பின்னர் திரும்பிச் செல்லவும் போக்கு வரத்து, நிறுவனத்தினால் வழங்கப்படும்.

★ வேலை கொள்பவரால் காப்புறுதி, மருத்துவம் வழங்கப்படும்

★ சீருடை தேவையானால் அல்லது அவசியமானால் வேலை கொள்பவரால் வழங்கப்படும்.

★ ஒருநாளைக்கு எட்டுமணிநேர வேலை அல்லது ஒரு ஷிப்ட்.

★ கிழமைக்கு நோள் வேலை நேரசூசிகையின்படி ஒருநாள் விடுமுறை.

★ வேலையில் சேர்ந்த தினத் திலிருந்து 3மாதகாலம் தகுதி காண்பயிற்சியாளராக கணிக் கப்படும்.

★ ஒப்பந்தகாலம் 2வருடம் புதுப்பித்தலுக்குரியது. மேலதிக நேரம் வேலை செய்யின் நாட்டின் தொழிற்சட்டங்களுக்கமைவாக மேலதிக வேதனம் வழங்கப்படும்.

★ ஒப்பந்தகாலம் முடிவுறும் பட்சத்தில் மட்டும் விமானக் ரிக்கட் வேலைகொள்பவரால் வழங்கப்படும்.

★ ஏனையவரையறை நிபந்தனைகள்யாவும் தொழில் செய்யும் நாட்டின் தொழில் சட்டங்களுக்குகமைவாகவே இடம்பெறும்.

**விரும்பும் விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.**
கடவுச்சீட்டு, (3சிறிய) வர்ண சுய படப்பிரதிகள், கல்வித்தராதர பிரதிகள், தொழில் அனுபவ சான்றிதழ்கள், (பழையவை மற்றும் தற்போதையவை) உள்ளூர் வெளிநாட்டுவேலை அனுபவ சான்றிதழ்கள்.

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகம் திறந்திருக்கும்.**

(சி/572218)

# தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 50 வீட்டுத் திட்டம் அறிவியல் நகரில்

## கட்டடப் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஒக்.29

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப் படவுள்ள 50 வீட்டுத்திட்டத் திற்கான கட்டட வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகரில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 50 வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டுத்திட்டம் இடம்பெறும் காணி வீடமைப்பு அதிகார சபையினால் துப்புரவு செய்யப்பட்டு, பயனாளிகளுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பக் கட்டமாக வழங்கப்பட்ட இப் பணத்தைக் கொண்டு பயனாளிகள் வீட்டு வேலையை ஆரம்பித்துள்ளார்கள். ஒவ்வொரு வீடும் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது. இதற்குரிய பணம் படிப்படியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இதேவேளை-

கிளிநொச்சியில் புனரமைக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக அடுத்த மாதம் முதலாம் திகதி வரும் அமைச்சர் விமல் வீரவன்ச 50 வீட்டுத் திட்டத்தையும் நேரில் சென்று பார்வையிடுவர். (த-115)

# வன்னிப் பகுதிச் சந்தைகளில் வாழைப் பொத்திக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி,ஒக்.29

வன்னிப் பிரதேசத்தில் இயங்கும் மரக்கறிச் சந்தைகளில் வாழைப் பொத்திகளை தாம் வாங்க முடியாதுள்ளதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மருத்துவர்களால் வாழைப் பொத்தியில் தயாரிக்கப்பட்ட கறியை உண்ணுமாறு சிபார்சு செய்யப்பட்டவர்கள் அவற்றைச் சந்தையில் தேடியலைகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் உறவினர், நண்பர்களிடம் சொல்லி தருவிப்பதனைக் காண முடிகின்றது.

உணவு சமிபாட்டுப் பிரச்சினையை எதிர்நோக்குபவர்களுக்கு வாழைப்பொத்தி வறை, கறி என்பன சிறந்ததாக அமைகின்றது.

வன்னியில் இப்போதுதான் வாழை மீள்நடுகை செய்யப்பட்டு வருகின்றன. மரக்கறி வியாபாரிகள் வாழைப் பொத்திகளையும் எடுத்து வந்து சந்தையில் விற்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-121)

# 40 ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகள் வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தி

## 120 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

வவுனியா,ஒக்.29

வவுனியா மாவட்டத்தில் உள்ள 40 ஆரம்பப்பிரிவு பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 120 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் உட்கட்டுமானப் புனரமைப்புக்கே இவ்வாறு நிதி வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச , அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் அவசரமாக புனரமைக்க் வேண்டிய 40 பாடசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குத் தலா 3 மில்லியன் ரூபா என 40 பாடசாலைகளுக்கு 120 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உட்கட்டுமானப் பணிகள் அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# பளையில் இல்லை வங்கிச்சேவை

பளை,ஒக்.29

பளை நகரில் எந்தவித வங்கிச் சேவைகளும் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

இதனால் இப்பகுதி மக்கள் தமது வங்கித் தேவைகளுக்காக 35 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள வங்கிகளுக்குச் சென்று பூர்த்தி செய்ய வேண்டிய அவல நிலையில் உள்ளார்கள். எனவே மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இப்பகுதி மக்களின் நலன் கருதி தமக்கு ஒரு வங்கிச் சேவையினை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-311-313)

# தம்பகாமத்தில்160 பயனாளிகளுக்கு 9 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள்

பளை,ஒக்.29

சுவிஸ் ஒன்றியச் சங்கத்தினரால் தம்பகாமம் பிரதேசத்தில் 160 பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

9 லட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகளை 160 பயனாளிகள் இந்த நிதி உதவி மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிதியைக் கொண்டு சுவிஸ் ஒன்றியச் சங்கத்தினரே வீடுகளை அமைத்து வழங்கவுள்ளார்கள் எனப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார். (க-313)

# பச்சிலைப்பள்ளி வைத்தியசாலைக்கு புதிதாக மருத்துவர் நியமனம்

பளை,ஒக்.29

பச்சிலைப்பள்ளி பொது அரசினர் வைத்தியசாலைக்குப் புதிதாக மருத்துவர் செல்வி மைதிலி சிவானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மக்களுக் கான மருத்துவ சேவையினை வழங்குவதற்கு மருத்துவர் ஒரு வர் சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து இதுவரை காலமும் வந்து சென்றார். இதனால் உரிய நேரத்தில் மருத்துவ வசதிகளைப் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வந்தார்கள்

எனினும் தற்போது கடந்த 20 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ள மருத்துவர் மூலம் அப்பகுதி மக்களின் மருத்துவத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின் றன.

இவரது சேவை தினமும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப் பட் டுள்ளது. (க-311-313)




## வீடுகள் அமைக்க மரங்களுக்குத் தட்டுப்பாடு

ஒட்டுசுட்டான்,ஒக்.29

மீள்குடியேறியுள்ள வன்னி மக்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான நிதியுதவிகள் கிடைத்த போதும் மரங்களைப் பெறுவதில் சிரமங்கள் தோன்றியுள்ளது.

தற்போது மீள்குடியேறியுள்ள வன்னி மக்களுக்குப் பகுதிச் சேத வீடுகள், நிரந்தர வீடுகள் என்பனவற்றுக்கான நிதியுதவிகள் கிடைத் துள்ளன. ஆனால் வீட்டுக்குரிய கதவு, யன்னல், கூரை என்பவற் றுக்குத் தேவையான மரங்களைப் பெறுவதில் சிரமங்கள் உள்ளன.

ஆகவே இத்தகைய மக்கள் தமது வீடுகளுக்குத் தேவையான மரங்களை அரிந்து பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-341)

## சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள்

பளை,ஒக்.29

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்கள் தோறும் சுகாதார சேவைத் திணைக்கள ஊழியர்களும், பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து வீடு வீடாகச் சென்று சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

கிணற்றின் சுத்தம், மலசலகூட சுத்தம் தொடர்பாகவும் தொற்று நோய்கள் தொடர்பாகவும் மக்கள் விளங்கக்கூடிய வகையில் நேரடியாக மக்கள் இருக்கும் குடிமனைகளுக்குச் சென்று இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகின்றன.(க-311-313)

## மேட்டுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

ஒட்டுசுட்டான்,ஒக்.29

பருவ மழை ஆரம்பித்துள்ளதால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேட்டுப்பயிர்ச் செய்கைக்கான ஏற்பாடுகளை விவசாயிகள் ஆர்வத்துடன் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை மேட்டுப் பயிர்களான உழுந்து, கௌப்பி, குரக்கன், பயறு, சோளம் என்பனவற்றுக்கான விதைகளை விவசாய இலாகாவினர் தருவித்து வழங்கினால் மக்கள் உரிய காலத்தில் இவற்றைப் பயிரிட்டு அதிக பயன் பெறமுடியும்.

இப்பகுதியில் அதிக விவசாயிகள் மானாவாரிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-341)




புனரமைப்புச் செய்யப்பட்ட கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதான கட்டடத்தைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

# தாய் சேய் சிகிச்சை நிலையம் இல்லை ; பளை நகரில் தாய்மார்கள் அவலத்தில்

பளை,ஒக்.29

மீள்குடியேற்றப்பட்ட பளை நகரில் தாய் சேய் நல சிகிச்சை நிலையம் இல்லாததால் பொதுமக்களும், மருத்துவ ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இப்பிரதேசத்தில் 58 கர்ப்பிணித் தாய்மார்களும் 65 பாலூட்டும் தாய்மார்களும் உள்ளார்கள். இருந்த போதும் இவர்களுக்கான சிகிச்சைகளை மரத்தின் கீழ் வைத்து மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஒரு கர்ப்பிணித் தாய்க்குத் திறந்தவெளியில் வைத்து சிகிச்சை வழங்க முடியாது. இதனால் மரத்தைச் சுற்றி மறைப்புக் கட்டிச் சிகிச்சை வழங்க வேண்டிய நிலையில் இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரசவ வேதனை ஏற்படும் போது நீண்ட தூரம் கடந்து சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் இப்பிரதேச மக்களின் தாய், சேய் நலன் கருதி தமக்கான ஒரு சிகிச்சை நிலையத்தை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

மாதாந்த கிளினிக்கின்போது குழந்தைகளுக்கான மாதாந்த தடுப்பூசி வழங்கல் மற்றும் சத்துணவு வழங்கல் போன்றவற்றை மேற்கொள்ளும்போது பெரும் சிரமங்களை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் இவர்களின் சிகிச்சை நடவடிக்கைகளுக்குத் தேவையான ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் கூறப்படுகிறது. (க-313-311)

# புதுப்பொலிவுடன் இயக்கச்சி சந்தை

பளை,ஒக்.29

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இயக்கச்சி பொதுச்சந்தை புதுப்பொலிவுடன் மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

போரினால் சேதமடைந்த இப் பொதுச் சந்தை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் 2 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களும், வியாபாரிகளும் நன்மை அடைந்து வருவதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

மேலும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் வீட்டுப் பயிர்களான பயிற்றங்கொடி, தக்காளி ஆகியவற்றைப் பயிர் செய்து இந்தச் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர்.

ஏனைய மரக்கறி வகைகளைச் சாவகச்சேரிப் பொதுச் சந்தையிலிருந்தே கொள்வனவு செய்து விற்பனை செய்யப்படுவதால் விலைகளும் பன்மடங்காக உள்ளது எனவும் மக்கள் தெரிவித்தனர். (க-311-313)

# பச்சிலைப்பள்ளி நூலகத்திற்கு 5 லட்சம் ரூபா நிதியுதவி

பளை,ஒக்.29

பச்சிலைப்பள்ளி பொது நூலகத்திற்கு குறித்து ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை மூலம் 5 லட்சம் ரூபா நிதி உதவி கிடைத்துள்ளது.

போரின் பின்னர் மீள இயங்கும் இந்த நூலகத்திற்குத் தேவையான புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் புத்தகங்களில் பொதுமக்களின் தேவைக்கேற்ப அரிய பல நூல்கள் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைச் செயலாளரும் விசேட ஆணையாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-311-313)

# மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் 10 மயானங்கள் மக்கள் பாவனையில்

பளை,ஒக்.29

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் பத்து மயானங்களே மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றதாக உள்ளன.

கரிக்குருவி தாழ்வுச் சுடலை, (இயக்கச்சி), மரக்காரம்பள்ளம் சுடலை (ஊர்வளியன்பற்று), ஆலங்கட்டை பள்ளம் சுடலை (சங்கத்தார் வயல்), சாவித்திரி சுடலை (கோவில் வயல்), யாவில் சுடலை (முகாவில்), செம்பாடு சுடலை (பேராலை), மலையான் காடு சுடலை (தம்பகாமம்), கடற்கரை பொற்பத்தை சுடலை (புலோப்பளை), முடக்குத்தீவு சுடலை (தம்பகாமம்), தர்மக் கேணி சுடலை (தர்மக்கேணி), ஆகிய பத்து மயானங்களுமே பிரதேச சபையினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரும் விசேட ஆணையாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

ஏனைய மாயானங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத பிரதேசங்களில் இருப்பதால் அப்பிரதேசத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கையின் பின்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்படுகின்றன. (க-313-311)

**VDAG IT Centre**
Tel : 021 3201040
0777 448664
Email: vdag@valvai.com

Computer Repair & Maintenance
* பாடசாலை, அலுவலகம், வர்த்தகநிறுவனம் மற்றும் வீடுகளுக்கு கணினி பொருத்துதல், திருத்த வேலை என்பவற்றை உங்கள் இடங்களுக்கு வந்து எமது கணினி வல்லுநர்களால் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன்
ADSL & Broadband
* தற்போதய தேவையான Internet & E.mail வசதிகளுக்கான Dialog Broadband மற்றும் SLT ADSL கருவிகள் பொருத்தித் தரப்படும்.(105247)


# வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல்-2011

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2011 ஆம் ஆண்டுக்கு (01.01.2011-31.12.2011) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 29.10.2010 - 09.11.2010 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 09.11.2010 பி.ப. 1 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 09.11.2010 பி.ப 2 மணி
**(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமூகமளிக்கலாம்)**

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *''செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம் புத்தூர்''* எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை *''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப் பாணம்''* எனும் முகவரிக்கும் எதிர்வரும் 09.11.2010 பிற்பகல் 1 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 1 | அச்சுவேலி பொதுச் சந்தை துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட | 500.00 | 2000 | 2,000,000.00 |
| 2 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000 | 167,000.00 |
| 3 | அச்சுவேலி கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000 | 22,000.00 |
| 4 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 500 | 38,000.00 |
| 5 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 250.00 | 500 | 31,000.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 1 | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 67,000.00 |
| 2 | புத்தூர் பொதுச் சந்தை | 250.00 | 500.00 | 105,000.00 |
| 3 | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 7,250.00 |
| 4 | ஆவரங்கால் பொதுச் சந்தை | 250.00 | 250.00 | 16,500.00 |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 1 | நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 34,000.00 |
| 2 | நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 9,500.00 |
| 3 | நீர்வேலி பொதுச்சந்தை | 250.00 | 250.00 | 8,500.00 |
| 4 | நீர்வேலி மீன்சந்தை | 250.00 | 250.00 | 4,750.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 1 | கோப்பாய் வடக்கு பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 14,250.00 |
| 2 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 71,250.00 |
| 3 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 250.00 | 2,850.00 |
| 4 | இருபாலைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 124,000.00 |
| 5 | இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 250.00 | 4,000.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 1 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 94,000.00 |
| 2 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 61,000.00 |
| 3 | உரும்பிராய் மத்திய சந்தை | 50.00 | 2,000.00 | 33,250.00 |
| 4 | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 50,000.00 |

01) சந்தையிலிருந்து 01 கி.மீ. சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப் பட்டுள்ளது.
02) கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப் பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் உப அலுவலகத்திற்கு சமுகமளிக்கவேண்டும்.
03) கேள்விப்பத்திரப் பணம்,சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றுக்கு ஒப் பந்தம் எழுதும்போது உள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.
04) இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிட மிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
29.10.2010

**தம்பையா நடராசா**
*செயலாளர்*

(சி/572221)

# மந்திகை வீதி மோசமாகச் சேதம்

வடமராட்சி,ஒக்.29

மந்திகையிலிருந்து வல்லிபுரக் கோயிலுக்குச் செல்லும் வீதியில் மந்திகை தொடக்கம் ஆனைவிழுந்தான் சந்தி வரையான வீதி படுமோசமாகப் பழுதடைந்துள்ளது.

இந்த வீதி ஊடாக வல்லிபுரக் கோயிலுக்கும், அம்பனுக்கும் சென்று வரும் அனைத்து வாகனங்கள் மற்றும் மிதிவண்டிகளை பழுதடைந்துள்ள இவ்வீதியில் செலுத்திச் செல்வதில் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமங்களையும், கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளார்கள். (த-236)

# ஆதனவரி மீளாய்வு

வடமராட்சி,ஒக்.29

கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை நெல்லியடி உப அலுவலகப் பகுதியில் ஆதனவரி மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த40ஆண்டுகளுக்கு மேலாக மீளாய்வு செய்யப்படாமல் இருந்து வந்த ஆதனவரியை மீளாய்வு செய்யும் பணியில் மதிப்பீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த 5 உத்தியோகத்தர்கள், பிரதேசசபை உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் கடந்தமூன்று மாதங்களாக ஈடுபட்டிருந்தனர்.

ஆதனவரி மீளாய்வின் போது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆதனவரிக் கட்டணம் எட்டு வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (த - 236)

# நவாலியில் பசுப்பால் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

நவாலியில் பசுப்பால் கொள்வனவு, விற்பனை நிலையம் ஒன்று சண்டிலிப்பாய் கால் நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தினால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள கட்டடம் ஒன்றிலே கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அமிர்தலிங்கத்தினால் இது திறந்து வைக்கப்பட்டது. (த - 100)

# நள்ளிரவுக்குப் பின்னரும் அலறும் ஒலிபெருக்கிகள்

வண்ணை,ஒக்.29

நள்ளிரவு 12 மணிக்குப் பிற்பாடும் வண்ணார் பண்ணை வடமேற்கில் ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 10 மணியுடன் ஒலிபெருக்கிகள் ஓய்ந்து விட வேண்டுமென்பது பொதுவான சட்டம். ஆனால் வண் - வடமேற்கில் உள்ள கோயில் ஒன்றில் கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 40 நிமிடங்கள் வரை ஒலி பெருக்கி அலறியது.

இதனால் அயலில் உள்ளவர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். (த - 160)

# பொருள்களின் விலை அதிகரிப்பு

வடமராட்சி,ஒக்.29

யாழ். மாவட்டத்தில் புளி, தேங்காய்எண்ணெய்வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதுவரை காலமும் கிலோ 40 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை விற்கப்பட்டு வந்த புளி தற்போது 250 ரூபா தொடக்கம் 270 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் தேங்காய் எண்ணெய் வகைகள் லீற்றருக்கு 20 ரூபா தொடக்கம் 30 ரூபா வரை அதிகரித்துள்ளீது. (த- 236)


**G.C.E O/L ICT Work Shop**

O/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ICT பாட வேலைக்களப்பயிற்சி.
பயிற்சிக்காலம் - நவம்பர் மாத வார இறுதி நாள்கள்.
விண்ணப்ப முடிவுத் திகதி - 05.11.2010
தொடர்பு : - 0770417744/0712782178
விவரங்கள்: www.etecjaffna.blogspot.com.
TEC Sri Lanka.
மானிப்பாய் வீதி,கோப்பாய் சந்தி,
கோப்பாய்.
(சி/572219)

**ஜயவிரு JAYAVIRU**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 534
சீட்டிழுப்பு திகதி: 27.10.2010

வெற்றி எழுத்து : G வெற்றி இலக்கங்கள்: 06 10 21 62

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 11,196,426.40 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 231 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 466 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 11684 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 6727 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 168066 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 26941 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ.6,765,620.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்க்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரு. 11,826,727.20

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2168 திகதி 27-10-2010
ஆங்கில எழுத்திற்கும் G
வெற்றி எண்கள் 46 48 52 60
போனஸ் இல: 01

ஜக்பொட் பரிசு ரு. 19,494,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 197287 | 20/- | 3,945,740/- |
| 2 இல | 14141 | 100/- | 1,414,100/- |
| 3 இல | 303 | 1,000/- | 303,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8268 | 40/- | 330,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 569 | 1,000/- | 569,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,494,550/- | - |
| 1 இல + போனஸ் இல | 9397 | 100/- | 939,700/- |
| 2 இல + போனஸ் இல | 434 | 500/- | 217,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 402 | 200/- | 80,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,602,160/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 230852 | | 11,202,160/- |

ரு. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| வவுனியா | 202433654-5-24 |
| பொலன்னறுவை | 202437207-7-00 |
| கம்பஹா | 202437245-6-16 |
| மட்டக்களப்பு | 202454375-7-32 |
| மாத்தளை | 202435401-6-41 |
| களுத்துறை | 202437352-4-15 |
| கொழும்பு | 202439263-1-37 |
| அநுராதபுரம் | 202440466-5-43 |
| கேகாலை | 202439241-6-36 |
| அம்பாந்தோட்டை | 202434163-2-25 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரு. 20,033,950/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

# புதிய தேர்தல்கள் முறைமையின்படி வேட்பாளர்கள் கால்நடையாகவே சென்று மக்களைச் சந்திக்கலாம்!

## அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுகிறார்

வத்துகாமம், ஒக். 29

பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து விருப்புவாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் முறை அடுத்த உள்ளூராட்சித் தேர்தலின் போது இருக்காது என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

கண்டி கெட்பிட்டிபொலநினைவு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1972 ஆம் ஆண்டு அரசமைப்பில் ஆள் பதிவுத் திணைக்கள அடையாள அட்டை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் அது இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

ஏனெனில் ஒருவர் தனது ஒரு வாக்கை மட்டும் பயன்படுத்தி ஐ.தே.கவை வெல்ல வைக்க முடியாது என்று ஜே. ஆருக்குத் தெரியும். எனவே அவர் அடையாள அட்டையை அதில் இருட்டடிப்புச் செய்தார்.

புதிய அரசமைப்பின்படி வட்டாரமுறையில் மூன்றிலிரண்டு அங்கத்தவர்களும், விகிதாசார முறையில் மூன்றில் ஒரு பகுதினருமே தெரிவு செய்யப்படுவர். எனவே புதியமுறையில் அங்கத்தவரின் எண்ணிக்கை கூடுமே தவிர குறையப் போவதில்லை.

மேலும் விகிதாசார முறை காரணமாக ஓர் அங்கத்தவர் பரந்த பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு நவீன தொழில்நுட்பம், வாகனம், பணம் என்று எத்தனையோ தேவைப்படுகின்றன.

வட்டாரமுறை காரணமாக இந்தப் பரப்பு குறைக்கப்படுகிறது. செலவினம் குறைகிறது. வேட்பாளர் கால்நடையாகச் சென்று வாக்காளர்களைச் சந்திக்க முடியும்.

வட்டாரமுறை அல்லது தொகுதி முறை காரணமாக எந்த ஒரு வேட்பாளரும் கடனாளியாக மாட்டார்கள். ஆனால், விகிதாசார முறையில் ஒருமுறை வெற்றி பெற்றவர் அடுத்த முறை வெற்றி பெறவேண்டுமாயின் பணத்தை சேமித்து வைக்க வேண்டியுள்ளது.

குடம், விளக்கு என்று சின்னங்களை வைத்து ஜே. ஆர். ஜயவர்தன ஒரு 'கலகெடி செல்லம'' (குடத்து விளையாட்டு) என்ற விளையாட்டை விளையாடினார்.

இலங்கை வரலாற்றில் ஒரு இருண்ட காலம் அதுதான். அத்தேர்லில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியாது என்பதை உணர்ந்த அவர் இந்தப் புதுவகை விளையாட்டை விளையாடி ஐந்தில் நான்கு பெரும்பான்மையைத் தொடர்ந்து பாதுகாத்தார்.

நாம் முன்னைய அனுபவங்களை வைத்து பல விடயங்களை அலசி ஆராயும்போது காலத்திற்குப் பொருந்தாத சில விடயங்களை தொடர்ந்தும் வைத்துள்ளோம் என்பது புலனாகிறது.

1956 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா மற்றும் திருகோணமலைத் தளங்கள் அகற்றப்பட்டன. இது பிரித்தானியவிற்கான பெரிய அடி ஆகும்.

1978 ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜயவர்தனா கொண்டு வந்த புதிய அரசியல் அமைப்பு எமக்கு பாரிய சாபக்கேடாக மாறிவிட்டது. விருப்புவாக்கு என்ற வகையில் ஒரு யுத்தத்தையே செய்ய வேண்டியுள்ளது.

விருப்பு வாக்கு யுத்தத்தை தோற்றுவித்த விகிதாசார தேர்தல் முறை ஒழிக்கப்படவேண்டும். நாம் பழைய நிலைப்பாட்டில் இருந்து விடுபடக்கூடாது என்பது விதியல்ல. காலத்திற்குத் தேவையான மாதிரி அதனை மாற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அடுத்த போகத்தில் வடபகுதியில் அறுவடை மேற்கொண்ட பிறகு அரிசியில் நாம் தன்னிறைவடைந்து விட்டோம் என்பதை நிரூபிக்க முடியும்.

யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயம் முறையாக நடக்கவில்லை. தற்போது அங்குள்ள விவசாயிகள் மகிழ்ச்சியுடன் விவசாயத்தில் ஈடுபடுகின்ற னர்.

எனவே அடுத்த போகத்தில் அபரிமித உற்பத்தி ஏற்படும். இதன் காரணமாக எமது சுய தேவை பூர்த்தியடையும். எமது கல்வி முறையில் மாற்றம் தேவை. 500 ஆசிரியர்களையும் 5,000 மாணவர்களையும் ஒரு அதிபரால் நிர்வாகிக்க முடியாது.

தற்போதுள்ள வேற்றுமொழி ரீதியான, இன ரீதியான பாடசாலை முறை மாற்றப்படவேண்டும். ஆரம்ப,இடை நிலை, உயர்தரம் ஆகிய மூன்று நிலைகளைக் கொண்ட பாடசாலைகளே எதிர்காலத்தில் இருக்கும். இவ்வாறு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (சி)

## விளம்பரப் பதாகைகள் வைக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை!

கொழும்பு, ஒக்.29

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் மாநகர சபையின் அனுமதியுடனேயே விளம்பர நிறுவனங்கள் விளம்பரப் பதாகைகளை நிறுவி வந்தன. ஆனால் தற்போது புதிய நடை முறையின் கீழே நகர அபிவிருத்தி அதிகாரசபை சிபார்சுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மாநகர சபை வட்டாரங்களும் உறுதிப்படுத்தின. (சி)

## குவைத்தில் காரில் மோதுண்டு இலங்கைப் பெண் படுகாயம்

கொழும்பு, ஒக். 29

குவைத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் படுகாயமடைந்த இலங்கைப் பெண்ணொருவர் அதான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஓட்டப் பந்தயக் கார் ஒன்றின் முன்பாக திடீரென ஓடிச் சென்றபோதே விபத்து ஏற்பட்டுள்ளது..

குறித்த பெண் தனது அதிக வேக ஓட்டப்பந்தயக் காரில் மோதுண்டதாலேயே விபத்து ஏற்பட்டது எனக் கார் உரிமையாளரான இளைஞர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். (சி)



நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் ஆசிரியர் தினவிழா நடை பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி குககுமாரி விஜயரகுநாதன், உப அதிபர் திருமதி நிர்மலா பஞ்சலிங்கம் ஆகியோர் இணைந்து மங்கள விளக்கேற்றுவதனையும் பாடசாலை ஆசிரியர் திருமதி சி.இரகுநாதனுக்கு மாணவத் தலைவியால் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (204)

## போகம்பரை சிறைச்சாலையின் மேற்பார்வையாளரிடம் ஹெரோயின்

கொழும்பு, ஒக்.29

சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் கண்டி போகம்பரை சிறைச்சாலையின் மேற்பார்வையாளரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதிகள் குழுவொன்றைச் சிறைச்சாலைக்கு வெளியே பணியில் ஈடுபடுத்திவிட்டு மீண்டும் அவர்களைச் சிறைக்கு அழைத்து வந்தபோது மேற்பார்வையாளரிடம் இந்தப் போதைப் பொருள் இருந்தது.

ஏற்கனவே பொலிஸாருக்குக் கிடைத்திருந்த தகவலொன்றை அடுத்து சந்தேக நபரான மேற்பார்வையாளர் பொலிஸாரால் சோதனையிடப்பட்ட போதே அவர் வசமிருந்து பொதி செய்யப்பட்ட 16கிராமம் ஹெரோயின்போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகப் போகம்பரை சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி சந்தேக நபர் தொடர்ச்சியாகவே சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்தி வந்திருக்கக் கூடுமெனச் சந்தேகிக்கும் பொலிஸார் சந்தேக நபரால் இந்த விதம் கொண்டு வரப்படும் ஹெரோயின் சிறைக் கைதியொருவரினால் சிறைச்சாலைக்குள் விற்பனை செய்யப்பட்டமைக்கான தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் கண்டி நீதிவான் நீதிமன்றம் முன் நிறுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-22)

### இலங்கை அரசு

## பரஸ்பர மரியாதையைப் பின்பற்றும் சமூகத்தினரை உருவாக்கவேண்டும்

### ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே வலியுறுத்து

கொழும்பு, ஒக். 29

''பரஸ்பர மரியாதை, மனிதாபிமானம் போன்ற காரணிகளைப் பின்பற்றும் ஒரு சமூகக் கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்கவேண்டும்.''

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைத் தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 65ஆவது ஐக்கிய நாடுகள் சபை தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரிவினைவாதப் பிரச்சினைகளிலிருந்து இலங்கை தற்போது மீண்டு வருகிறது.

அத்துடன், உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் இலங்கை கவனம் செலுத்தி வருகின்றது.

உலக வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக இலங்கைக்கு எப்பொழுதும் ஐக்கிய நாடுகள் சபை ஒத்துழைப்பு வழங்கும்.

பரஸ்பர மரியாதை, மனிதாபிமானம் போன்ற காரணிகளைப் பின்பற்றும் ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியது இலங்கை அரசின் கடமையாகும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## புதிய அரசியல் கட்சி நேர்முகப் பரீட்சைக்கு ஒருசில கட்சிகளே தகுதி

கொழும்பு, ஒக்.29

புதிய அரசியல் கட்சிகளின் பதிவுக்கு அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவற்றுள் நேர்முகப் பரீட்சைக்குப் பத்துக்கும் குறைவான கட்சிகளே தகுதி பெற்றுள்ளன என தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பதிவுக்காக 83 விண்ணப்பங்கள் தேர்தல் செயலகத்துக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதியைக் கூடக் கொண்டிருக்கவில்லை. தகுதியற்ற விண்ணப்பங்களால் தேர்தல்கள் செயலகத்தின் நேரம் விரயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் வாரம் தகுதி பெற்ற புதிய கட்சிகளின் பிரதிநிதிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என தேர்தல் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (சி)

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையை தனியார் மயப்படுத்த இடமளியோம்!

### அக்கூட்டமைப்பின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.29

''மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவரது அக்கூற்றை நிறைவேற்ற வேண்டுமானால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையை தனியார் மயப்படுத்தக்கூடாது.''

- இவ்வாறு தேசிய நீர்வழங்கல் தொழிற்சங்கத்தின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் உபாலி ரத்னாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையை தனியார் மயப்படுத்த அரசு தீர்மானித்திருப்பதற்கு நாம் எதிர்க்கிறோம். நீர்வழங்கல் சபையின் பணிப்பாளர் சபை நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தனியார் மயப்படுத்தல் தொடர்பில் கூறியிருந்தது. அத்துடன் நாளையும் அது தொடர்பிலான இறுதி அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இச்சபையை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கே இந்த நடவடிக்கை எடுக்கவுள்ளது என அரசு கூறியுள்ளது. அது அப்பட்டமான பொய். நீர்வழங்கல் சபையைத் தனியார்மயப்படுத்தினால் பொதுமக்களே சிக்கல்களை எதிர்நோக்கநேரிடும். அவ்வாறு தனியார் மயப்படுத்தும் பட்சத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள் அதிகரித்து பல பிரச்சினைகள் தலை தூக்கும். நாட்டில் முன்னரும் பல அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டு பின்னர்அவை மூடப்படும் நிலைக்கு வழி வகுத்தன.

நீர்வழங்கல் சபையைத் தனியார் நிறுவனமாக மாற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் நாடு தழுவிய ரீதியில் பாரிய போராட்டங்களை மேற்கொள்ள நாம் தீர்மானித்துள்ளோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்

# நூற்றாண்டு விழாச் சறப்பு மலர்- 1910-2010

## அருளாசிச் செய்தி



அரிய தவத்தின் பயனாக எமது பேரனார் பிரம்மஸ்ரீ இராமசேதுக்குருக்கள் குருசாமிக் குருக்கள் கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோவிலில் வீற்றிருக்கும் ஸ்கந்தப்பெருமானை அந்தரங்க அன்போடு தினமும் பூசனை புரிந்து வந்தார். அவரின் சிந்தையில் கல்வியை வளர்க்கக் கைதடியில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தை முருகன் உதிப்பித்தார். அதன் பயனாக முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம் என்னும் பெயரில் மிகப்பெரும் கல்வி வழங்கும் இப்பாடசாலையை ஆரம்பத்தில் ஒரு சிறுபாடசாலையாக குருக்கள் அத்திபாரமிட்டு ஆரம்பித்தார்.

குருசாமிக்குருக்கள் அன்று ஆரம்பித்த பாடசாலை இன்று நூற்றாண்டு காலம் கல்வியைவளர்த்துப் புகழோடு விளங்குகின்றது. இம்மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழா சிறப்புற வாழ்த்துவதோடு இவ்விழாவிலே மலர்வெளியீடு செய்வது மிகவும் அரும்பணியும் சிறப்பும்கொண்டது. இவ்வித்தியாலயம் இனிதே கல்வி மணம் பரப்பி, பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைந்து, பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கல்வியை வளர்த்துப் பெரும்பணிபுரிய வேண்டுமென, நான் தினமும் பூசிக்கும் மகாவல்லி கஜாவல்லி சமேத ஸ்ரீஷண்முகநாதப் பெருமானை வணங்கி மங்களகரமான நல் ஆசிகள் வழங்கி அமைகின்றோம்.

பிரம்மஸ்ரீ யோ.குருசாமிக் குருக்கள், பிரதம குருக்கள் (ஸ்தாபகரின் பேரன்),
கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோவில்.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



பாரம்பரியச் சிறப்புமிக்க யாழ் குடாநாட்டிலே தனக்கே உரித்தான தனிச்சிறப்புடன் திகழும் தென்மராட்சியின்கண் சிறப்புற விளங்கும் கைதடிக் கிராமத்தில் கல்விப் பணி செய்து, நூற்றாண்டு காணும் முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் பழைமையும்,பெருமையும் பகர்தற்கரிதாம். கிராமிய அடிப்படையில் சைவச்சிறார்களின் கல்வியைக் கருத்தாய்க் கொண்டு கிராம விதானையார் திரு. சந்திரசேகரம் அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய காணியில், கைதடி பிரம்மஸ்ரீ இ.குருசாமிக் குருக்களால் 1910 இல் ஆரம்பிக்கப்பட்ட கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் தொடர்ந்தும் கிராமத்து மக்களால் அன்பளிக்கப்பட்ட காணிகளால் கட்டியெழுப்பப்பட்டு, இன்று நிறைவானதொரு கல்விக்கூடமாய்ச் சிறப்புறத் திகழ்ந்து IC பாடசாலையாக மிளிர்வதைக் கண்டு மகிழ்கின்றேன். இப்பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தினதும், கிராம மக்களினதும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் ஒத்துழைப்பு போற்றற்குரியதாம்.

இன்றைய முதல்வர் திரு.சி.பவளகுமாரன் அவர்களின் திறமையான நிர்வாகத்தின் கீழ் நூற்றாண்டு காண்கின்றது. கைதடிக் கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் நூற்றாண்டு காணும் இம் மகாவித்தியாலயத்திற்கு எனது மனமுவந்த வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன.

திருமதி இமெல்டா சுகுமார
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர், யாழ். மாவட்டம்.

## அதிபரின் உள்ளத்திலிருந்து...



கைதடிப் பிரதேசத்தின் ஒளி விளக்காகத் திகழும் யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் 1910இல் பிரம்ஸ்ரீ குருசாமிக்குருக்களால் ஆரம்பக்கல்விப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டு இன்று மகாவித்தியாலயமாக உயர்ந்து கல்விப் பணியாற்றி வருகின்றது. சைவ பாரம்பரியம் மிக்க, கல்விக்காக தம்மை அர்ப்பணிக்கும் மக்கள் நிறைந்த இப்பிரதேசத்தில் பலர் பல்துறை விற்பன்னர்களாகவும் உயர் பதவிகளை வகிப்போராகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு நற்பிரஜைகளையும், சான்றோர்களையும் உருவாக்குவதில் இப்பாடசாலை அரும்பணியாற்றி வருகின்றது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதற்கிணங்க இப்பிரதேச மக்கள் கல்வியை கண்ணெனப் போற்றி வருகின்றனர்.

இன்றைய நவீன இலத்திரனியல் யுகம் உலகளாவிய ரீதியில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. அதற்கேற்ப எமது பாடசாலையும் கல்வியில் பல அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. அவ்வகையில் நவீனகற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும், இணைபாடவிதானச் செயற்பாடுகளும் மேலும் முனைப்போடு முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லான் அறிவிலாதான்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கமைய நவீன மயமாக்கலுக்கேற்ப பல மாற்றங்களை உள்வாங்க வேண்டியுள்ளது. இதற்கமைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள், பழையமாணவர்கள் என்போர் பாடசாலைக்காக தம்மை அர்ப்பணித்து உழைத்து வருவது மேலும் வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. பத்து தசாப்தங்களின் நிறைவில் நிற்கும் எமது பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் பல இடர்பாடுகளும் காணப்படுகின்றன. அதனால் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவ்வகையில் சாவகச்சேரி, கோப்பாய், யாழ்ப்பாணம் போன்ற நகரங்களுக்கு நடுவில் எமது பாடசாலை அமைந்துள்ளமை, பொருளாதாரவசதியுள்ள மக்களின் நகர்ப்புற நகர்வு, பெற்றோரின் விழிப்புணர்வற்ற நிலை, கணிசமான மாணவர்களின் நகர்ப்புறத்தை நோக்கி நகரும் தன்மை, என்பனவே பாடசாலையின் வளர்ச்சிக்கு சவாலாக உள்ளன.

சி.பவளகுமாரன், அதிபர்.

## வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு விழாக்காணும் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சைவப்பாடசாலைகளை நிறுவவேண்டும் என்ற எண்ணத்தின் பேறாக 1910ஆம் ஆண்டு யாழ். தீபகற்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

இப்பாடசாலை, பிரம்ம ஸ்ரீ குருசாமிக்குருக்களால் தொடக்கப்பட்டு அரசு பொறுப் பேற்கும் வரை கைதடி சைவ ஐக்கிய சங்கத்தினால் நடத்தப்பட்டது. பின்னர் 1983இல் இவ்வித்தியாசாலையுடன் கைதடி மகாவித்தியாலயம் இணைக்கப்பட்டு கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் ஆகியமை பாடசாலை வலையமைப்பின் சிறப்பான உதாரணமாக அமைகின்றது. இந்நூற்றாண்டில் இவ்விததியாலயத்தை மேலும் விருத்தியடையச் செய்ய அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் கல்விச் சமூகத்தினரின் சிறப்பான ஈடுபாட்டினை எதிர்பார்த்து நிற்பதுடன் நூற்றாண்டு விழா சிறப்புற வாழ்த்துவதுடன் வெளியிடப்படும் மலரும் சிறப்பான செய்திகளை தாங்கி வருவதையும் பாராட்டுகின்றேன்.

இ. இளங்கோவன், செயலாளர,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

## தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை



தென்மராட்சிப் பிரதேசத்தில் 1910ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீகுருசாமிககுருக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாடசாலை பின்னர் மகாவித்தியாலயமாகி 1C பாடசாலையாகமிளிர்கின்றது மகிழ்வுக்குரியதாகும். கைதடி குடும்பப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முதன்மையான இடத்தில் விளங்கும் இம்மகாவித்தியாலயத்தின் முன்னேற்றத்தில் இங்கு சேவையாற்றிய அதிபர்களின் சிறந்த தலைமைத்துவமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் பங்களிப்புச் செய்துள்ளன.இப்பாடசாலையின் நூற்றாண்டுவிழாசிறப்புற அமைவதோடு நூற்றாண்டுவிழாமலர்வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். நூற்றாண்டுவிழாவைகாணும் மகாவித்தியாலயம் பல்துறைகளிலும் புகழ்பெற்று நறுமணம் வீசவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கு. பிறேமகாந்தன், வலயக்
கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி



"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனும் பழம் பெரும் உண்மைக்கு ஏற்ப இக்கல்விக் கூடம் கிராமப் புறத்தில் வாழும் வறிய மக்கள் மத்தியில் எழுத்தறிவை அறிவித்துஅவர்களை சான்றோராக்கும் பணியில் நூறு வருடங்களாக உழைத்து வருவதையிட்டு நாம் அனைவரும் மகிழ்கின்றோம்.இக் கல்விப்பணி மேலும் வளர்ந்து, பரந்து, விரிந்து பல்வேறு மாணவர்களுக்கும் உதவஆசிக்கின்றேன்.

மேதகு. கலாநிதி இ. தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ் ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## துணைவேந்தரின் வாழ்த்து



கல்வியே எங்களின் வாழ்வு. அதுவே எங்கள் பண்பாட்டின் இருப்புக்கும் தொடர்ச்சிக்கும் அரணானது.

இந்த வகையில் குடியேற்ற நாட்டாதிக்ககால சுய விழிப்புணர்வில் மலர்ந்தது கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம். நாவலர் பெருமான் வழித்தடத்தில் பிரம்மஸ்ரீ இ.குருசாமிக்குருக்கள் தொடக்கி வைத்த சிறுபுள்ளி படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று நூற்றாண்டு விழா காணும் செய்தி பெறுமதியானது. பாடசாலைக்கென தன் காணிநிலத்தைத் தானமாய் ஈந்த விதானையார் சந்திரசேகரம் முதல் இன்றுவரை இடரினும் தளராது அதனைக் காத்தும் வளர்த்தும் நிற்கும் அனைவரையும் போற்றுதல் நம்கடன். நூற்றாண்டுவிழாப் பெருமைக்குரிய இன்றைய முதல்வர் சி.பவளகுமாரன், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் அனைவருக்கும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன
துணைவேந்தா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு விழாக்காணும் யா.கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்துக்குவாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கைதடியின் முத்தாக சைவப்பாரம்பரியத்துடன் விளங்கும் இப்பாடசாலை கைதடிஇணுங்கித்தோட்ட முருகன் ஆலயத்துக்கு அண்மையாக பிரம்மஸ்ரீ குருசாமிக் குருக்களால்1910ம் ஆண்டு ஒரு சிறிய ஆரம்பப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டு இன்றுஇப்பிரதேசத்திற்கேயுரிய ஒரு தனித்துவமான கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கி 1C பாடசாலையாக தலைநிமிர்ந்து நிற்கின்றது.யாழ்ப்பாணம்இ சாவகச்சேரி எனும் இரு நகரங்களுக்கிடையே இப்பாடசாலைஅமைந்திருந்தாலும் இச்சவால்களையும் தாண்டி பாடவிதான இணைப்பாடவிதானச்செயற்பாடுகளிலும் இப்பாடசாலை பல்வேறு கோணங்களில் வளர்ச்சியடைந்து வருவது பாராட்டத்தக்கது.

இந்நிலையில் பாடசாலைச் சமூகத்தால் கொண்டாடப்படவிருக்கும் நூற்றாண்டு விழாச்சிறப்புடன் நடைபெற்றிடவும் விழாவையொட்டி வெளிவரும் மலர் சிறப்பாக வெளிவரவும் எனது உளப்பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

ப. விக்னேஸ்வரன, மாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

## ஆசிச் செய்தி



யாழ்.கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் தனது நீண்ட கால கல்விப்பணியில் பல தசாப்தங்களைக் கடந்து சாதனைத் தடம் பதித்து, இன்று நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுகின்ற இவ் வேளையில், இவ்வித்தியாலயத்தின் சிறப்பார்ந்த கல்விப்பணிக்காகவும், இலக்கு நோக்கிய எதிர்காலப் பயணத்தில் பயனுறுதியுடன் நடைபயிலவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த நூற்றாண்டின் ஆரம்பிக்கப்பட்டு கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வந்த வேளை, எமது சைவப்பெரியார்களும் சைவமும் தமிழும் தளைத்தோங்கவும், சமுதாயக்கல்வியின் தேவை கருதியும் பல சைவப்பாடசாலைகளை ஆரம்பித்தனர் என்பது வரலாறு.

கடந்த காலத்தில் தென்மராட்சி வலயத்தில் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றிய நினைவுகளை மீட்டிப்பார்க்கும் இவ்வேளையில் இவ்வித்தியாலயத்தின் பெருமை மிகு சாதனைகளும் மனக்கண் முன் விரிகின்றது. இவ் வித்தியாலயம் தாபகரின் கனவை நனைவாக்கும் வகையில், இப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும் பணிகள், அடைவுகள், சாதனைகள் குறித்து பாடசாலைச் சமூகத்துடன் எனது மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்கின்றேன். இவ்வித்தியாலயம் எதிர்காலத்தில் கல்வி ஆன்மீகம், விளையாட்டு, தலைமைத்திறன் விருத்தி, புத்தாக்கவெளிப்பாடு எனப்பல்துறைசார் ஆற்றல் மிக்க மாணவர் சமுதாயத்தின் உருவாக்கத்துக்கு தொடர்ந்தும் தனது பணியினை ஆற்ற வேண்டுமென இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன். இன்று இவ்வித்தியாலய வளர்ச்சிக்காக சிறப்புறச் சேவையாற்றிவரும் அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதுடன், நூற்றாண்டு விழாவையொட்டி வெளிவருகின்ற இச்சிறப்புமலர் காத்திரமாக அமையவும், இப்பணியினை சிரமேற்கொண்ட மலர்க்குழுவினருக்கும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி அ. வேதநாயகம, வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

## வாழ்த்துச் செய்தி



தென்மராட்சியில் முன்னணி வகிக்கும் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலயம், நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் உளமார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன். இப்பிரதேசத்தின் கல்விக்கோர் கலங்கரை விளக்காகி பேரொளி வீசிக் கொண்டிருக்கும் இவ்வித்தியாலயம் மென்மேலும் மேலோங்கி வளர்ந்து சிறக்கவென அதன் நூற்றாண்டு நிறைவு நாளில் பெருவிருப்போடு வாழ்த்துகிறேன்.

இப்பாடசாலை சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையிலிருந்து படிப்படியாக உயரவடைந்து வந்தமையை நான் அறிவேன். இன்று மகா வித்தியாலயமாக உயர்வடைந்து வியக்கத்தக்க வகையில் மிளிர்கின்ற தென்றால், அதற்காக உழைத்த அதிபர்கள், அவர்களுக்கு உறுதுணையாக விளங்கிய ஆசிரியப் பெருந்தகைகள் ஆகியோரின்அர்ப்பணிப்பு நிறைந்த சேவைகளை இச் சந்தர்ப்பத்தில் பாராட்ட வேண்டியுள்ளது. மேலும் இம் மகாவித்தியாலயம் கல்லூரியாக இனிவரும் காலங்களில உயர்வடைந்து பல வெற்றிகளையும் பெருமையும் பெற்று நின்று நிலைக்க எனது உளமார்ந்த வாழ்த்துக்களை பாடசாலை சமூகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சிவானந்தன், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## நூற்றாண்டு விழா வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு காணும் யா.கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தை கல்வியிலும் தகவல் தொழில் நுட்பத்திலும் விளையாட்டிலும் மேலோங்கி வளர வாழ்த்துகின்றேன. இவ் இதழானது மாணவர்களின் பல ஆக்கங்களையும் ஆற்றல்களையும் சிறப்பாக வெளிப்படுத்துவதுடன் அவர்களிடத்தில் காணப்படும் திறனையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அத்தோடு தற்காலத்திற்கு ஏற்ற வகையில் பல அறிவியல் கருத்துக்களையும் துல்லியமான சில தகவல்களையும் தாங்கி நிற்கின்றது. எமது பாடசாலையின் சாதனைகள் மாணவர்களின் சித்தி நிலைகள், விளையாட்டுத்துறைகள், வளங்கள், பிறசெயற்பாடுகள் ஒவ்வொரு ஆண்டும் இடம்பெற்ற மறக்க முடியாத நிகழ்வுகள் என்பனவற்றை ஆவணப்படுத்திப் பார்ப்பதற்கு இந்நூல் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. எமது பாடசாலையானது கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் மேலோங்கி இன்னும் பல நூற்றாண்டுகளை காண்பதற்கு மகிழ்வோடு வாழ்த்துகின்றேன்.

வே.பிரகாஸ, பழைய மாணவர் சங்கச் செயலாளர், யா.கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம்.

## திருமலை வைத்தியசாலைக்கு புதிய அத்தியட்சகர் நியமனம்

கிழக்கு மாகாண பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஈ.ஜி.ஞானகுணாளன் முதலாம் தர வைத்திய அத்தியட்சகராக மத்திய சுகாதார அமைச்சினால் பதவியுயர்வு பெற்று திருகோணமலை பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடந்த திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.

மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவரான டாக்டர் ஞானகுணாளன், இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டமையை சுகாதார திணைக்களத்தினர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

பொது வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், குறைபாடுகள் ஆகியவை சம்பந்தமாகத் தெரிவிப்பதற்கு மொழி ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது.

அப்பிரச்சினைகளை இலகுவான முறையில் தீர்த்து வைக்க மும்மொழிகளும் தெரிந்த ஓர் அதிகாரி தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து பொதுமக்களும் நன்றி தெரிவித்துள்ளனர். (ளி)

# மூவின மக்களும் ஒருங்கிணைந்து இந்நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும்

## திருமலை சந்திப்புக் கூட்டத்தில் பிரதமர் கோரிக்கை

திருகோணமலை, ஒக்.29

மூவின மக்களும் ஒன்று சேர்ந்து நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும் என்று பிரதமரும் பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சருமான டி.எம். ஜயரட்ண திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்புக் கூட்டமொன்றில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

பௌத்த சாசன சமய விவகார அமைச்சர் என்ற ரீதியில் இம் மாவட்டத்துக்கு விஜயம் செய்த அவர் சமயப் பெரியார்களைச் சந்தித்துப் பேசினார். அத்துடன் வழிபாட்டுத் தலங்களை நேரில் சென்று பார்வையிட்டு தேவைகளையும் குறைகளையும் கேட்டறிந்தார்.

கந்தளாயில் பௌத்த சமயத் தலைவர்களையும், கிண்ணியாவில் இஸ்லாமிய சமயத் தலைவர்களையும், திருகோணமலை நகர செயலகத்தில் இந்து சமயத் தலைவர்களையும், திருகோணமலை நகரில் உள்ள புனித சூசையப்பர் கல்லூரியில் கிறிஸ்தவ சமயத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கும் விஜயம் செய்த பிரதமரை அங்கு திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவான சோ.இரவிச்சந்திர குரு சம்பிரதாய பூர்வமாக வரவேற்றார்.

செயலகத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா, புத்த சாசன பிரதி அமைச்சர் எம்.கே.ஏ. டி.எஸ்.குணவர்தன, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரியவதி கலபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்புக் கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றுகையில்,

''மூவின மக்களும் ஒன்று சேர்ந்து நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும். மூவின மக்களும் இன்று சந்தோசமாகவும், சுதந்திரமாகவும் வாழ்கின்றனர். அதற்குக் காரணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.'' என்றார்.

அத்துடன் ஆலயப் பணிகளுக்கான நிதியை காசோலைகளாக வழங்கினார். (ளி)

## இறால்குழி விவசாயிகள் அமைச்சரிடம் கோரிக்கை

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இறால்குழி விவசாயிகள் தாங்கள் நீண்ட காலமாக செய்கை பண்ணி வந்த விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறால்குழி கங்கையைச் சூழவுள்ள பகுதிகளில் வேளாண்மையையும், தோட்டச் செய்கையையும் மேற்கொண்டு வந்த இக்கிராம மக்கள் மீள்குடியமர்வின் பின்னர் அங்கு செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என இம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(ளி)






சம்மாந்துறை அறபா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள். கௌரவிப்பு விழாவில் மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம். இஸ்மாயில் மௌலவி, ஆசிரியர்களான ஏ.எம்.எம்.ஜாபீர், ஏ.பி.பரீதா, எம்.ஐ. ஸமீலா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். அமீன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஐ.ஏ.றகூல், அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி உபபீடாதிபதிகளான யூ.எல்.எம். புஹாரி, ஏ.எல்.எஸ்.ஏ.சத்தார், பிறை வானொலி அறிவிப்பாளர் யூனுஸ் கே.றஹ்மான் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு அலுவலகம் இடமாற்றம்

## மாநகர சபை உறுப்பினர் ஆட்சேபனை

மட்டக்களப்பு,ஒக்.29

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு பிராந்திய உசாத்துணை அலுவலகம் திடீரென திருகோணமலைக்கு மாற்றப்பட்டது, மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு செய்த அநியாயம் என மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் என்.கே.றம்ழான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பிராந்திய உசாத்துணை அலுவலகம் மட்டக்களப்பிலுள்ள கல்லடியில் திறக்கப்பட்டு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக செயற்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த வாரம் இவ்வலுவலகம் திடீரெனத் திருகோணமலைக்கு மாற்றப்பட்டது.

கடந்த ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உத்தியோக பூர்வமாகத் திறக்கப்பட்ட இப்பிராந்திய உசாத்துணை அலவலகம் தற்போது 29 ஆயிரம் பாவனையாளர்களைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்திற்குத் திடீரென மாற்றப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கும் 60 ஆயிரம் பாவனையாளர்களைப் பாதிப்படையச் செய்துள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் பிராந்திய உசாத்துணை அலுவலகத்தில் நிவர்த்தி செய்யப்படவேண்டிய தேவைகளுக்காகப் பாவனையாளர்கள் திருகோணமலைக்குச் செல்லவேண்டிய அவசியமும் இதனால் தற்போது ஏற்பட்டுள்ளது.

இது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அறுபது ஆயிரம் பாவனையாளர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் இழைக்கப்பட்ட ஒரு அநீதியாகும். எனவே, எமது மட்டக்களப்பு மாவட்ட மக்களின் நலனில் அக்கறை செலுத் தியும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற வகையிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மாற்றப்பட்ட பிராந்திய உசாத்துணை அலுவலகத்தை மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் திறப்பதற்கு மாவட்டம் சார்ந்த அனைத்து அரசியல் பிரமுகர்களும் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - எனக் கேட்டுள்ளார். (ளி)

# தோட்டத் தொழிலாளர்களுக்கான தீபாவளி முற்பணத்தில் மாற்றமில்லை

கொழும்பு,ஒக்.29

தோட்டத் தொழிலாளர்களுக்கான தீபாவளி பண்டிகை முற்பணம் அதிகரிக்கப்பட வில்லை - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக வழமை போல 4,500 ரூபாவே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு தீபாவளி முற்பணத்தை 6,000 ரூபாவாக அதிகரித்து வழங்க வேண்டும் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும், தொழிலாளர்களின் தீபாவளி பண்டிகை முற்பணத்தில் எவ்வித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை அடிப்படையில் இம்முறையும் தீபாவளி முற்பண மாக 4,500 ரூபா வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் தீபாவளி முற்பணத்தை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

## பாரதிதாசன் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக மாகாண முதலமைச்சர், ஆளுநரிடம் முறைப்பாடு

கொழும்பு, ஒக்.29

ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கப் பிரிவுச் செயலாளர் எல்.பாரதிதாசன் கைது செய்யப்பட்டமை தொடர்பாக மத்திய மாகாணசபை முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, ஆளுநர் டிக்கிரி கொப்பேக்கடுவ ஆகியோரிடம் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

கண்டி பயங்கரவாதத் தடுப்பு பிரிவு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பாரதிதா சனை விடுவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள என முதலமைச்சரும், ஆளுநரும் தன்னிடம் தெரிவித்தனர் என்றும் முரளி ரகுநாதன் கூறினார்.

எனினும், பாரதிதாசனை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இவர்கள் முன்னெடுக்கத் தவறும் பட்சத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கவனத்திற்கு விடயத்தைக் கொண்டு செல்லவுள்ளார் என்றும் அவர் சொன்னார்.

பாரதிதாசனை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் தலவாக்கலையில் இடம்பெற்றது என்றும் அவர் தெரிவித்தார். (ளி)

# தடயத்தைப் பின்பற்றி தொலைதூரம் சென்று திருடனைக் காட்டிக்கொடுத்த மோப்பநாய்

கொழும்பு,ஒக்.29

மகியங்கனை நகரில் வியாபார நிறுவனமொன்று உடைக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர் மோப்பநாயின் உதவியுடன் கைதுசெய்யப் பட்டுள்ளார்.




சந்தேகநபரின் தடயத்தைப் பின்பற்றி சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் சென்ற பொலிஸ் மோப்பநாய் சந்தேகநபரை இனம் காட்டியுள்ளது.

'ஜெடோ' என அழைக்கப்படும் இந்த மோப்பநாய் மூலம் கொள்ளையிடப்பட்ட பொருள்களும், வாளொன்றும் மீட்கப்பட்டுள்ளன.

இரவுவேளையில் கடையின் பின்புறக் கதவை வெட்டித் திறந்த சந்தேகநபர் அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார். கடைக்காரர் மறுநாள் காலை மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

கதவை வெட்டுவதற்குப் பாவித்த இரும்பு வெட்டும் உளியொன்றை மோப்பம் பிடித்த 'ஜெடோ' அங்கிருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று சந்தேகநபரின் வீட்டைக் காட்டிக் கொடுத்தது. (ளி)

## கழிவறையில் உயிருடன் வீசப்பட்டிருந்த சிசு மீட்பு

### வெலிமடைக் கிராமத்தில்

கொழும்பு, ஒக்.29

வெலிமடைப் பிரதேசத்தில் கழிவறைக்குள் வீசப்பட்டிருந்த சிசு ஒன்று நேற்றுமுன்தினம் காலை அயலவர்களால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கபிலகம என்ற கிராமத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீட்கப்பட்ட சிசு வெலிமடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிசு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் அதன் தாயைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ளி)

## "ரனிகட்" வைரஸ் நோய்க்கு இலக்காகி மத்திய மாகாணத்தில் கோழிகள் இறப்பு

நுவரெலியா,ஒக்.29

மத்திய மாகாணத்தில் தீவிரமாகப் பரவி வரும் 'ரனிகட்' எனப்படும் வைரஸ் நோய்க்கு இலக்காகி அக்குறணைப் பிரதேசத்தில் சுமார் 200 கோழிகள் இறந்துள்ளன என அக்குறணை, ஹரிஸ்பத்துவ பிரதேச கால்நடை வைத்தியர் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

மேல்மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள பண்ணைகளில் சுமார் 1000 இற்கும் அதிகமான கோழிகள் இறந்துள்ளன என்று கால்நடை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நோய்க்கான மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. நோய்ப்பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரேவழி கோழிகளுக்குத் தடுப்பூசி ஏற்றுவதே என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி நோய் பீடித்து இரு வாரங்கள் தொடக்கம் சுமார் ஒன்றரை மாதங்களுக்குள் கோழிகள் இறந்துபோகின்றன.

எனவே, வளர்ப்பாளர்கள் கட்டாயமாக கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றவேண்டும். அதேவேளை, நோய்க்குணம் கண்ட கோழிகளை உடனடியாக அழித்து அதன் பரம்பலைக் கட்டுப்படுத்த வேண்டும் - என கால்நடை வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, மேற்படி நோய் காரணமாக பெருந்தோட்டப் பகுதிகளில் ஆயிரக்கணக் கான கோழிகள் இறந்துள்ளன என தொழிலாளர் கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
மகிழ்ச்சி, உற்சாகம் குடிகொள்ளும் நாள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகிடைக்கலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பெண்களுக்காகச் செலவிடுவீர்கள்.

**இடபம்:**
எந்த வேலையையும் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்துச் செய்வது நல்லது. உறவினர்கள் வருகையால் வழக்கமான சில வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். உடன் பணிபுரிவோரை விமர்சனம் செய்வதைத் தவிர்க்கவும். சோர்வு, சோம்பல் கூடும்.

**மிதுனம்:**
கைநழுவிப் போனதாக நினைத்த காரியம் ஒன்று மீண்டும் கை கூடலாம். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். இளைய உடன்பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சிலருக்கு அவசர உதவி செய்யலாம். மற்றவர்களிடம் உங்களின் செல்வாக்கைக் காட்டுவீர்கள்.

**கடகம்:**
எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். சக ஊழியர்களை நம்பி எந்த காரியத்தையும் செய்ய வேண்டாம். நினைத்த ஒரு பொருளை அலைந்து, திரிந்து வாங்குவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்புகொண்டு பேசலாம். ஆனைமுகன் வழிபாடு ஆறுதல் தரும்.

**சிங்கம்:**
சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சில வேலைகளுக்காக அதிகமாக அலைய நேரிட்டாலும் அதற்கேற்ற ஆதாயம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தின் ஆதரவைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். எதிரிகளின் சூழ்ச்சிகளை தந்திரமாக முறியடிப்பீர்கள்.

**கன்னி:**
தடை, தாமதங்களை முறியடித்து எதிலும் வெற்றி காணும் நாள். தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும். புதிய ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாவதால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:**
பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். பணவரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். அயலாரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். நிலம், பூமி விவகாரங்களில் நினைத்தது நடப்பது தள்ளிப் போகலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள். கனவுத் தொல்லையுண்டு.

**விருச்சிகம்:**
முடிவது போல தோன்றிய காரியம் ஒன்று முடியாமல் போகலாம். உங்களை சிலர் எங்காவது வரச் சொல்லி விட்டு அவர்கள் தாமதமாக வரலாம். நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மதிப்பு கௌரவத்திற்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். மறதியால் அவதியுண்டு.

**தனுசு:**
நினைத்த காரியங்கள் அனுகூலமாக நடக்கும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். பண வசதி படைத்த ஒருவர் மூலம் உங்களின் நிதிப் பிரச்சினை தீரலாம். நாளை நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று இன்றே நடக்கலாம். பெண்கள் சுறுசுறுப்பாகச் செயற்படலாம்.

**மகரம்:**
குடும்பத்தில் கலகலப்புக் குடிகொள்ளும். தெய்வ அருளால் சில நிகழ்ச்சிகள் நடந்ததாக மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். பெண்களால் எதிர்பாராத சிரமங்களுக்கு ஆளாகலாம். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட உறவினர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்:**
வீட்டுத் தேவைகள் அதிகரிக்கும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எதிர்ப்புகள், போட்டிகளால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். புதியவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். அயலார் மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும்

**மீனம்:**
எந்தப் பிரச்சினையையும் தைரியமாக எதிர்கொள்ளும் நாள். ஆதாயமில்லாத அலைச்சல்களைச் சந்திக்க லாம். வர்த்தகர்கள் எதிர்பார்த்த இலாபம் பெற கடும் சிரமங்களுக்கு ஆள்படலாம். முக்கியமான வேலை ஒன்றை உடனே முடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகும். சிலர் தகுதிக்கு மீறி செயற்படுவதை பார்த்து எரிச்சல் அடைவீர்கள்.

# சிறுவர் இலக்கியங்கள் அவர்களை நல்வழிப்படுத்தவே

## நூல் வெளியீட்டு விழாவில் விரிவுரையாளர் லலீசன்

சுன்னாகம்,ஒக்.29

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களை நல்வழிப்படுத்துவனவாக, உயர்விழுமியங்களை, ஒழுக்கப் பண்புகளை புகட்டுவனவாக இருக்க வேண்டும் எனக் கூறினார் கோப்பாய் ஆசிரிய கலா சாலை விரிவுரையாளர் ச.லலீசன்.

கலாபூஷணம் சு.துரைசிங்கம் எழுதிய 5 சிறுவர் நூல்களின் வெளியீட்டு விழா வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திரு மதி சு.முருகநேசன் தலைமை யில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெற்றபோது மதிப்பீட் டுரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

சிறுவர் இலக்கியப் பரப்பு மிகவும் கடினமானது. உலகில் அதிகளவில் பணம் சம்பாதிப்பவர்களாக சிறுவர் இலக்கிய எழுத்தாளர் களே உள்ளனர். ஆனால் இங்கு அவ்வாறில்லை. சிறுவர் இலக்கி யங்கள் சிறுவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டும். உயர் விழு மியங்களை, நல்லொழுக்கங் களைப் பயிற்றுவிக்க வேண்டும். நேர்மனப் பாங்குள்ளவர்களாக அவர்களை உருவாக்க வேண்டும்.

மேலும் உளவியல் கற்றவர்களால்தான் நல்ல சிறுவர் இலக்கியங்களைப் படைக்க முடியும். சிறுவர் இலக்கியப் படைப்பாளி கள் சிறுவர்களின் மனநிலைமைகளை,உணர்வுகளைப் புரிந்து கொண்டு சிறுவர்களாகவே மாறி நின்று எழுத வேண்டும். இலகுவான, எளிமையான மொழி நடையைப் பிரயோகிக்க வேண்டும். கவிஞர் துரைசிங்கம் தனது கல்விப் புல அனுபவத்தினூடாக சிறந்த முறையில் இந்த நூல்களைத் தந்துள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலன் தனதுரையில் கூறியவை வருமாறு:-

சிறுவர் இலக்கியங்கள் பிள்ளைகளின் மென்னுணர்வில், மனப்பாங்கில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இருக்க வேண்டும். அத்துடன் சிறுவர்களை, அவர்களது உள்ளங்களைப் பண்படுத்துவதில் சிறுவர் இலக்கியங்கள் பெரிதும் பங்காற்ற முடியும் எனக் குறிப்பிட்டார்.

மகாஜனக் கல்லூரி ஆசிரியை திருமதி பாகீரதி கணேசதுரையும் இங்கு உரையாற்றினார். மேற்படி நூலை வலி.தெற்கு பிரதேச சபைச் செயலர் திருமதி சு.முருகநேசன் வெளியிட்டு வைக்க சமாதான நீதவான் செ.வைத்தியநாதன் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் வில்லிசைக் கச்சேரியும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

(201-38)




இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் அதிகாரி ஜனாப் எம். சி.எம்.அமீன் தனது நிதியிலிருந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு ஒரு தொகுதி கணினிகளை கலாசாலை அதிபரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# எடைக் குறைப்பு

ஒருவர் சேமிப்பு மிகுந்தவராக விளங்கினார். பணம், பொருள், புகழ் எல்லாம் சேமித்தார்.



அதனுடன் உடம்பில் கொழுப்பையும் சேமிக்க ஆரம்பித்தார். அது எப்படித் தெரியுமா? அதாவது உடல் பருமனாக இருப்பவர்களை ''ஏன் இப்படி பருமனாக இருக்கிறீர்கள்'' என யாரும் கேட்டால் அது ஒன்றும் இல்லை என்பார்கள்.

உடல் பருமனாகிச் செல்கிறது என்றால் அது உண்மையாகவே கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

நாமே நம்மை பரிசோதித்துக் கொள்ளலாம். மார்பளவு, வயது, உயரம் எல்லாவற்றையும் சேர்த்து கூட்டிப்பார்த்தால் இவற்றில் நமது எடை சராசரியாக 10 சதவீதம் அதிகமாக இருந்தால் நமது உடல் ''பருமன்'' தான் என்பதில் சந்தேகமே இல்லை!

அடுத்தபடியாக குனிந்து நிற்கும் போது எமது விலா எலும்புக்கு கீழே உள்ள தோல் ஒரு அங்குலத்துக்குக் கீழ் தொங்கினால் நமது உடல்,பருமன் என்பதில் சந்தேகம் இல்லை.

உணவு உண்ணும் முறையில் சில நுணுக்கங்கள் உண்டு. முதலாவது விடயம் மெதுவாகச் சாப்பிட வேண்டும். இப்படி செய்தால் மூளையிலே இருக்கிறது பசி உணர்வை தூண்டுகிற இடம் பசியைத் தூண்டாமலே மந்தப்படுத்தி விடுகிறது. எனவே அதிகமாக சாப்பிடுவதற்கு முன்பே பசி குறைந்துவிடும்.

இரண்டாவது விடயம், உணவை நன்றாக மென்று சாப்பிட வேண்டும்... அடுத்தவர்கள் பரிமாறச் சொல்லாமலே நாமே தேவையானவற்றை எடுத்துச் சாப்பிட வேண்டும். முதலில் புரத உணவை எடுத்துச் சாப்பிடாது ஏனைய சத்துணவுகளைச் சாப்பிட வேண்டும்.

நம்மில் சிலபேர் உடலைக் குறைத்துக் கொள்வதற்கு மருந்து சாப்பிடுவார்கள். அதனால் பசிக்காது. மருந்தை நிறுத்தினால் பசிக்கும். எனவே மருந்தைவிட மனக்கட்டுப்பாடுதான் முக்கியம்.

உடற்பயிற்சி, நீச்சல், வேகநடை, யோகாசனம் என்பவற்றில் எமக்கு இலகுவானதைச் செய்தால் உடலுக்கு நன்மை தரும். நீராவிக் குளியல் கூட உடம்பு குறைய ஓரளவுக்கு உதவும்.

உடற்பருமனைக் குறைப்பதற்காக ஒருவர் உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தார். அவருக்கு ஏற்கனவே வயிறு மிகவும் பெரிதாக இருந்தது. அதைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என தனது நண்பரிடம் கேட்டார். நண்பர் சொன்னார்.''தினமும் காலையிலே இப்படி வந்து நின்று முழங்காலை மடிக்காமலே குனிந்து உங்கள் கால் கட்டை விரலை தொடுங்கள். சரியாகிவிடும்'' என்றார்.

அதற்கு அவர்'' நான் குனிந்து கால் கட்டைவிரலைத் தொடுவதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால்... என்னோட கால் கட்டைவிரல் எங்கே இருக்குது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை... அதுதான் கஸ்டமாயிருக்கு''என்றார்.

**கோ.சுவாமிநாதன்.**

# கூட்டத்தில் கோவிந்தா... கும்பலில் அரோகரா...

ஒரு பேரரசனின் மகனைச் சூழ்ச்சியாளர்கள் கடத்திக் கொண்டு வந்து பிச்சைக்காரர்கள் கூட்டத்தில் விட்டு விட்டார்கள். அவனும் பிச்சைக்காரனாகவே ஆடிப்பாடி அவர்களுள் ஒருவனாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

இறுதியில் மன்னருடைய பெரு முயற்சியால் அவன் கண்டு பிடிக்கப்பட்டு அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அப்போது அவன் தேர் ஏறும் போது ஒரு மன்னருக்குரிய கம்பீரத்துடன் தாவி ஏறினான். ''எங்களை எல்லாம் மறந்து விட்டாயோ''! என்று பிச்சைக்காரர்கள் அலறியதும். ''இவ்வளவு நாள் நான் தான் என்னை மறந்திருந்தேன்... இப்போது நான் யார் என்று எனக்கு ஞாபகம் வந்து விட்டது... எனவே என்னை அன்புடன் வழி அனுப்பி வையுங்கள்.'' என்றபடி புறப்பட்டான்.



ஞானிகள் இப்படித்தான்... அறியாமைமிக்க கூட்டத்தோடு கூட்டமாய் உல்லாசமாய்த் திரிந்தவர்கள்... திடீர் என்று தாங்கள் பரமாத்மாவின் புதல்வர்கள் என்று உணர்ந்ததும் தங்கள் கூட்டத்தில் இருந்து தனித்துப் புறப்பட்டு விடுவார்கள். ஒரு நிமிடம்... இவர்கள் ஞானம் வந்ததால் கூட்டத்தை விட்டு விலகுகின்றார்களா? அல்லது கூட்டத்தை விட்டு விலகுவது தான் ஞானமா என்பது தெரியாது.

சிலபேர் தனியாக இருக்க விரும்பமாட்டார்கள். எப்போதும் கூட்டத்தோடு இருக்கத்தான் விரும்புவார்கள். இது நல்லதல்ல... நீங்கள் சிறிது நேரமாவது தனியாக இருந்து பாருங்கள். அதன்பிறகு உங்களுக்குள் எத்தனை மாற்றங்கள் நிகழ்கின்றன.

**சுகி.சிவம்.**

# குடாநாட்டில் இளவயதுக் கர்ப்பங்கள்

யாழ்.மாவட்டத்தில் பதின்ம வயதினர் கர்ப்பமடையும் வீதம் அதிகரித்து வருவதாக மருத்துவ வட்டாரங்கள் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளன. அது தொடர்பாக அலசி ஆராய்கிறது இக்கட்டுரை.




## நாம் பார்க்க வேண்டிய மறுபக்கங்கள்

குடாநாட்டில் இப்போதெல்லாம் இளவயதுக் கருத்தரிப்புகள் பற்றிய செய்திகளையும், குப்பைதொட்டிகளுக்குள் குழந்தைகள் வீசப்படுகின்ற சம்பவங்களையும் பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கமுடிகின்றது. அண்மையில் கூட பள்ளிப்படிப்பை இன்னும் பூர்த்தி செய்யாத மகளுக்கு தாய் ஒருவர் திருமணம் செய்து வைத்த சம்பவத்தை நீங்கள் அறிய நேர்ந்திருக்கலாம். கல்வியறிவில் உயர்ச்சியடைந்து, மனித விழுமியங்களில் மகோன்னத இடத்தை அடைந்து விட்டோம் என்று மார்தட்டிக்கொள்கிற நாம் இன்னமும் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் குடும்ப வாழ்க்கைக்கு தயாராக முன்னரே அவர்களைத் தாயார்களாக்கி விடுவதில் அவசரம் காட்டுகின்றோம். இத்தகைய இளவயதுத் திருமணங்கள் பெரும்பாலும் பெற்றோருக்குத் தெரியாமல் பருவ ஈர்ப்பின் காரணமாக இரகசியமாகவும், சிலவேளைகளில் பெற்றோரின் சம்மதத்தோடும் நிகழ்ந்து விடுகின்றன. ஆனாலும் அதனால் பல பின் விளைவுகள் சமூகரீதியாகவும், உடலியல் ரீதியாகவும்(மருத்துவ ரீதியாகவும்) ஏற்படுவதை மறந்துவிடுகின்றோம். ஆண்களை விடவும் பெண்களே உரிய வயதை அடையமுன்னர் நிகழ்கின்ற இளவயது திருமணங்களால் மகிழ்வான வாழ்வினைத் தொலைக்க வேண்டியவர்களாகின்றனர்.

இளமையில் தாயாவதற்கான காரணங்கள், அதனால் உண்டாகும் பிரச்சினைகள், தீர்வுகள் என்பன பற்றி இத்தருணத்தில் நோக்குவது அவசியமாகும். இந்த வேளையில் இளவயது என்ற வகைக்குள் உள்ளடங்குவது எந்த வயதினர் என்ற வினா உங்களுக்கு எழக்கூடும். 13வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட அனைவருமே இந்த இளவயது என்னும் வட்டத்துக்குள் வருகின்றனர். இந்த வயதில் இயல்பாகவே பாலியல் சார்ந்த தன்னெழுச்சி நிலை அவர்களுக்கு இருக்கும். இதனால் வெகு விரைவாகவே பாலியல் சார் நடத்தைகளுக்குள் இவர்கள் இந்தவயதில் வீழ்ந்து விடக்கூடிய அபாயமுண்டு. பெற்றோர் தம் பிள்ளைகள் மீதான அதிதீவிர கண்காணிப்பை இந்த வயதில் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த வருடங்களில் மட்டும் 342 பெண்கள் இளவயதிலேயே தாயாகியுள்ளனர் என்ற தகவலை யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் அண்மையில் வெளியிட்டுள்ளன. இது வைத்தியசாலை வெளியிட்ட ஒரு பதிவு மட்டும்தான். இதனை விட வெளியே தெரியாமல் - வைத்தியசாலைக்கு வராமல்- தாயான இளம் பெண்களின் எண்ணிக்கை இதனை விட அதிகம் எனப் பலரும் கருதுகின்றனர். இதற்குரிய காரணங்களை ஒவ்வொருவரும் தமக்குச் சாதகமான கருத்துக்களை முன்வைக்கவும் செய்கின்றனர். மேற்குலக நாகரீகத்தினை நாம் பின்பற்றவிழைவதாலேயே இத்தகைய இளம்வயதுத் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதோ என்னும் சந்தேகமும் இவ்விடத்தில் துளிர்விடுகின்றது. ஆயினும் மேற்குலகின் நவ நாகரீகங்களை கண்ணைமூடிக்கொண்டு பின்பற்றும் நாம், அவர்களிடத்தே உள்ள நல்ல விடயங்களை - பள்ளிகளில் நடைமுறையில் உள்ள பாலியல் கல்வி போன்றவற்றை - ஏனோ பின்பற்றத் தவறிவிடுகின்றோம்.

இளவயதுக்கர்ப்பங்களுக்கு காதலே



மிகமுக்கியமான காரணி என்று குற்றம் சாட்டப்படுகின்றது. பருவ வயதில் பால் கவர்ச்சி காரணமாக ஆண்,பெண் இருபாலாரும் தம் வயதை ஒத்த எதிர்ப்பாலரின் மீது மையல் கொள்வது வழமை. இது அனேக சந்தர்ப்பங்களில் அதன் எல்லையைத் தாண்டுகின்ற போது தவறான் பாலியல் உறவுகள், இளவயதுக் கர்ப்பங்கள் என்பன ஏற்படுகின்றன, எல்லை தாண்டுகின்ற காதலர்களுக்கு பாலியல் கல்வி உரிய வகையில் புகட்டப்படாமையாலேயே அவர்கள் அவ்வாறான எல்லை மீறல்களுக்குப் பயமின்றிச் செல்கின்றனர். பாலியல் சார் உடற் தகுதியை அடைய முன்னர் ஏற்படுகின்ற இத்தகைய உறவுகளால் ஏற்படுகின்ற பாதிப்புகள் அவர்களுக்கு சரியான வழியில் கிடைத்திருக்குமானால், காதலிக்கும்போது பாலியல் நடத்தைகளில் ஈடுபடுகின்ற இளவயதினரின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும்.

பொருளாதார ரீதியில் அடிமட்ட நிலையில் உள்ள குடும்பங்களில் வருமானம் குறைவாக இருந்தாலும் பிள்ளை களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் குறைவிருக்காது. வருடம் ஒவ்வொன்றும் செல்லச் செல்ல தமது பிள்ளைகளின் எண்ணிக்கையை மட்டும் உயர்த்துவதில் இவர்கள் தவறுவதில்லை. இதனால் குடும்பப் பராமரிப்புக்கு - பிள்ளைகளின் கல்வி, உடை, உணவு, மருத்துவ செலவு போன்றனவுக்கு - பெருந் தொகைப்பணம் தேவைப்படுகின்றது. ஆனாலும் தொடர்ந்தும் வறுமையே இவர்களைப் பின்தொடர்வதால், பொருளாதார ரீதியாகப் பின்தங்கியவர்கள் தமது பிள்ளைகளின் - குறிப்பாகப் பெண் பிள்ளைகளின் - கல்விக்கு இடைநடுவிலேயே முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, எவ்வளவு விரைவாக அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்து, தமது குடும்பப் பாரத்தைக் குறைப்பதில் மட்டுமே குறியாக இருப்பார்கள். இதனை விட பொருளாதார ரீதியில் அடிமட்ட நிலையில் உள்ள குடும்பங்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் மிகநெருக்கமானதாக அமைந்திருக்கும். இது எதிர்ப்பால் இளவயதினரிடையே காதல் என்ற விடயத்தை வெகுவிரைவில் உண்டுபண்ணி விடுவதால், எதிர்காலம் பற்றிய எவ்வித தொலைநோக்கும் இல்லாமல் ஓடிப்போகின்ற கலாசாரமும் தொடர்கின்றது. இதனாலேயே நலன்புரிநிலையங் களிலும், நெருக்கமான குடியிருப்புகள் அமைந்துள்ள கிராமங்களிலும் இளவயதில் கர்ப்பம் தரிப்போரின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதை அவதானிக்கலாம்.

இதனைவிட யுத்தமும் இளவயதுத் திருமணங்களின் அதிகரிப்புக்கு ஒரு மறைமுக ஊக்கியாக இருந்துள்ளது. யுத்தத்தின் போது பலவந்தமாகப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காகவும், படையினரின் கைதுகளில் இருந்து தப்புவதற்காகவும் நிகழ்ந்தேறிய ஏராளமான இளவயதுத்திருமணங்கள் இதற்கு நல்ல உதாரணம்.

தவறான நட்புச் சேர்க்கைகள், ஆபாசத் திரைப்படங்கள், சமூகத்தின் சூழலியல் கட்டமைப்பு என்பனவும் இளவயதுத் திருமணங்களை அதிகரிக்கச்செய்கின்றன. நண்பர்களின் உசுப்பேற்றலாலும், அவர்களின் தவறான வழிநடத்துதல் காரணமாகவும் வாழ்க்கையைச் சரியானபடி கணிக்காமல் மிக இளம் வயதிலேயே திருமண பந்தத்துக்குள் வீழ்ந்து துயரத்தின் பாதையில் பயணிக்கின்றனர். இதனால் அவர்களது பிள்ளைகளும் நல்ல வாழ்வினை அனுபவிக்க முடியாமல், அவர்களும் தம் பெற்றோரைப் போலவே மிக இளம் வயதிலேயே தமக்கான துணையைத்தேடி, இளவயதுத் திருமணம் செய்தவர்களின் பட்டியலில் இணைந்துவிடுகின்றனர். எனவே வாழையடி வாழையாக இளவயதுக் குடும்பஸ்தர்களை உற்பவிக்கும் செயலையே இளவயதுத்திருமணங்கள் ஏற்படுத்துகின்றன. எந்திரன் படத்தில் வருகின்ற ரோபோ தன்னைப்போலவே பல நூறு ரோபோக்களை உருவாக்குவதைப் போலவே இளவயதில் திருமணம் செய்பவர்கள் தாமும் கெட்டு, தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் அழித்து அவர்களையும் தம்மைப் போல, இளவயதில் பாதை மாற வைக்கின்றனர்.

தமது துணை தவிர்ந்த வேறு நபர்களுடன் உறவு கொள்ளல், உடலுறவின் பின்னர் கசந்து விடும் காதல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பனவும் இள வயதுத் தாய்மாரின் வண்ணிக்கை அதிகரிப்பு, சமூகச்சீர்கேடுகளின் பெருக்கம் என்பனவற்றுக்குத் தூண்டுகோலாக அமைகின்றன.

நலன்புரி நிலையங்களிலும்,. நெருக்கமான குடியிருப்புகள் அமைந்துள்ள கிராமங்களிலும் இளவயதில் கர்ப்பம் தரிப்போரின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதை அவதானிக்கலாம்.


திருமணத்துக்கு முன்னரான பாலியல் உறவுகளால் அவர்கள் சமூக ரீதியாக ஒதுக்கப்பட்டு,தனிமையில் வாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் தவறான உறவுகள், திருமணத்துக்கு முன்னர் உடலுறவு கொள்ளல் என்பவறின் மூலம் கருத்தரிக்கும் பெண்கள் தமது மானத்தையும், குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றுவதாக நினைத்துக் கொண்டு, சட்டவிரோதக் கருக்கலைப்பில் ஈடுபடுகின்றனர். இத்தகைய சட்டவிரோதக் கருக்கலைப்புகள் சிலவேளைகளில் உயிராபத்தையும் உண்டுபண்ணுகின்றன. கருக்கலைப்புச் செய்யப்பட்டால், குருதியில் கிருமிதொற்று, பெண்களுக்கு வலிப்பு நோய், அதிகளவான குருதி வெளியேற்றம், தொடர்ச்சியான கருச்சிதைவு ஏற்படுதல், கருப்பைக்கு வெளியே குழந்தை தங்குதல், நிரந்தரமான மலட்டுத்தன்மை என்பன ஏற்படலாம்.

வாணி, நிஷா

சிலர் தற்கொலைக்கும் இத்தகைய சந்தர்ப்பங்களின் போது முயற்சிப்பதுண்டு. மேலும் தவறான உறவுகள் மற்றும் திருமணத்துக்கு முந்திய உடலுறவு என்பவற்றால் பிரசவிக்கப்படும் குழந்தைகள் எங்காவது வீசப்பட்டு விடுகின்றன அல்லது பிரசவிக்கப்பட்ட மறுகணமே காதும் காதும் வைத்ததைப் போன்று கொலை செய்யப்படுகின்றன. இன்னும் சிலர் இவ்வாறு பிரசவிக்கப்படும் குழந்தைகளின் பிறப்புத் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளாதிருந்து விடுகின்றனர்.இதை விட இளம் வயதில் கர்ப்பம் தரிப்பதால் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படவும் இடமுண்டு.

இளம் வயதில் கர்ப்பம் தரிப்பதால் பிரசவிக்கப்படும் குழந்தைகளும் உடல், உளரீதியான பாதிப்புகளை சந்திக்க வேண்டியுள்ளது. மண்டையோடு இல்லாத சிசுக்கள், நிறை குறைந்த பிள்ளைகள், மூளை விருத்தி குறைந்த பிள்ளைகள் , இறந்த நிலையில் பிள்ளைகள் பிறத்தல் என்பன ஏற்படும்.

இத்தகைய இளவயதுக் கர்ப்பங்களைத் தவிர்க்க பாடசாலைகளில் பாலியல் தொடர்பான கல்வியறிவு வழங்கப்படல் வேண்டும். குடும்பத்தினரிடையே பரஸ்பர அன்பு, பாலியல் பற்றிய கலந்துரையாடல், சரியான நட்பு, ஆர்வமேலிட்டால் புகைபிடித்தல், மது பாவனை, ஆபாசத் திரைப்படங்களைப் பார்வையிடல் என்பவற்றைத் தவிர்ப்பதுடன், அவற்றில் ஈடுபடும் நண்பர்களையும் தடுக்கவேண்டும். அத்துடன் அவற்றுக்குத் தூண்டுவோரையும் நல்வழிப்படுத்த வேண்டும். ஊடகங்களும் பாலியல் உணர்வுகளுக் குத் தீனி போடும் நிகழ்ச்சிகளைத் தவிர்த்து பாலியல் சார்ந்த சமுதாய விழிப் புணர்வுக்கு வழிகாட்டும் நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும். இவையே இளவயதுக் கர்ப்பங்களைக் குறைப்பதற்கான வழிகளாக அமையும்.



# 31ஆம் நாள் நினைவலைகள்

## அமரர்
## வினாசித்தம்பி ஜெயராஜா



மலர்வு
30
.
05
.
1950

உதிர்வு
29
.
09
.
2010


பெற்றவர்கள் பாராட்டும் மக்கள் ஈன்று
கல்வி எனும் மதுரம் அதை அள்ளிவார்த்து
பெற்றெடுத்தால் இவர் பிள்ளை போல மண்ணில்
பெற்றெடுக்க வேண்டும் எனும் பெருமை ஈர்ந்து
விற்பன்னராய் வணிகமதில் பொருளும் ஈட்டி
வாழவைத்து வழிகாட்டி விழியாய் நின்று
நற்றவம் சேர் மனைவிக்கு நல்கணவனாக
நீர் வாழ்ந்து சென்றீரே! புனிதமாக.....!

இன்று (29.10.2010) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

இல.422, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 1006

# மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்



அமெரிக்க மிஷனரியினர் கிராமம் கிராமமாக தமது மதத்தினை வளர்க்கும் நோக்குடன் பாடசாலைகளை அமைத்து வந்த காலத்தில் மீசாலைப் பகுதியில் வாழ்ந்த சைவ மக்கள் சைவ பாடசாலையினை அமைக்க முற்பட்டனர்.

ஊரில் உள்ள பிரமுகர்கள், கல்வி மான்கள், அபிமானிகள் அனைவரும் ஒன்று கூடி ஆலோசனை புரிந்ததன் பயனாக இவ்வித்தியாலயம் ஆரம்பமாகியது மேற்படி ஆலோசனைக்குழுவின் முக்கியஸ்தர்களாக சி.சிதம்பரப்பிள்ளை, சி.செல்லையா, ச.கார்த்திகேசு, க.நாகலிங்கம், பொ.அருளம்பலம் ஆகியோர் செயலாற்றினர்.

பாடசாலை அமைப்பதற்கான காணியொன்றினை தேடும் பணியினை ஆரம்பித்த வேளையில் அல்லாரை வாசியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபரும் சமூகத்தொண்டனுமாகிய கை.செல்லையா என்பவர் தற்போது வித்தியாலயம் இயங்கும் காணியினை நன்கொடையாக வழங்கினார். இக்காணியில் தற்காலிக பாடசாலை நிறுவப்பட்டது.

அமெரிக்க மிஷன் பாடசாலை அமைந்திருந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் வித்தியாலயம் நிறுவப்பட்டது. ஆரம்ப நாளன்றே 27 மாணவர்கள் இணைந்து கொண்டனர். வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியர் சி.சிதம்பரப்பிள்ளையும் உதவி ஆசிரியர்களாக சி.செல்லையா, ச.கார்த்திகேசு, க.நாகலிங்கம், பொ.அருளம்பலம் ஆகியோரும் வேதனமின்றி பணியாற்ற முன்வந்தனர்.

பாடசாலை வளர்ச்சியில் மீசாலையூர் மக்களின் அபார முயற்சியினால் தற்காலிக பாடசாலையானது நிரந்தரக் கட்டடமாக, கற்றூண்களின் பொருந்திப் பூர்த்தியாக்கப்பட்டது. இலங்கைச் சட்டசபை உறுப்பினராக விளங்கிய சு.நடேசு அவர்களால் 1932 மார்ச் 31 ஆம் திகதி புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டு அதே ஆண்டு செப்ரெம்பர் ஐந்தாம் திகதி உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அரசினரினால் அங்கீகாரம் பெற்றது.

தலைமை ஆசிரியர் சி.சிதம்பரப்பிள்ளையும் உதவி ஆசிரியர்களாக பணிபுரிந்த தோடும் மேற்கொண்ட கற்பித்தல் நடவடிக்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளால் பாடசாலையில் இணையும் மாணவர்களின் தொகை வருடாவருடம் அதிகரிக்கத் தொடங்கியது. கல்வி நிலையிலும் மோலோங்கிச் சிறப்புற்றது

திரு.சி.சிதம்பரப்பிள்ளை வேறு பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக இடமாற்றம் பெற்றுச் சென்றபின்னர் மு.கந்தையா, சி.சின்னத்துரை, க.முருகேசு ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக தலைமை ஆசிரியர்களாக பணிபுரிந்து கல்வி மேம்பாட்டுடன் பாடசாலை பௌதீக வளத்தினையும் மேம்படுத்தினர்.

1945 அக்டோபர் முதலாம் திகதி பண்டிதர் சி.கா.தம்பையா தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பாடசாலையின் கல்வித்தரம் மிகவும் உன்னத நிலையில் சிறப்புற்று விளங்கியது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று வேலை வாய்ப்பின்றித் தவித்த மாணவர்களை பயிற்சி ஆசிரிய கலாசாலைப் புதுமுக பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற வைத்த பெருமை பண்டிதரைச்சாரும்.

1971 மே ஆறாந் திகதி பாடசாலையின் அதிபராக ச.அ.நாகராசா பொறுப்பேற்ற பின்னர் மாணவர்கள் தொகைக்கேற்ப கட்டடங்கள் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். பெற்றோர், பழையமாணவர், கல்வித்திணைக்களம் ஆகியோரின் உதவியுடன் ஆரம்பப் பிரிவுக்கான கட்டடம் அமைக்கப்பட்டது. ச.அ.நாகராசா அவர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெற்றதையடுத்து வரணி மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய எஸ்.என்.இராசநாயகம் புதிய அதிபராக 1975.06.15 இல்பதவியேற்றார். இவரது காலத்திலேயே பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்ததை ஊர் மக்கள் மறக்கவில்லை. அமெர்க்கன் மிஷனரியினரால் நடத்தப்பட்டு வந்த பாடசாலை செயற்படாமல் இருந்ததால் அப் பாடசாலைய்ய வித்தியாலயத்துடன் இணைக்க வித்தியாலயத்தில் பணிபுரிந்த அதிபர்கள் மேற்கொண்ட முயற்சிகள் இராசநாயகம் அதிபராக இருந்த காலத்தில் நிறைவேறி இரு பாடசாலைகளும் 1976மே முதலாம் திகதி ஒன்றினைக்கப்பட்டன.

பல்கிப் பெருகிய மாணவர் தொகைக்கேற்ப கட்டட வசதிகள், தளபாடங்கள் உபகரணங்கள் ஆகியவை உடனடியாகத் தேவைப்பட்டன. தேவைகளின் அடிப்படையில் விஞ்ஞான ஆய்வுகூடம், கலைவாணி மண்டபம், மனையியற்கூடம், ஒன்றினைந்த பாடத்திற்குரிய வகுப்பறைகள், விவசாயகூடம், ஏனைய தொழிற்பாட ங்களுக்குரிய வகுப்பறைகள் ஆகிய னவும் பிறவும் நிறுவப்பட்டன.

(தொடரும்)

# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சைவமக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்த மட்டுவில் பகுதியில் புகழ்பெற்ற ஆலயமாக காணப்படுவது பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தில் அனைத்து இடங்களிலும் பொங்கல் செய்வதற்குரிய கற்கள் இருப்பதால் மக்கள் உடனுக்குடன் அடுப்புகளில் காலை தொடக்கம் மாலை வரை பொங்கல் செய்ய முடிகிறது.

பங்குனித்திங்கள் பொங்கல் தினங்களில் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பாட்டுக் காவடிகள், ஆட்டக்காவடிகள், பறவைக்காவடிகள், பால் செம்பு, கற்பூரச்சட்டி போன்றவை ஆலய வீதிகளை காலை முதல் மாலை வரை அலங்கரிக்கும்.

பொங்கலுடன் கஞ்சி ஊற்றல், அன்னதானம் போன்றவையும் வருடாவருடம் இடம்பெற்று வருகிறது. ஆலய நிர்வாகத்திடம் உள்ள காணி உறுதியொன்றின் மூலம் 62 பரப்பு 2 குழி கொண்ட காணியின் உறுதியில் உள்ள எல்லைகள் தற்போது உள்ளன.

தற்போது ஆலயம் அமைப்பதற்கு முன்னர் ஆலயத்தின் வடக்குப் புறத்தில் இருந்திருக்க வேண்டும். அதற்கான செங்கல் கட்டட வழிபாடுகள் இன்னும் காணப்படுகின்றன. ஆலய வளாகத்தில் உள்ள பிள்ளையார், முருகன் ஆலயங்கள் ஆரம்பகாலம் தொடக்கம் அந்த இடத்திலேயே இருந்துள்ளதாக கூறப்படுகிறது.

1750 ஆம் ஆண்டு நாகர் கதிர்காமம் வைரக்கற்களைக் கொண்டு தற்போதுள்ள ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் செங்கற் கட்டடம் நாகர் கதிர்காமரின் முன்னோர்களால் கட்டியிருக்கலாமென நம்பப்படுகிறது.



இவ் வாலயத்தில் உள்ள கண்ணகை அம்பாள் வராக முகம் கொண்டிருந்தால் பன்றித்தலைச்சி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாமெனவும், அடியார் ஒருவரின் பக்தியை வெளியுலகுக்கு கொண்டு வரும் பட்சத்தில் புதைக்கப்பட்ட மாட்டுத் தலையை பன்றித் தலையாக மாற்றியதால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.



இந்தியாவிலே மதுரையில் மீனாட்சி, காஞ்சியில் காமாட்சி, காசியில் விசாலாட்சி, கன்னியாகுமரியில் பகவதி என்பன சக்தி ஆலயங்களில் பிரபல்யமானவை. அதே போன்று இலங்கையிலும் நயினாதீவு நாகபூசணி, யாழ்ப்பாணத்தில் வீரமாகாளி, வற்றாப்பளையில் கண்ணகை, தெல்லிப்பழையில் துர்க்கை என்பவற்றுடன் தென்மராட்சியில் மட்டுவில் பன்றித்தலைச்சி சுட்டிபுரம், மண்டுவில், கச்சாய் போன்ற இடங்களில் கண்ணகை அம்பாளாகவும் அருள்பாலித்து வருகிறார்.

தொகுப்பு: ஐயந்தன்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயம் 1750 ஆம் ஆண்டு அமைத்த நாகர் கதிர்காமர் தாமே பரா மரித்து பூஜைகளையும் செய்து வந்தார். அவரின் பின்னர் அவரது சந்ததியினரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

1892 இல் இவ்வாலயம் யாழ்ப்பாணம் கச் சேரியில் உள்ள பதிவில் கதிர்காமர் தியாகராஜா என்பவரின் பெயரில் உள்ளது.

1900 ஆம் ஆண்டில் வேலாயுத உடையார் கதிர்காமரின் ஆலய நிர்வாகத்தினை நடத்திய காலத்தில் பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவமும் ஆரம்பிக் கப்பட்டு பி.ப. 5 மணிக்கு முன்னர் சுவாமி வீதி வலம் வருவதும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதே அம்பாள் ஆலயத்திற்கான பூஜைகளை பிராமணர் செய்ய வேண்டுமென விதிக்கப்பட்டது. அதற்கு முன்னர் அம்மனுக்கான பூஜைகளை நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்களும் பிள்ளையார், முருகன், வைரவர் ஆகியவற்றுக்கான பூஜை களை பிராமணரும் மேற்கொண்டு வந்தனர். அக்காலத்திலேயே அப்பகுதியில் காணப்பட்ட குளம் வெள்ளைக் கற்களால் படிக்கற்கள் கட்டப்பட்டன.

1919 இல் கதிர்காமரின் மகள் சின்னக்குட்டியும் அவரது கணவர் சின்னத்தம்பி சின்னப்பாவும் 1934 ஆம் ஆண்டு இவர்களது மகன் செல்லத்துரையும் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர்.

சின்னப்பா செல்லத்துரையின் நிர்வாக காலத்தின் ஆலயத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவரது காலத்திலேயே பிரதி திங்கள் கிழமைகளில் இரண்டு நேரப் பூஜைகள் நடத்தப்பட்டதுடன் ஏனைய நாள்களில் அபிஷேகமும் விளக்கு வைத்தலுமென இருந்து வந்த நடைமுறையினை 1939 ஆம் ஆண்டு தொடக்கம் தினமும் இரண்டு நேர நித்திய பூஜை செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினர்.

1939 இல் ஆலயத்திற்கான வெளி மண்டபத்தினையும் 1940-1942 காலப்பகுதியில் அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபை மண்டபம், தரிசன மண்டபம் ஆகியவை அமைக்கப்பட்டன.

1943.07.18 ஆம் திகதி நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற சின்னப்பா சிவகுரு மேலும் சில மாற்றங்களை ஏற்படுத்தினார்.அதுவரை காலமும் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி அம்மனுக்கு பூஜை செய்யும் வழக்கத்திற்கு முடிவு கட்டி 1940 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் கண்ணகை அம்மன் தாமிர விக்கிரகம் பிரதிஷ்டை செய்து முதலாவது மகா கும்பாபிஷே கத்தை நடாத்தியதுடன் அவ் வருடமே மார்கழி திருவெம்பா வையில் கொடியேற்றத் திருவிழாவையும் முதன் முறையாக ஆரம்பித்து வைத்தார்.

1949 இல் சுற்றுமதில் வைரவர் கோவில்யாக மண்டபம், மணிக்கோபுரம் போன்றவற்றுக்கான அத்திவார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

(தொடரும்)

தென்மராட்சி வலம்

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பொருட்கள்
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குணரத்தினம் இராசம்மா

மலர்வு 14★09★1933

உதிர்வு 21★10★2008

திதி: ஸப்தமி (29.10.2010)


காலமெல்லாம் நம்மை சீரோடு வாழவைத்த தெய்வமே!
காலனவன் தன் கடன் தீர்க்க அழைத்தானோ உம்மை
ஆலமரமாம் உம் நிழலில் நாம் இருந்தோம் ஆனந்தமாய்
சோலைவனம் இங்கு பாலை நிலமாகிக் கிடக்கிறது.

தற்காலிக முகவரி:-
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
நிரந்தர முகவரி:-
கிளானை, கொல்லங்கலட்டி. (சி/572212)

தங்கள்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# இரண்டாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 14 . 05 . 1963



இறைவன் அடியில் 21 . 10 . 2008

சிவசுப்பிரமணியம் சிவநேசன்

(29.10.2010)

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் தெய்வமே!
ஈராண்டு ஓடி மறைந்தாலும் ஆறாது எங்கள் துயர்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
(105207)

வை.சிவசுப்பிரமணியம் (தந்தை)
மற்றும் குடும்பத்தினர்.

## வைத்தியசாலைகளுக்கு புதிய மருந்தாளர்கள்

தென்மராட்சி, ஒக். 29

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சினால் 12 மருந்தாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட எம்.எச். எம். ஹணா கடந்த செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (த-207)

## சர்வதேச சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 29

சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின விழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் கழகத் தலைவர் அ.அஜித் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கழகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (204- 15)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஒக். 29

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய நிறுவுநர் நினைவுதினமும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் ஆறுமுகம் கிரிதரன் கலந்து கொள்வார். நிறுவுநர் தின உரையை பிரபல பௌதீகவியல் ஆசிரியர் ஜே. சந்திரப்பிரகாசம் நிகழ்த்துவார். (204- 236)

## கோப்பாய் கோட்டத்துக்கு புதிய அதிகாரி நியமனம்

அச்சுவேலி, ஒக். 29

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் புதிய கோட்டக்கல்வி அதிகாரியாக அச்சுவேலி மத்திய கல்லூரியின் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரியாக ஓய்வுக்குப் பின்னரும் கடமையாற்றிய வரும் சின்னத்தம்பி சித்திரவடிவேலுவின் சேவை நீடிப்பு நவம்பர் 19ஆம் திகதியுடன் முடிவடைவதால் நவம்பர் நடுப்பகுதியில் புதிய கோட்டக் கல்வி அதிகாரி பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த - 11)

## கருத்தரங்கு

பருத்தித்துறை பிரதேச சபை பப்ளிக் பொது நூல் நிலையத்தில் வாசிப்பு மாதத்தையொட்டி எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இளைப்பாறிய யாழ். செயலக தலைமை உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை உரையாற்றுவார். (த-236)


**விற்பனைக்கு**

புதிய சொப்பிங் பாக் தயாரிக்கும் மெஷின் விற்பனைக்குண்டு.
தொடர்பு இல:- 400, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212226634, 0778736561


**தவறிவிட்டது**

171/1, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜொனி எல்மோ என்பவரது காணி உறுதி, தாய் உறுதி மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கோவை (File) 27.10.2010 புதன்கிழமை யாழ்.மாநகரசபை அலுவலகத்திற்கும் நல்லூர் கோயில் பின்வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே:- 0212225126

# கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் கிளையில் பணிபுரியும் நகேந்திரம் நவதாசன் அவர்களின் தந்தை

**தம்பிப்பிள்ளை நாகேந்திரம்**

[ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வையாளர், பிரதேச சபை, சுன்னாகம்]

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
கோப்பாய்.
(105242)

உதவித்திட்டமிடல் பணிப்பாளரும், திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்களும்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
O.P.M.C. முகாமையாளரான
திரு.நா.நவநீதன்
அவர்களின்
அன்புத் தந்தை

**தம்பிப்பிள்ளை நாகேந்திரம்**

(ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வையாளர், பிரதேச சபை, சுன்னாகம்)

அவர்களின் மறைவையொட்டி துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலங்கா ரெலிகொம்,
யாழ்ப்பாணம். (105236)

ஊழியர்கள்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 05 . 1948



மறைவு 29 . 10 . 2006

அமரர் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

(பிஸ்கால் உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

திதி: 13.11.2010

அன்புத் தெய்வமே! உங்கள் வழிகாட்டலிலே,
உங்கள் நினைவுகளோடு வாழ்ந்து வரும்
எங்களுக்கு என்றும் துணையாய் இருந்து
நல்லாசி அருள வேண்டி நிற்கின்றோம்

இல.70, அம்மன் வீதி,
நல்லூர்.
(105244)

மனைவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்
(மாதகல்).


abe

**A Mega Seminar**

on

The Association of Business Executives(ABE) - U.K. Programs

for those who are waiting for A/L results, degree holders and others

Admission Free

A Presentation (in Tamil and English)

will be delivered by

A Member of the Association of Business Executives(U.K.)

Venue: Jaffna Central College (Romaine Hall)

Date: 31st October, 2010 Time : 3.30 PM - 6.30 PM

Seminar organised by:
ABE (U.K.) - Sri Lanka Branch
T.P.: 011 - 5749743

Seminar coordinated by:
Gateway - Jaffna Branch
347, Kasthuriyar Road, Jaffna.
Tel : 0215675555, Fax : 0212227967

Thousands of students are currently studying towards an ABE qualification and many of them will use their qualification as an affordable, fast-track route to a globally recognised bachelor's degree or an MBA programme.

ABE works with over 500 accredited colleges in 100 countries worldwide to deliver Certificate, Diploma, Advanced Diploma and Postgraduate Diploma level qualifications.

There are exemption arrangements with other professional bodies including ACCA, CIMA and BCS.

ABE self-study program is introduced in Jaffna first time.

More than 50% of the ABE students are studying self-study mode globally.

Students who want to join on a part - time ABE program in Colombo or a full - time ABE program in U.K. at colleges (A) rated by the British Home Office, will be given due advice and consultancy by the Member of the Association of Business Executives(U.K.).

For further details on ABE, please contact via:

071 - 5213154

Participants will be given 10% discount for all the courses at Gateway

www.abeuk.com

# புதிய கவசம் தரித்த சூரர்கள்

## இலங்கை கிரிக்கெட் குழுவினை 'எமரெல்ட்' கம்பீர ஆடையால் மெருகூட்டியுள்ளது

இலங்கை கிரிக்கெட் குழுவினர் தமது அவுஸ்திரேலிய போட்டித்தொடரில் பங்கேற்க புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இப்போட்டி தொடரின் போது அணிவதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட போட்டி ஆடைகள் அனைவரதும் கவனத்தை கவர்ந்தது. முதன் முறையாக இலங்கை கிரிக்கெட் குழுவினர் சம்பிரதாயபூர்வ போட்டி ஆடைகளுக்குப் பதிலாக விசேடமாக கவனம் செலுத்தி தயாரிக்கப்பட்ட ஆடையினை அணிகின்றனர். சம்பிரதாயமான வெள்ளை நிறம் அப்படியே இருக்க தேசிய சிங்கம் பொறிக்கப்பட்டு இரண்டு தேசியக் கொடிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கையின் சூரர்களை வலிமையை வெளிப்படுத்தும் இந்த ஆடைகளில் '2010 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா சுற்றுலா' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது.



இலங்கை அணியின் உத்தியோகபூர்வ போட்டி ஆடை வழங்குனராக 'எமரெல்ட்'டினை அறிவிக்கும் அங்குரார்பண நிகழ்வில் தலைவர் சங்ககங்கார கருத்து தெரிவிக்கையில் ''எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் நாம் சிறப்பாக தோற்றுமளிப்பது விசேடமாக வெளிநாடுகளில் மிகவும் முக்கியம். 'எமரெல்'டுடன் அது நிச்சயம் சாத்தியமாகும்'' என தெரிவித்தார். 'எமரெல்'டினை தெரிவுசெய்தது மிகச் சரியான தெரிவு என்பதை இப் போட்டி ஆடைகள் உணர்த்தும் - என்றார்.

புதிய தயாரிப்பு மற்றும் எதிர்கால நோக்கம் பற்றி அறிய எமரெல்ட் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ரிமாஸ் மர்சூக்கினை நாடியபோது, மிகவும் நம்பகரமான வர்த்தக நாமமாக உலகம் எம்மை அறிந்து வைத்துள்ளது. நாகரீக உலகிலும் நாமே சிறந்த வர்த்தக நாமமாக திகழ்வோம். அதற்கான வளங்களை நாம் கொண்டுள்ளோம். அவுஸ்திரேலியா சுற்றுலாவிற்கான போட்டி ஆடை பற்றி கருத்து தெரிவிக்கையில் 'நிச்சயம் இது ஞாபகங்களில் பதியும். எனினும் குறிப்பிட்டளவிலான கையிருப்பே எம்மிடம் உள்ளன. இலங்கை முழுவதும் உள்ள பிரதிநிதிகள் ஊடாகப் பெறலாம்'' என தெரிவித்தார்.

இரண்டு சர்வதேச உள்நாட்டு நாமங்கள் ஒன்றையொன்று தாங்கி உதவிபுரிந்து சர்வதேசத்துடன் போட்டியிடுவது எமரெல்ட் நிறுவனத்துக்கு மாத்திரமன்றி முழு இலங்கை மக்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். (த)

# வெற்றிக்கு வழிவகுக்கும் கலாஞ்சலி சாரீஸ்

எப்படி ஆடை அணிகின்றோம் என்பதில்தான்எமது வாழ்க்கைபற்றிய ரசனையே ஆரம்பிக்கின்றது.

நேர்த்தியாக சேலை அணியும் பெண்களுக்காகவே கலாஞ்சலி சாரீஸ் ஆரம்பிக்கப்பட்ட கலாஞ்சலி சாரிஸ் இல் மிகவும் Exdusive ஆக தெரிவுசெய்யப்பட்ட சேலைகளே இடம்பெற்றுள்ளன. காலநிலை, எமது உடல்வாகு, நிறம், இடம் என்பனவற்றிற்குஏற்பசேலைகளைத் தெரிவு செய்து கலாஞ்சலி தருகின்றது.

எமது காலநிலைக்கு ஏற்ற Cotton சேலைகள் அதிகமாகவும் பெங்கால் கொட்டன், ஆந்திரா கொட்டன், மங்களகிரி, ஒறிசா, மதுரை என இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் கொட்டன் சேலைகளும். ரசூர் சில்க் சிற்றொன் மற்றும் கிரேப், றோஸ் சில்க், காஷ்மீர் போன்ற சேலைகளும் மற்றும் அன்றாட அலுவலக மகளிருக்கான மலிவான சேலைகளும் கலாஞ்சியில் உள்ளது.

உங்களைத் தனித்தன்மையுடன் காட்டுவதற்கு கலாஞ்சலி சேலைகள் உதவுவது மட்டும் அல்ல அதுவே உங்கள் வெற்றிக்கு வழிவகுக்கும். (த)



சாவகச்சேரி சிலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் ஆயுள் காப்புறுதி பெற்றிருந்த மீசாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பொன்சேகரா தனங்கிளப்பில் இடம் பெற்ற தவறுதலான குண்டு வெடிப்பில் அகாலமரணமானதையை அடுத்து இழப்பீட்டுத் தொகையையாக 3 லட்சத்து ஒன்பதாயிரத்து எழுபது ரூபா அண்மையில் வழங்கப்பட்டது. இக் காசேலையை முகாமையாளர் வி.சுதர்சன் வழங்குவதையும், அருகில் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி கே.பிரதீபன், விற்பனை ஆலோசகர் க.அஜந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வெளிநாட்டு மருந்தாக்கல் கலைஞர் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு சிறந்த வழிகாட்டி நூல்

வெளிநாட்டு மருந்தாக்கல் கலைஞர்களுக்கான பரீட்சையை (External Pharmacists Examination) இலங்கை வைத்தியக் கல்லூரி நடத்திவருகிறது. அந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தம்மைத் தயாரிப்படுத்துவோருக்கு வழிகாட்டும் சிறந்த நூல் ஒன்றை இலங்கை மருந்தாக்கல் சங்கம் (Pharmaceutical Society of Sri Lanka) தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

இதில் உள்ள ஒரு விசேஷம் என்னவென்றால் இந்த நூலைத் தயாரிப்பதற்கு கிளாக்ஸோஸ்மித் கிளைன் (GSK) என்ற பிரபல்ய மருந்தாக்கல் நிறுவனம் தனது மருத்துவக் கல்வித் திட்டத்தின் கீழ் தனது மருத்துவ நிபுணர் ஒருவரைக் கொடுத்து உதவியது ஆகும்.

அவரின் ஆலோசனைகளுடனேயே இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்த அனைவருக்கும் இந்த வழிகாட்டி நூல் இலவசமாக விநியோகிக்கப்படவிருக்கிறது.

176 பக்கங்கள் கொண்ட நூல் இது. இதில் 2000ஆம் ஆண்டு மார்ச் முதல் 2008ஆம் ஆண்டு ஜூலை வரை நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மருந்தாக்கல் நிலையங்களில் (Phamacys) மருந்துகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 39 செய்முறைக் கணக்குகளும் அவற்றுடன் குறிப்புகளும் நூலில் தரப்பட்டுள்ளன.






மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளையின் சேவை நிலையம் அண்மையில் உடுப்பிட்டியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளர் பி.வி.பத்திரான மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம். (த)

# அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் சென்னை, பெங்களூர், அகமதாபாத்

உலகில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களின் பட்டியலில் இந்திய நகரங்களான சென்னை, பெங்களூர், அகமதாபாத் ஆகியன இடம்பெற்றுள்ளன.

அதேவேளை, அமெரிக்காவின் சிக்காகோ நகரம், ஜேர்மனியின் பேர்ளின் நகரம் ஆகியன வளர்ச்சி குறைந்து வரும் நகரங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் மிகவும் பிரபலமான, 'போர்ப்ஸ்' பத்திரிகை உலகில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும், அடுத்த தலைமுறைக்கான நகரங்களைப் பற்றி ஆய்வு செய்து, 19 நகரங்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில்தான் இந்திய நகரங்களான பெங்களூர், அகமதாபாத், சென்னை ஆகியவை இடம்பிடித்துள்ளன.

இன்போசிஸ், விப்ரோ போன்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மையமாக விளங்கும் நகரம் என்ற அடிப்படையில் பெங்களூர் பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

அடுத்ததாக, இந்தியாவின் மற்ற நகரங்களை விடத்தனி நபர் வருமானம் இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது என்ற அடிப்படையில், குஜராத்தின் அகமதாபாத் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

இந்தாண்டில் மட்டும் ஒரு லட்சம் வேலை வாய்ப்புகளை அளித்த நகரம் என்ற அடிப்படையில், சென்னை பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சியில் இந்த மூன்று நகரங்களின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் இருக்கும் என்றும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பட்டியலில் சீனாவின் நான்கு நகரங்களும் வேகமாக வளர்ந்துவரும் நகரங்கள் என்று இடம்பிடித்துள்ளன.

இவை தவிர, மெல்போர்ன், டெல் அவிவ், கோலாலம்பூர், அபுதாபி, சாண்டியாகோ, உள்ளிட்ட நகரங்களும் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளன.

நியூயோர்க், லண்டன், பாரிஸ், டோக்கியோ, மும்பை, மெக்சிகோ உள்ளிட்ட நகரங்கள், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பெர்ளின், சிக்காகோ உள்ளிட்ட நகரங்கள், வளர்ச்சி குறைந்துவரும் நகரங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# எயார்ரெல் சேவை வடக்கிற்கும் விஸ்தரிப்பு நாடு முழுவதும் 25,000 சேவை நிலையங்கள்

எயார்ரெல் சேவைகள் தற்போது வட இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் எயார்ரெல் வலையமைப்பு விரிவாக்கப்பட்டுள்ளது. வலையமைப்பின் கீழ் அப்பிரதேசங்களையும் உள்ளடக்கும் பணியை எயார்ரெல் பூர்த்திசெய்துள்ளது.

தற்போது ஏ-9 நெடுஞ்சாலையையும் எயார்ரெல் தனது வலையமைப்பின் கீழ் உள்ளடக்கியுள்ளதன் மூலமாக இலங்கையில் உள்ள அனைத்துப் பிரதான நெடுஞ்சாலைகளையும் அது இணைக்கின்றது.

அகில இலங்கை மட்டத்திலே எயார்டெல்லின் விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவை தொடர் நிலையங்களின் எண்ணிக்கை 25,000 இற்கும் மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களிலுள்ள 19 நாடுகளிலே எயார்ரெல் தொழிற்பட்டு வருகின்றது. உலகின் முன்னணி தொலைத்தொடர்பாடல் நிறுவனங்களுள் ஒன்றான பார்தி எயார்ரெல்லின் ஒரு துணை நிறுவனமாக பார்தி எயார்ரெல் லங்கா நிறுவனம் இலங்கையில் சேவையாற்றி வருகிறது.

Air tel

வடமாகாணத்திற்கும் தனது சேவைகளை விஸ்தரிப்பதனை இன்று அறிவித்துள்ளது. தற்போது யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள வாடிக்கையா ளர்களுக்கும் சேவையளிப்பதன் மூலம் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கும் தனது வலையமைப்பினை விஸ்தரிக்கும் பணியை எயார்ரெல் பூர்த்திசெய்துள்ளது.

வடக்கினை இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பிரதான நெடுஞ்சாலையான ஏ-9 இனையும் தற்போது தனது வலையமைப்பின் கீழே கொண்டு வந்துள்ளதன் மூலமாக நாட்டிலுள்ள அனைத்துப் பிரதான நெடுஞ்சாலைகளையும் எயார்டெல் தற்போது இணைக்கின்றது.

பார்தி எயார்ரெல் லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அமாலி நாணக்கார கூறியவை வருமாறு:-

''வட இலங்கை மக்களுக்கும் தற்போது எமது சேவைகளை வழங்க முடிந்துள்ளதையிட்டு நாம் பெருமைப்படுவதோடு மகிழ்ச்சியும் அடைகின்றோம். வடக்கு மக்கள் தற்போது இலங்கையின் ஏனைய பகுதிகளுடனும், உலகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளனர்.

நாம் இலங்கையிலே எமது சேவைகளை ஆரம்பித்து வெறும் 2 வருடங்களுக்கும் குறைவான குறுகிய காலப்பகுதியினுள் இலங்கையின் அனைத்துப் பகுதிகளையும் இணைத்துக்கொள்வதற்கு இடமளித்து தமது ஆதரவை வழங்கியமைக்காக தொலைத் தொடர்பாடல்கள் ஒழுக்காற்று ஆணைக்குழு, பாதுகாப்பு அமைச்சு, மத்திய சுற்றுச்சூழல், நகர அபிவிருத்தி மற்றும் சிவில் விமான சேவை அதிகாரசபைகள் மற்றும் எமது முகாமைத்துவப் பங்காளரான Huawei மற்றும் பாரியளவிலே துரிதமாக இந்த உட்கட்டமைப்பை அமுல்ப்படுத்துவதற்கு பொறுப்பாகச் செயற்பட்ட எமது அனைத்து விற்பனைப் பங்காளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.'' இப்படி அவர் கூறினார்.

# 2011ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## வடக்கு மாகாண சபை

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2011ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் தரம் வாய்ந்த இலங்கை ரெலிக்கொம் தொலைபேசிப் பெயர்ப்பட்டியலில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்படாத வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.யாழ்ப்பாணம் 2.வவுனியா 3.மன்னார் 4.கிளிநொச்சி 5.முல்லைத்தீவு**

| தொகுதிஇலக்கம்"G" உப தொகுதி இல. | பொருள்கள் விவரம் |
|---|---|
| G -1 | அலுவலகத் தளபாடங்கள் |
| G -2 | அலுவலக உபகரணங்கள் |
| G -3 | காகிதாதிகள் |
| G -4 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G -5 | கட்டடப்பொருள்கள் |
| G -6 | கட்டடப் பிரிவிடுதலும் |
| G -7 | மின் உதிரிகளும், பொருத்திகளும் |
| G -8 | அச்சிடும் பொருள்கள் |
| G -9 | கணினிகளும், உதிரிகளும் |
| G -10 | சமூக நலன்பொருள்கள் |
| G -11 | மின் உபகரணங்கள் |
| G -12 | தொடர்பு சாதனங்கள் |
| G -13 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| G -14 | பொது உபகரணங்கள் |
| G -15 | கல்விசார் உபகரணங்கள் |
| G -16 | விளையாட்டு உபகரணங்கள் |
| G -17 | வீட்டுப் பாவனைப்பொருள்கள் |
| G -18 | கல்விசார் உபகரணங்கள் |
| G -19 | மருத்துவ உபகரணங்கள் |
| G -20 | மருந்துவகைகள் |
| G -21 | வைத்தியசாலைக்கு உணவு வழங்கல் |
| G -22 | வைத்தியசாலைக்கு பாதணிகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் வழங்கல் |
| G -23 | இயந்திர உபகரணங்களும், அவை தொடர்பான கருவிகளும் |
| G -24 | விவசாயப் பொருள்கள் |
| G -25 | உரவகைகள், விவசாய இரசாயனப் பொருள்கள் |
| G -26 | விவசாய விதைகள், நடுகைப் பொருள்கள் |
| G -27 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் பொருள்கள் |
| G -28 | கால்நடைகளுக்கான மருந்துகள், உபகரணங்கள் |
| G -29 | தொழில்துறை சம்பந்தமான பொருள்கள் |

| தொகுதி இலக்கம் "S" உப தொகுதி இல. | சேவைகள் விவரம் |
|---|---|
| S -1 | கடிதத் தலைப்புப் புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாகைகள் அச்சிடுதல், பெயர்ப் பலகை, குறியீட்டுப் பலகை எழுத்துப் பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச்சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல். |
| S -2 | அலுவலகத் தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| S -3 | அலுவலக போட்டோப் பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், ரோனியோ மிசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும். |
| S -4 | கணினிகள், பிரிண்டர்கள் பழுதுபார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S -5 | குளிரூட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின் வயர்கள் பழுது பார்த்தலும், சேவிஸ் செய்தலும். |
| S -6 | பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல். |
| S -7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டடத் தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல். |
| S -8 | வாகனம் பழுது பார்த்தல் :- இயந்திர, மின் இணைப்பு (Circuit) களை பழுதுபார்த்தல், தகடுகள்(Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ற் அடித்தலும், டீசல் வாகனங்கள் பழுது பார்த்தல், பெற்றோல் வாகனங்கள் பழுது பார்த்தல், குளிரூட்டிகள் பொருத்துதலும், பழுதுபார்த்தலும். |
| S -9 | வாகனம் பராமரித்தல்:- கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (Alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தலும், ரயர் மாற்றம் செய்தலும் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும், மினுக்கம் செய்தலும். |
| S -10 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல். |

### நிபந்தனைகள்

1.வழங்குநர்களாக பதிவு செய்தல் 2011ஆம் ஆண்டுக்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.

2.பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும் இலங்கை ரெலிக்கொம் பெயர்ப்பட்டியலில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.

3.விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும், மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விவரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.

5.மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.

6.வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

7.பொருள்கள், சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்புத் தெரிவிக்கும் மாவட்டம்/ மாவட்டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.பழுது பார்த்தலுக்கோ, வாகனப் பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விவரங்களும், பயிற்சி பெற்ற வேலையாள்களின் விவரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9.வழங்குநர்களுக்கு எதுவித காசு முற்பணமும் வழங்கப்படமாட்டாது.

10.பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் வரிப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2010 டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக ***"செயலாளர், உட்கட்டமைப்பு அமைச்சு, வடமாகாணம், விவ சாயக் கட்டடத் தொகுதி, கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை."*** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ***"2011ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்"*** எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

11.முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்பட வேண்டிய ஒவ்வொரு உப பொருள்தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250/= க்கான காசுக்கட்டளை ***"பிரதிப் பிரதம செயலாளர் நிதி, வடக்கு மாகாண சபை."*** என்ற பெயரில் திருகோணமலை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருள்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருள் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 250/= ம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

12. 2010 டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

13. மேலதிக விளக்கங்களுக்கு "செயலாளர் உட்கட்டமைப்பு அமைச்சு வடக்கு மாகாணம்" அவர்களுடன் தொலைபேசி இலக்கம் 0262226979 மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்
### 2011ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்
### வடக்கு மாகாண சபை

01. வியாபார நிறுவனத்தின் பெயர் :- ............................
02. வியாபார நிறுவனத்தின் முகவரி :- ............................
03. தொலைபேசி இலக்கம் :- ............................
04. தொலைநகரி (Fax) இலக்கம் :- ............................
05. வியாபாரப் பதிவு இலக்கம் :- ............................
06. வியாபாரத்தின் தன்மை :- ............................
07. பதிவு செய்யப்படவேண்டிய பொருள்கள் / சேவைகளின் தொகுதி :- ............................

| தொகுதி இல. | பொருள்கள்/ சேவைகள் விவரம் |
|---|---|
| | |

08. வங்கியாளர்களின் பெயர்கள் :- ............................
09. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :- ............................
10. வற் (Vat) வரி பதிவு இலக்கம் (இருப்பின்) :- ............................
11. மின்னஞ்சல் முகவரி :- ............................
12. வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் (விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்/ மாவட்டங்களினை " √ " அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவு செய்தல் வேண்டும்.)

| | |
|---|---|
| *யாழ்ப்பாணம்* | |
| *வவுனியா* | |
| *மன்னார்* | |
| *கிளிநொச்சி* | |
| *முல்லைத்தீவு* | |


என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் யாவும் சரியானவை எனவும் வடக்கு மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள்/ சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறோம். பதிவுக்கட்டணம் ரூபா 250/= இற்கு ................ம் திகதிய ...................... இலக்க காசுக்கட்டளை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.................................... .................................... ....................................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

ஏ.சிவசுவாமி
*பிரதம செயலாளர், வடக்கு மாகாணசபை,*
கன்னியாவீதி, வரோதய நகர், திருகோணமலை.

(சி/572217)

# சித்தன்கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் – 29.10.2010



## சித்தர்கள் சிவபூசை செய்ய ஸ்தாபித்த ஆலயம்

யாழ்ப்பாணத்தில் பழமையும் பெருமையும் மிக்க சிவாலயங்கள் உள்ளன. இலங்கையில் சித்தன்கேணியில் அமைந்திருக்கும் சிவாலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் காலம் தோறும் பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சியடைந்து இந்துப் பண்பாடு மேன்மையடைய வழிசமைத்து வருகின்றது. குருமாரும், பரிபாலகர்களும், அருளாளர்களும், சித்தர்களும், கலைஞர்களும், ஆலயப் பண்பாட்டிற்கு தொண்டாற்றி வந்துள்ளனர். ஆகமமரபை அடியொற்றி அமைக்கப்பட்டதே சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயமாகும். யோக நெறியில் மேம்பட்டவர்கள் சித்தர்கள். இவர்கள் தமது யோகமார்க்கத்திற்காக சிவபூஜை ஆற்றினார்கள். அதன் பயனாக மக்களின் லௌகீக வாழ்க்கையில் ஏற்படுகின்ற துன்பங்களைப் போக்கியதோடு ஆன்மீகப்பாதையில் செல்வதற்கும் வழிவகுத்தனர். இவ்வாறாக சிவபூஜை ஆற்றும் சித்தர்கள் தமது சிவபூஜைக்காக ஸ்தாபித்து வழிபாடாற்றிய சிவலிங்கமே இவ்வாலயத்தின் ஆதிமூலவராக வீற்று அருள்பாலிக்கின்றார்.

சித்தர்கள் பூரணமாக சிவபூஜையை மேற்கொள்ள இங்கு திருக்கேணி ஒன்றை அமைத்தார்கள். ஆகம விதிப்படி பிற்காலத்தில் ஆலயம் அமைக்கும் போது இத்திருக்கேணி இவ்வாலயத்தின் மூன்றாம் திருவீதியில் அமைந்து காணப்படுகின்றது. இக்கேணியில் இக்கிராம மக்கள் அரவங்களினால் தீண்டப்படக்கூடாது என்பதற்காக சிவசிதம்பரேஸ்வரரின் அருளினால் சித்தர்கள் தமது சித்தினைக்கொண்டு ஒரு விஷ உறிஞ்சிக் கல்லை ஸ்தாபித்தார்கள். இவ்வூர்மக்கள் விஷக்கடியினால் பாதிக்கப்படாத அற்புதம் நிறைந்ததாக இவ்வாலயம் மிளிர்கின்றது. சித்தர்கள் இக்கேணியினை அமைத்ததனால் இவ்வூர் சித்தன்கேணி எனப் பெயர் பெற்று விளங்குகின்றது. பிற்காலத்தில் சித்தர்கள் பூசித்த சிவலிங்கத்திற்கு ஆலயம் அமைக்கும் நோக்குடன் பிற்பட்டவர்கள் ஈடுபட்டனர். அதன்படி இயற்கையான சூழ்நிலை கொண்டதும் புனித தீர்த்தக்கேணியை மையமாகக் கொண்டும் ஆலயத்தினை அமைத்தனர். படிப்படியான கட்டட அமைப்புக்களை உள்வாங்கிக்கொண்டு வளர்ச்சி அடைந்தது இச்சிவாலயம். இங்கு மூலஸ்தானத்தில் இருக்கும் லிங்கத்திற்கு ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் என்ற திருநாமமும் அம்பாள் கருவறையில் வீற்றிருக்கும் அம்பாளிற்கு சிவகாமசுந்தரி அம்பாள் என்ற திருப்பெயரும் கொண்டு வழிபடப்படுகின்றது.

இடவசதியின்றி இருந்த, போது ஞானியார் என்ற கொடை வள்ளல் 1850 ஆம் ஆண்டளவில் தனுவோடைப்பதி என்ற காணியையும் பல வயல் நிலங்களையும் பனந் தோட்டங்களையும் காணிக்கையாக்கினார். மேலும் தனுவோடைப்பதியின் பிறிதொரு பகுதிக் காணியை சிவனுக்கு பரிவார மூர்த்திகள் அமைக்கவும் இரு திருவீதிகள் அமைக்கும் அவாவினாலும் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் பாலசுப்பையர் [பாலசுப்பிரமணிய ஐயர்] அவர்கள் காணிக்கையாக்கினார்கள். இவர் இத்தோடு ஆலய பூஜைக்கும் ஆலய நிர்மாணம் மற்றும் பல்வேறு வளர்ச்சிக்கும் நிறைவான பங்களிப்பை வழங்கினார். இவர்களுடைய வம்சாவழியினரே இன்றும் ஆலயத்தில் பூஜைகள் ஆற்றி வருகின்றார்கள். 1906 ஆம் ஆண்டில் இரண்டாம் திருவீதியில் வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டது. இதன் பின்னர் 1908 ஆம் ஆண்டு வைரக்கற்களினால் ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. கருவறையில் இருந்து சபா மண்டபம் வரையில் இப்பணிகள் நடைபெற்றன. மேலும் இராஜகோபுர அடித் தளமும் வைரக்கற்களால் அமைக்கப்பட்டது. இப்பணிகளுக்கு மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உள்ளூரிலும் பணம் திரட்டப்பட்டு திருப்பணிகள் உபயங் களாகவும் பொதுவாகவும் நிறைவேற்றப்பட்டன. ஸ்தூபிகளும் அழகாக அமைக்கப்பட்டன. சிவன், அம்பாள், நடராஜர் முதலியோருக்கும் பிள்ளை யார், அருணாசலேஸ்வரர், முருகன், வைரவர், சூரியன், சண்டேஸ்வரர் முதலிய தெய்வங்களுக்கும் பண்டிகை வேலைப்பாடுடைய ஏக தள ஸ்தூபிகள் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். ஏனைய மூர்த்திகளுக்கும் சிறிய தூபிகள் வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்மை சிறப்பம்சமாகும். ஏனைய மூர்த்திகளுக்கும் சிறிய தூபிகள் அமைக்கப் பட்டன. அத்துடன் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, பிரதோஷமூர்த்தி, சந்தி ரன், நவக்கிரகங்கள் தட்சணா மூர்த்தி, நால்வர், நந்தி, பலிபீடம் முதலிய சந்நிதிகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக புனருத்தாபனத்துடன் சிவன் ஸ்தூபி துவிதளமாகவும் ஏனைய ஸ்தூபிகளுக்கான சிற்பங்களும் புதுப்பொலிவு செய்யப்பட்டன. சிவன் அம்பாள் ஸ்தூபிகளில் அமைந்திருக்கும் சிற்பங்களும் வர்ண வேலைப்பாடுகளும் உள்ளத்தில் உவகை ஏற்படுத்துவனவாகும். சிற்பங்கள் சிற்பக்கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. குறிப்பாக மன்மதன் ரதி புராண கதைச்சிற்பம், சிவ தாண்டவங்கள், சிவன் அம்மை திருவுருவ அமைவுகள் மிக அற்புதமாகும். அதிலும் சபா மண்டப வாயிற் சிற்பங்கள் மிகமிக அற்புதக் காட்சியாகும்.

அடியவர்களின் மனதினை ஆலயத்திற்கு தூரத்தில் இருந்தே இறைவன் பால் ஈர்க்கின்ற வகையில் அமைகின்ற கம்பீரமான இராஜகோபுரம் 1977 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. இங்குள்ள நவக்கிரக ஆலயமும் சிறப்பாக ரத வடிவத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ் வாறான சிறப்புமிகு சித்தன் கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ் வரர் தேவஸ் தானத்தில் இவ் வருடமும் மகா கும்பாபிஷே கம் மிகச் சிறப்பாக நடை பெறவுள்ளது. திருக்கோவில் தெய்வத் திருமேனியில் இறைவனை மந்திர சொரூப மாக இரண்டற ஒன்றுவித் தலே கும்பாபிஷேகம் எனப் படுகின்றது. பல்வேறு சிறப்புக்கலையை இக்கும்பாபிஷே கம் எனப் படுகின்றது. பல்வேறு சிறப்புக் கலையை இக்கும் பாபிஷே கம் இவ்வாலயத் தில் ஆகமங்க ளில் கூறப்பட்ட அதி உத்த மோத்தமம் எனப்படும். முப்பத்து மூன்று [33] ஓம குண்டங்கள் அமைத்து செய்யப் படுவது சிறப்பிற் குரிய தாகின்றது. ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரருக்கு பெரிய யாக மண்டபம் அமைத்து அதில் 33 சிவாச்சாரியார்கள் 33 ஓமகுண்டங் களை வளர்த்தி இக்கும்பா பிஷேகத்தை நடத்தவுள்ளனர். இந் நாட்டில் இவ் வாறான கும் பாபிஷேகம் காணுதற்கரியதாகும். மேலும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதற்கான பூர்வாங்க கிரியைகள் 22.10.2010 வெள்ளிக் கிழமை மஹா கணபதி ஹோமத்துடன் ஆரம் பமாகி நடைபெறவுள்ளது. அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்துதல், நவக்கிரக ஹோமம் என்பன முக்கியமான கிரியைகளாகும். யாக மண்டபம் சிவனை முழுமையாக அடைவதற்கான ஆறு வழிகளையும் ஐந்து வகையான கலைகளையும் குறிக்கின்றது. யாகமண்டபம் என்பது எல்லா தேவதைகளையும் கொண்டது. மிகவும் பரிசுத்தமானது. எல்லா விருப்பங்களையும் இனிது நிறைவெற்றுவது என மகுடாகமம் கூறுகின்றது.

இம் மஹா கும்பாபிஷேகத்தினை குருமார், ஆலய பரிபாலனசபையினர், ஊர்,அயலூர் சிவனடியார்கள், வெளிநாட்டு அடியார்கள் என அனைவரது ஒத்துழைப்புடன் தேவஸ்தான பரம்பரை குரு சிவஸ்ரீ சபாரத்தின சர்மா வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேக தரிசனத்தால் தீவினைகள் நீங்கி புத்திரப்பேறு முதலான பேறுகளையும் பக்தியையும் பெற்று ஆனந்தமுறுவர் என்பது திண்ணம்.

**வாசுகி உமாபதிசர்மா.**

## பிரதம குருவின் அருளாசி

என்றும் அகில உலக நாயகனாக விளங்குபவரும் பெருமை மிக்க சித்தர்களினால் பூஜிக்கப்பட்டு போற்றப்படுபவரும் புராதன பழமை வாய்ந்த மூர்த்தி தலம் புனிதமான சித்த புஸ்கரணி எனும் தீர்த தலமாக விளங்கும் பெருமைகளை உடைய சிவகாமசுந்தரி சமேத சிவகாமிநாதனுக்கு கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா வெகு சிறப்பாக நடைபெறுகிறது. முப்பத்து மூன்று குண்ட பக்ஷமாக இக் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஆன்மாக்களின் இடர்களைந்து இன்னல்கள் நீக்கி திருவருள் புரிகின்றார். இக் கும்பாபிஷேக விழாவை இலங்கை நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருந்தும் பல சர்வபோதன சிவாச்சாரியார்கள், சாதகாசிரியர்கள், சிவாச்சார்யர்கள் கலந்துகொண்டு சிறப்பாக நடைபெறுகின்றது. இக் கும்பாபிஷேக விழாவில் எம்பெருமான் அடியவர்கள் கலந்து கொள்வதினாலும் நடைபெறும் நிகழ்வுகளை கேட்பதாலும் சிந்திப்பதனாலும் அனைவருக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களுடைய வாழ்த்துக்களும் அனைத்து சிவாச்சார்யார்களது வாழ்த்துக்களும் எனது நல்லாசிகளும் கிடைக்கப்பெற்று சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு வாழ்வார்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**பிரம்மஸ்ரீ ஞானபண்டிதக்குருக்கள் சபாரத்தினசர்மா.**

## பரிபாலனசபைத் தலைவர் பிரார்த்தனை

சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேக பெரு விழாவையிட்டு ஆலய பரிபாலனசபைத் தலைவர் என்ற ரீதியில் பெருமிதம் அடைகிறேன். நீண்ட நாளாக மஹா சபையிலும், பரிபாலன சபையிலும் இவ் ஆலயத்தினுடைய மஹா கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டும் என்று எண்ணிய கருமம் இன்று கைகூடி யதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எல்லாம் வல்ல சிவசிதம்பரேஸ்வரர் அருள் பாலிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**தியாகராஜா ராசகுமார், தலைவர்,**
**ஆலய பரிபாலன சபை.**

## நன்றிகள் பல

சித்தர்கள் வாழ்ந்த சிறப்பு மிகு சித்தன்கேணியினுடைய அருளாட்சியைக் கொண்ட ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்பாள் சமேதராய் அருள்பாலிக்கின்ற சித்தன்கேணி பதியிலே இன்று 33 ஓம குண்ட மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இந் நிகழ்விலே எம்முடன் ஒத்துழைத்த ஆலய சிவாச்சாரியார் ஞா.சபாரத்தினசர்மா, ச.உமாபதி சர்மா மற்றும் பிரதிஸ்டா பிரதம குருவும் எமது ஆலயத்தினுடைய பிரதம குருவான வாசுதேவா குருக்கள் அவர்களுக்கும் எனது முதற்கண் நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன். இதேவேளை பல்வேறு இடங்களிலும் இருந்து இக் கும்பாபிஷேக நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்த சிவாச்சாரியர் குருமாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன். மேலும் எமது இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்கிய அறிஞர் பெருமக்களையும், சிறப்பு மலருக்கு விளம்பர உதவி வழங்கியவர்களுக்கும் வலம்புரி நிர்வாகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். இதே வேளை இக் கும்பாபிஷேக நிகழ்வுக்கு பண உதவி, பொருள் உதவி நல்கிய சிவனடியார்களுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். மேலும் இவ் ஆலயத்தை அழகுற புதுப்பிக்க உதவிய சிற்ப கலைஞர்கள், கட்டடக் கலைஞர்கள், வர்ண கலைஞர்கள், ஆசாரிமார் ஆகியோருக்கும் இக் கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த வாத்திய கலைஞர்கள், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், அலங்காரத் தொண்டு செய்தவர்கள் மற்றும் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்தினர் ஆலய அபிமானிகள் ஆகியோருக்கும் எனது சிரந்தாழ்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

**சதாசிவம் ஐங்கரன், செயலாளர், ஆலய பரிபாலன சபை.**

## வாழ்வு சிறக்க பெருமானை வணங்கி உய்வோம்

சித்தம் எல்லாம் சிவமயமே என்பர் பெரியோர். சிவன் இன்றி சீவன் இல்லை. சீவன் உய்ய சிவவழிபாடு மிக அவசியம். சிவனால் படைக்கப்பட்ட பல சீவன்களும் ஒன்றுசேர்ந்து சிவனை வணங்கும்போது சித்தியும் முத்தியும் கிடைக்கின்றது. எனவேதான் ஔவையார் கூட கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று கூறினார். எனவே இன்றைய காலகட்டத்தில் சிவன்கோயில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது மானிடராகிய எமக்கு நன்றாகப் புரியும். அத்தகைய அருள் உடைய இடமாக விளங்குவது சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயம் ஆகும்.

இச்சிவாலயத்தில், எம்மையெல்லாம் உய்விக்கும் பொருட்டு எம்பெருமானுக்கு புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியங்களில் நாம் பெற்றுக்கொண்ட சிவபுண்ணியமும் கூட. பொன்னும் மெய்ப்பொருளும் தரும் சிவபெருமானின் மஹா கும்பாபிஷேகம் இம்மண்ணில் நாம் அனைவரும் நல்ல வண்ணம் வாழ வழி செய்வதுடன் இறைவனின் பேரருள் கிடைப்பதாக அமையும்.

எனவே இம்மஹா வைபவத்தை நாம் அனைவரும் கண்டு தரிசித்து சிவ அருள் பெற்று பொன்னும் மெய்ப்பொருளும் அருளும்பெற்று இகவாழ்வும்பரவாழ்வும்சிறக்க பெருமானைஎன்றும்வணங்கிஉய்வோமாக.

சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவ சிவ என்றிடச் சிவகதி தானே

**திருமதி தேவேந்தினி பாபு,**
**பிரதேச செயலர், வலி.மேற்கு, சங்கானை.**

## வாழ்த்துச்செய்தி

சித்தன்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வர ஆலய கும்பாபிஷேக விழா எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளதை அறிந்து மகிழ்வடைகின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்க உயிர்ப்பு மையங்களாக விளங்குபவை ஆலயங்கள். இளம் பருவத்திலேயே தெய்வ உணர்வைப் பதிய வைத்து மனிதனை மனிதப் பண்புகளோடு வாழ வழிகாட்டி நிற்பவை கோயில்களே. இதனால்தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறிப் போந்தனர் நம் முன்னோர்.

ஆகம விதிப்படி அமைந்த கோயில்கள் பன்னிரண்டு வருடத்துக்கொரு முறை மஹா கும்பாபிஷேகம் செய்து மூர்த்தியின் தெய்வ சாந்நித்தியத்தை மேம்படுத்த வேண்டும் என்பது விதி. அந்த வகையில் இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள சித்தன்கேணி சிவ சிதம்பரேஸ்வர ஆலய கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர்.**




சித்தன்கேணி தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் சிவசிதம்பரேஸ்வரப் பெருமான் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

**P.S. சேர்விஸ் ஸ்ரேசன்**
257/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9247

சகல விதமான நுட்ப வேலைகளுக்கு
**தர்சினி**
மரத்தளபாட இயந்திரத் தொழிற்சாலை
காளிகோயிலடி, சங்கானை.
உரிமையாளர்: வ.திருநாவுக்கரசு

மின்சார உதிரிப்பாகங்கள், பெயின்ற் வகைகளைப் பெற்றுக்கொள்ள
**பாக்கியரத்தினம் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்**
பிரதான வீதி, சங்கானை.
கிளை: தரன் ரேடர்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**ஓம் சக்தி ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

**சாயி மணிக்கூட்டுத் தொழிலகம்**
சகல விதமான மணிக்கூடுகளும்
உத்தரவாத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
**சாயி மல்ரிபூட்ஸ்**
வெதுப்பக உணவு வகைகள், குளிர்பானவகை, ஐஸ் கிறீம் வகைகள் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.

**றஞ்சன் ஸ்ரோர்ஸ்**
பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

**சுதா கொமினிக்கேசன் & பிறிண்டேர்ஸ்**
போட்டோபிரதி, தொலைத் தொடர்பு சேவை யாவும் பெற்றுக்கொள்ளலாம்.
பொன்னாலை வீதி, சித்தன்கேணி சந்தி,
சித்தன்கேணி. T.P. 021 7429935

**பிள்ளையார் மணல், சல்லி விற்பனை நிலையம்**
அன் ரான்ஸ்போட்
பிள்ளையார் கிறேசர்
பிரதான வீதி, சங்கானை,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

**EVEREST DIGITALS STUDIO & VIDEO**
NET BROWISING, VIDEO CALLS
MAIN ROAD, SITHANKERNY.
T.P. 021 2250040, 0776589752

**T.R ஹாட்வெயர் சென்ரர்**
உழவு இயந்திர இழுவைப் பெட்டிகள் புதிதாக வடிவமைத்து செய்து கொடுக்கப்படும், சகல விதமான கடைச்சல் மின் ஒட்டு வேலைகள் துரிதகதியில் செய்து தரப்படும்.
வட்டுக்கோட்டை றோட்,
சித்தன்கேணி.

**விநாயகர் சொகுசு வான்சேவை**
TIP TOP TRAVELS JAFFNA - COLOMBO பதிவு செய்து தரப்படும்.
AC, NON AC சொகுசு பஸ்களுக்கு பதிவுகளை மேற்கொள்ளுமிடம்
T.P. 0777351588 வின்சர் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 0778932805 சித்தன்கேணி.
T.P. 0112364999 கொழும்பு.
பொன்னாலை வீதி, சித்தன்கேணி.

**நேயன் பல் பொருள் வாணிபம்**
பலசரக்கு பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
சித்தன்கேணி சந்தி, சித்தன்கேணி.

**சாம்பவி எலக்ரோனிக்ஸ்**
சகல விதமான இலத்திரனியல், மின் உபகரணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும், புதிய பழைய பாடல்களும் பதிவுசெய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சித்தன்கேணி.

# யாழ்ப்பாணம், மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2011

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2011 ஆம் திகதி முதல் 31.12.2011ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

*கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக)* - *ரூ.400.00*
*கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி* - *01.11.2010*
*கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்* - *18.11.2010, நண்பகல் 12.00 மணிவரை*
*கேள்வி திறத்தல்* - *18.11.2010, பிற்பகல் 2.30 மணிக்கு*

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

**குறிப்பு:**

1) கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப் படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
2) சந்தையை குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்க ளின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) ரூபா.40.00 பெறலாம். மேலதிகமாக எந்தவிதக் கட்டணங்களும் அறவிடக்கூடாது.
3) சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 4 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா7 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக் கூடாது.
4) சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/கோழி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்த வேண்டும்.
5) சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களில் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல் வேண்டும்.
6) கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் (வற்),3% தே.க.எ.வரியும் செலுத்துதல் வேண்டும்.
7) சித்திபெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/9 பங்கை 2011 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.
8) கேள்வி விண்ணப்ப பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
9) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கு உண்டு.
10) கேள்விப் படிவங்கள் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்தவிதக் கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28.11.2010

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

### மாநகர சபை யாழ்ப்பாணம்
பொதுச் சந்தை குத்தகை

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தேகஎவரியும் நீங்கலாக |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,650,000.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,850,000.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,155,000.00 |
| 4 | செங்குந்தா மீன்சந்தை | 10,000.00 | 693,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 522,500.00 |
| 6 | அரியாலை மீன் சந்தை | 1,000.00 | 110,250.00 |
| 7 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 110,000.00 |
| 8 | கச்சேரி நல்லூர் வீதி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 115,500.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 57,750.00 |
| 10 | யாழ்.பொதுசன நூலக சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 13,200.00 |
| 11 | கஸ்தூரியார் வீதி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 110,000.00 |
| 12 | புங்கன்குளம் சந்தை | 2,000.00 | 11,000.00 |

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி அகலிப்பு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்ப்பாணம் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத் தில் மேற்படி வீதி அகலமாக்குவது தொடர்பான மக்களது கருத்துக்கள் கேட்கப்படவுள்ளதால் நல்லூர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.(த-207-7)

## கொடுப்பனவு

யுத்த அனர்த்தங்களின் போது மரணமடைந்த, கடும் காயங்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் வழங்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 36 பேர் இக்கொடுப்பனவினைப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(த-207)

## மக்கள் வங்கியின் சனிக்கிழமை சேவை

மக்களின் நலன் கருதி மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை நாளை சனிக்கிழமை தொடக்கம் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சனிக்கிழமை வங்கிச் சேவையை நடத்தவுள்ளது என வங்கி முகாமையாளர் சி.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (ற)

## தவறிவிட்டது

NP HK-5728 இலக்க மோட்டார் சைக்கிள் புத்தகம் மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன 27.10.2010 புதன்கிழமை சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0771038896 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

கதிர்காமம் நிவாராணக் கிராமத்தைத் தற்காலிகமாகக் கொண்ட சண்முகம் கமலேஸ்வரி என்பவரது தே.அ.அ.(667751217V) தற்காலிக அ.அட்டை என்பன பேர்ஸுடன் கண்டாவளைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0773886575, 0776172450 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாள்களில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுப் பூர்த்திசெய்து 10.11.2010ஆம் திகதி பிற்பகல் 4மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**1.பதவி:** பால் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு விற்பனைப் பிரதிநிதி (ஒப்பந்தம்)

**சம்பளம்:** மாதாந்தம் மொத்த வேதனமாக ரூபா 9000/-வழங்கப்படும். விற்பனை இலக்கிற்கு மேல் விற்பனை செய்யின் ஊக்குவிப்பு வழங்கப்படும்.

**தகைமைகள்:**
1.பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வதில் திறமை/அனுபவம் இருத்தல் வேண்டும்.
2.விண்ணப்பதாரி மூன்று சில்லு ஆட்டோ/மோட்டார் சைக்கிள் வாகனம் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**கடமையின் தன்மை:** எமது சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் பால்பொருள்களைச் சந்தைப்படுத்துவதாகும்.

**2.பதவி: சாரதி (ஒப்பந்தம்)**

**சம்பளம்:** நாளொன்றுக்கு ரூபா 400/- மொத்த வேதனமாக வழங்கப்படும்.

**தகைமைகள்:**
5ஆம் கல்விச் சான்றிதழும் பஸ் வண்டி/லொறி சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பொது நிபந்தனைகள்:**
1.வயது: 10.11.2010ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2.கல்வித் தகைமைகள், அனுபவம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், வதிவிடச் சான்றிதழ், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3.ரொக்கப் பிணை செலுத்துதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/572213)

### இறைச்சிக்கடை குத்தகை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தேகஎவரியும் நீங்கலாக |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 104,060.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல 02 | 5,000.00 | 34,650.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 03 | 5,000.00 | 92,400.00 |
| 4 | " | இல 04 | 5,000.00 | 126,500.00 |
| 5 | " | இல 05 | 5,000.00 | 57,750.00 |
| 6 | " | இல 06 | 5,000.00 | 57,750.00 |
| 7 | " | இல 07 | 5,000.00 | 46,200.00 |
| 8 | " | இல 08 | 5,000.00 | 46,200.00 |
| 9 | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல 01 | | 103,950.00 |
| 10 | " | இல 02 | | 154,000.00 |
| 11 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 98,450.00 |
| 12 | " | இல 02 | | 97,900.00 |
| 13 | புங்கன் குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 57,750.00 |
| 14 | புங்கன் குளம் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 127,050.00 |
| 15 | ஜின்னாவீதி ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | | 29,700.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 98,450.00 |
| 17 | " | இல 02 | 5,000.00 | 121,000.00 |
| 18 | " | இல 03 | 5,000.00 | 75,075.00 |
| 19 | " | இல 04 | 5,000.00 | 77,000.00 |
| 20 | " | இல 05 | 5,000.00 | 61,050.00 |
| 21 | " | இல 06 | 5,000.00 | 77,000.00 |
| 22 | " | இல 07 | 5,000.00 | 77,000.00 |
| 23 | " | இல 08 | 5,000.00 | 77,000.00 |
| 24 | " | இல 09 | 5,000.00 | 77,000.00 |
| 25 | " | இல 10 | 5,000.00 | 11,000.00 |
| 26 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 11 | 5,000.00 | 11,000.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 12 | | 11,000.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 214,500.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 23,100.00 |
| 30 | நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 99,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | | 150,150.00 |
| 32 | " | இல 02 | | 150,150.00 |
| 33 | " | இல 03 | | 150,150.00 |
| 34 | " | இல 04 | | 150,150.00 |
| 35 | " | இல 05 | | 150,150.00 |
| 36 | " | இல 06 | | 150,150.00 |
| 37 | " | இல 07 | | 150,150.00 |
| 38 | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | | 27,500.00 |

# இந்தியச் சுற்றுலாவின்போது ஒபாமா இரு நகரங்களுக்கு மட்டுமே செல்வார்

வாஷிங்டன்,ஒக்.29

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, டில்லி மற்றும் மும்பை ஆகிய நகரங்களுக்கு மட்டுமே செல்வார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2000ஆம் ஆண்டில், இந்தியா வந்த அப்போதைய அமெரிக்க ஜனாதி பதி பில் கிளிண்டன் ஆக்ரா, டில்லி, ஐத ராபாத், மும்பை, ஜெய்பூர் ஆகிய ஐந்து நகரங்களுக்குச் சென்றார்.

ஆனால், 2006இல் ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ், இந்தியா வந்த போது, டில்லி, ஐதராபாத் ஆகிய நகரங்க ளுக்கு மட்டுமே சென்றார்.

அதேபோல், அடுத்த மாதம் இந்தியா வரும் ஜனாதிபதி ஒபாமா, டில்லி, மும்பை ஆகிய நகரங்களுக்கு மட்டுமே செல்வார் என அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒபாமாவின் பயணத்தில் டில்லி, மும்பை ஆகிய நகரங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன என அறிவிக்கப்பட்டிருந்தாலும், அமிர்தசரஸ் செல்லும் வகையில், அவரது பயணத் திட்டம் மாற்றியமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதற்கான வாய்ப்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 8ஆம் திகதி இந்தியா வரும் ஒபாமாவுக்கு, ஜனாதிபதி மாளிகையில், 21 குண்டுகள் முழங்க வரவேற்பு அளிக்கப்படுகிறது. பின்னர், நாடாளுமன்றக் கூட்டுக் கூட் டத்தில் உரையாற்றுவார்.

மும்பை செல்லும் ஒபாமா, அங்கு மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் பங்கேற்பார்.

பின்னர், இருநாடுகளிடையே மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களில் இரு நாட்டு தலைவர்களும் கையெழுத்திடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரோஸ் அல்-கைமா மன்னர் காலமானார்

துபாய்,ஒக்.29

ஐக்கிய அரபு குடியரசுகளில் ஒன்றான, ரோஸ் அல்-கைமாவின் மன்னர் ஷேக் சாகிர் அல்-குவாசிமி(வயது - 90) நேற்று காலமா னார்.

இவருக்குப் பின் இவரது புதல்வர் இள வரசர் ஷேக் சவுத் மன்னராவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரசு குடியரசில் தன்னாட்சி பெற்ற எட்டு நாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று ராஸ் அல்-கைமா. இதன் மன்னராக ஷேக் சாகிர் அல்-குவாசிமி இருந்தார்.

இவர், 60 ஆண்டுகளுக்கு மேலாக மன்னர் பொறுப்பில் இருந்தார். உடல் நலம் குன்றி பல மாதங்களாக வைத்தியசாலையில் இருந்த இவர், நேற்று வியாழக்கிழமை காலமானார். இத்தகவலை செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

குவாசிமிக்குப் பின்னர் இவரது புதல்வர் பட்டத்து இளவரசர் ஷேக் சவுத், மன்னர் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

# பெண்கள் முக்காடு அணியத் தடை: பிரான்ஸுக்கு பின்லேடன் எச்சரிக்கை

துபாய்,ஒக்.29

அல்-குவைதா தலைவர் பின்லேடன் நீண்ட காலத்துக்குப் பின்னர் ஒளிநாடா பேச்சு ஒன்றை அனுப்பி இருக்கிறார். அரபு நாட்டிலிருந்து ஒளிபரப்பப்படும் அல்-ஜசீரா தொலைக்காட்சியில் அந்தப் பேச்சு ஒளிபரப்பப்பட்டது.

அதில் பின்லேடன் பின்வருமாறு பேசியிருக்கிறார்:-

பிரான்ஸில் முஸ்லிம் பெண்கள் மத வழக்கப்படி முக்காடு அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையுடன் சேர்ந்து முஸ்லிம்களைத் தாக்கி வருகிறார்கள்.

இதற்காகத்தான் நைஜர் நாட்டில் பிரான்ஸ் நாட்டினர் 5 பேரைக் கடத்தி வைத்துள்ளோம். நீங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகச் செய்யும் காரியங்களால் உரிய பிரதிபலனைச் சந்தித்து கொண்டிருக்கிறீர்கள்.

தொடர்ந்து முஸ்லிம் நாடுகளுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டால் நாங்களும் பதிலடி கொடுப்போம்.

எங்கள் மக்களையும், பெண்களையும், குழந்தைகளையும் கொன்றுவிட்டு உங்கள் நாட்டில் நீங்கள் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும்?

நீங்கள் எங்களை கொன்றால் நாங்கள் உங்களைக் கொல்வோம். நீங்கள் எங்களைக் கடத்தினால் நாங்கள் உங்களைக் கடத்துவோம்.

நீங்கள் எங்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தினால் நாங்கள் உங்களுக்குச் சேதத்தை ஏற்படுத்துவோம். நீங்கள் என்ன செய்தாலும் அதற்குச் சமமாக நாங்களும் செய்வோம்.

ஜோர்ஜ் புஷ் ஆரம்பித்த ஆப்கானிஸ்தான் போருக்கு நீங்களும் ஆதரவாக இருப்பதால் நீங்களும் அழிவைச் சந்திப்பீர்கள்.

இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் பின்லேடன் குரல் மட்டும் தான் இதில் ஒலிக்கிறது. இது உண்மையிலேயே பின்லேடன் குரலா? அல்லது யாராவது அவருடைய குரலில் மிமிக்ரி செய்து- பேசி இருக்கிறார்களா? என ஆய்வு நடக்கிறது.



பிரான்ஸ் வந்திருந்த கஜகஸ்தான் ஜனாதிபதி நார்சுல்தான் நாஸர்பையேவை (வலது), தலைநகர் பாரிஸிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஷி வரவேற்கிறார்.

# சிங்கப்பூர் அமைச்சரவையில் இரு தமிழர்கள்

சிங்கப்பூர், ஒக்.29

சிங்கப்பூரின் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தமிழர்கள் இருவர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர் பிரதமராக இருக்கும் லீ ஹூசைன் லூங் தனது அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். அதன்படி உள்துறை விவகாரங்களுக்கான அமைச்சராக கே.சண்முகம், நிதி அமைச்சராக தர்மன் சண்முகரத்னம் ஆகியோரை தாம் நியமித்துள்ளார் என அறிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் இந்திய வம்சாவழித் தமிழர்கள். மேலும் உள்துறை விவகார அமைச்சர் சண்முகம் தேசிய பாதுகாப்புத்துறை அமைச்சரின் ஒருங்கிணைப்பாளராகவும், துணைப்பிரதமர் அந்தஸ்தினையும் பெற்றுள்ளார்.

லீ ஹுஸைஸன் லூங் அமைச்சரவையில் எஸ்.ஜெயக்குமார் என்பவர் பிரதமர் அலுவலகத்தின் மூத்த அதிகாரியாக நீண்ட நாட்களாக பணியாற்றி வருகிறார்.

# அமெரிக்கத் தேர்தல்: ஒபாமா வாக்களிப்பு



வாஷிங்ரன், ஒக். 29

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் ஜனாதிபதி பராக் ஒபாமா செவ்வாய்க்கிழமை (ஒக்.26) வாக்கைப் பதிவு செய்துள்ளார்.

ஒபாமாவின் பெயர் அவரது சொந்த மாகாணமான இலினாய்ஸ் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. இதனால் அவர் தனது வாக்கை ஈ-மெயில் மூலம் பதிவு செய்து அனுப்பி வைத்துள்ளார்.

ஒபாமாவின் மனைவி மிஷேல் கடந்த 14ஆம் திக்தியே தனது வாக்கைப் பதிவு செய்து விட்டார்.

அமெரிக்காவில் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் கடைசி நேரக் கூட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு தேர்தலுக்கு முன்னதாகவே முக்கிய பிரமுகர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவது வழக்கம்.

இந்த அடிப்படையில் ஜனாதிபதி ஒபாமாவும், அவரது மனைவி மிஷேலும் தேர்தலுக்கு முன்னரே வாக்களித்துவிட்டனர் என்று ஒபாமாவின் செய்தித்தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்கு 435 பேர், செனட் சபைக்கு 100 பேர், 37 மாகாண ஆளுநர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நவம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மர்ம கும்பல் துப்பாக்கிப் பிரயோகம் மெக்ஸிக்கோவில் 15 பேர் மரணம்

தெபிக்,ஒக்.29

மெக்ஸிக்கோவிலுள்ள தெபிக் நகரில் கார்களைச் சுத்தப்படுத்தும் மையம் உள்ளது. இங்கு ஊழியர்கள் கார்களை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். வாடிக்கையாளர்கள் சிலரும் அங்கு அமர்ந்திருந்தனர். அப்போது மர்ம மனிதர்கள் சிலர் துப்பாக்கியுடன் வந்தனர். அவர்கள் அங்கிருந்த ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர்.

இதில் 15 பேர் பலியாகினர். 2பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் போதை மருந்து கும்பலாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

போதை மருந்துக்கு அடிமையாகி மறுவாழ்வு பெற்றவர்கள் பலர் கார் சுத்தப்படுத்தும் வேலை பார்த்து வந்தனர். அவர்களைக் குறி வைத்து தாக்குதல் நடத்தி இருக்கலாம் எனத் தெரிகிறது.

மெக்ஸிக்கோ நாட்டில் இதுபோன்ற தாக்குதல்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஒரு தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மற்றொரு தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர்.



கம்போடியா வந்திருந்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனை(இடது), கம்போடிய பிரதமர் ஹூன்சென், போனோப்பென் அரசு விருந்தினர் மாளிகையில் வரவேற்கிறார்.

உலக அரங்கில்

# திருமண வீட்டுக் கூரை சரிவு: ஆப்கானிஸ்தானில் 65 பேர் பலி!

காபூல்,ஒக்.29

ஆப்கானில் திருமண வீட்டில், மேற்கூரை இடிந்து விழுந்ததில் பெண்கள், குழந்தைகள் உட்பட 65 பேர் பலியாயினர்.

ஆப்கானில் மிகவும் பழைமையான முறையில் சுடவைக்காத மண்ணால் உருவாக்கப்பட்ட கல்லைக் கொண்டு ஏராளமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வீடுகளின் உறுதித்தன்மைக்கு ஈடுகொடுக்க, மரத்தினாலான தூண்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில், பக்லன் மாகாணம், ஜெல்கா மாவட்டத்திலுள்ள ஒரு வீட்டில் திருமணம் நடைபெறவிருந் தது. இதற்காக ஏராளமானோர் வந்திருந்தனர். அப்போது, வீட்டின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது.

இதில், பெண்கள், குழந்தைகள் உட்பட 65 பேர் பரிதாபமாக இறந் துள்ளனர். மேலும் 40 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

இது குறித்து பக்லன் மாகாண ஆளுநர் முன்ஷி அபுல் மஜித் கூறுகையில், ''மூன்றடுக்கு கட்டடமான இதன் ஒரு பகுதி நேற்று இடிந்து விழுந்தது. இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது'' என்றார்.

# சுப்பிரமணியம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது உரும்பிராய் திருக்குமரன்

வலி.வடக்கு, ஒக். 29

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டி இறுதி ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் இறுதிப் பந்தில் ஒரு ஓட்டத்தைப் பெற்று அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட மென்பந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டி இறுதி ஆட்டம் தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் நாச்சிமார் கோயில் காமாட்சி விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக்கழகம் 16 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

மோகன் 03 ஆறுகளுடன் 18 ஓட்டங்களையும், ரதீசன் 16 ஓட்டங்களையும், அரவிந்தன் , செல்ரன் தலா 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.

திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுயன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், தினேஷ், அருண் முறையே 14,18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

89 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருக்குமரன் விளையாட்டுக்கழகம் 16 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

தயாபரன் 2 ஆறுகளுடன் 20 ஓட்டங்களையும், பத்மமுரளி 19 ஓட்டங்களையும்,சஞ்சயன் 13 ஓட்டங்களையும், நவயுகன் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.

காமாட்சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சர்மன் 4 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும், திலீபன்,ஜெயரூபன் தலா 4 ஓவர்கள் பந்து வீசி முறையே 21, 27 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியதுடன் பிரசன்னா 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், தொடர் ஆட்ட நாயகனாகவும் காமாட்சி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கிருபவனும், திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சுயன் சிறந்த பந்து வீச்சாளராகவும், தயாபரன் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யபட்டார்கள். (த-86)



உதயன் ஆதரவுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை நடத்திய பளுதூக்கும் போட்டியில் 62.1-69 கிலோ எடைப் பிரிவில் வெற்றிபெற்ற சி.சுகந்திரதாஸ், தி.பிரதீபன், சி.கலைச்செல்வன் ஆகியோர் பல்கலைக்கழக பளுதூக்கும் அணித்தலைவர் பிரசாத்துடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம் : நேசன் )

# சிறுவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஒக். 29

'சிறுவர்களுக்காக கிரிக்கெட்' என்னும் கருப்பொருளில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சமூக செயற்பாட்டு மையம், இலங்கை கிரிக்கெட் சபை ஆகியவை இணைந்து நடத்தும் சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் கழகங்களுக்கான பயிற்சி முகாம் நேற்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.



யுனிசெப் நிறுவன அதிகாரி பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்தபோது

இதில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பண்டார தேசிய கொடியை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் யுனிசெப் நிறுவனத்தின் அலுவலகப் பொறுப்பதிகாரி அல்பிறட் மூர்த்தி, யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி, சமூக செயற்பாட்டு மைய நிறுவனத்தின் இணைப்பாளர் என்.சுகீர்தராஜன், இலங்கை கிரிக்கெட் சபையின் பயிற்சியாளரின் முகாமையாளர் மல்கம் பெரேரா, நுவரெலியா மாவட்ட கிரிக்கெட் பயிற்சியாளர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சி முகாமில் 12 சிறுவர் கழகங்களைச் சேர்ந்த 24 பேர் பங்கு கொண்டுள்ளனர். இப்பயிற்சி முகாம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும். (த-23)

# கீர்த்திகாவுக்கு 3 பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவி வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளார்.

பெண்கள் பிரிவில் யாழ். பல்கலைக்கழக மாணவியான கீ.கீர்த்திகா முப்பாய்சலில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும், 100 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட நிகழ்விலும் 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்விலும் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்.(த-23)

# வவுனியா வீராங்கனை கலைவாணி சாதனைப் பட்டியலில் இடம்பெறுகிறார்

வலி.வடக்கு, ஒக். 29

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளின் அடிப்படையில் நீளம் பாய்தல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். கலைவாணியின் 2007 ஆம் ஆண்டு பெறுபேறு வடமாகாணத்தின் சாதனைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் பெறுபேற்றின் அடிப்படையில் புதிய சாதனைப் பட்டியலை முதல் தடவையாகப் பதிவு செய்ய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளில் 2007, 2009 ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கலைவாணி 4.70 மீற்றரும் 4.61 மீற்றர் பாய்ந்தும் 2010 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தனுபா 4.44 மீற்றர் தூரம் பாய்ந்தும் பெறுபேறுகள் பதியப்பட்டுள்ளன.

வடமாகாணத்தின் புதிய சாதனையாக பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கலைவாணியின் 4.70 மீற்றர் தூரம் சிறந்த சாதனையாகப் பதியப்பட்டுள்ளது. (த-86)

# 20 ஆண்டுகள் இடைவெளியின் பின் பற்றிக்ஸ் அணியை வென்றது ஹென்றிஸ்

வலி.வடக்கு, ஒக். 29

கடந்த 20 ஆண்டுகால இடைவெளியின் பின்னர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 20 வயது உதைபந்தாட்ட அணி சென்.பற்றிக்ஸ் கல்லூரிஅணியைஅதன்சொந்த மைதானத்தில் வைத்து வென்றுள் ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே நட்பு ரீதியாக வருடாந்தம் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் இரு கல்லூரிகளினதும் தலா 4 அணிகள் மோதிக் கொண்டன.

14,16 வயதுப் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டிகளில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வென்றது.

20 வயதுப் பிரிவினருக்குகான போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் கடந்த இருபது வருட இடைவெளியின் பின்னர் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் சொந்த மைதானத்தில் வைத்து இந்த அணியை வென்று சாதனை படைத்தது. (த-86)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**மாலை 4.15 மணி**

* மயிலங்காடு ஞான முருகன் விளையாடடுக்கழக அணி எதிர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி. (த-23)




## வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம், ஒக். 29

றோட்டறக்ட் கழகத்தினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு;

முதலாம் இடம்: யாழ். றோட்டறக்ட் கழகம்

இரண்டாம் இடம்: சுன்னாகம் றோட்டறக்ட் கழகம்.

மூன்றாம் இடம்: யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம். (த-23)

# உடுவில் சிந்து, சாந்தை விநாயகர் தாச்சி இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 29

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாரகி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு அமரர் சிவகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் ஆதரவுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே இடம்பெற்று வரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணி, பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி ஆகியவை மோதவுள்ளன.

அரையிறுதியாட்டங்கள் கடந்த வாரம் வாரகி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுககழக அணியை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை 6:4 என்ற புள்ளி அடிப்படையில் வென்று இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி குமாரநகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கைதடி குமாரநகர் விளையாட்டுக்கழக அணியை 13:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டு இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (த-23)

# 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட்; யாழ். இந்துக் கல்லூரி அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவுகளுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி ஒரு ஓட்டத்தினால் யாழ். மத்திய கல்லூரி அணியை வெற்றி கொண்டு சம்பியனானது.

அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணிமோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

யாழ். இந்துக் கல்லூரி 45.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

மதுஷன் 16 ஓட்டங்களையும், பிரியதர்சன் 37 ஓட்டங்களையும், சாரங்கன் 26 ஓட்டங்களையும், சஜீகன் 17 ஓட்டங்களையும், றுக்ஸ்மன் 17 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான யூலியஸ் கனிஸ்ரன் 8 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஸ்ரெபனன் 5.3 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜெந்திரன் 10 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிருபன், 10 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிரோஷன் 2 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

151 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.

இதில் சஞ்சேயன் 12 ஓட்டங்களையும், ஜெந்திரன் 17 ஓட்டங்களையும், சர்மிளன் 20 ஓட்டங்களையும், நிரேஷன் ஆட்டம் இழக்காமல் 26 ஓட்டங்களையும், அலெக்ஸ் 16 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 34 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர்களான சாரங்கன் 10 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சிந்துஷன் 9.5 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் மதுஷன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும் லக்ஸ்மன் 3 ஓவர் பந்து வீசி 3 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (த-23)

# இங்கிலாந்துக்கு பொண்டிங் எச்சரிக்கை!

''அடுத்த மாதம் ஆஸ்திரேலியாவில் ஆரம்பமாகவுள்ள ஆஷஸ் தொடர் எளிதாக அமையும் என்று இங்கிலாந்து வீரர்களும் ரசிகர்களும் கனவு காணவேண்டாம். மேலும், கடந்த தொடரின்போது நீங்கள் வெற்றிகொண்ட ஆஷஸ் கிண்ணத்தையும் மறக்காமல் உங்களுடன் கொண்டு வாருங்கள். ஏனெனில், உங்களை வீழ்த்த நாங்கள் தயாராக இருக்கிறோம்.''

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''எங்களது பாரம்பரிய வைரிகளிடமிருந்து ஆஷஸ் தொடரை மீண்டும் கைப்பற்றுவது ஒரு சிறந்த சாதனையாக அமையும். அதற்கு நாங்கள் தயார். நீங்கள் வெல்வீர்கள் என்று நினைத்துவிடாதீர்கள்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 25ஆம் திகதி பிரிஸ்பேனில் முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

# பாகிஸ்தான் அணிக்கு எதிரான 'இருபது-20' தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா

துபாய், ஒக். 29

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது 'இருபது-20' கிரிக்கெட் போட்டியிலும் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடரையும் கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' கிரிக்கெட் தொடர் துபாயில் நடைபெற்றுவந்தது.

முதலில் நடந்த முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 120 ஓட்டங்களைப் பெற்றது.

மிஸ்பா உல் ஹக் (33), அப்துல் ரஸாக் (25) ஆகியோர் ஓரளவு சிறப்பாக ஆடி கூடிய ஓட்டங்களைச் சேர்த்துக்கொடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், தெரோன் 4 விக்கெட்டுகளையும், சொட்சோபே 2 விக்கெட்டு களையும், அல்பிமோர்கல், மார்னி மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 121 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

ஸ்மித் (38), இங்ராம் (31), டுமினி (20-ஆட்டமிழக் காமல்) ஆகியோர் சிறப்பாக ஆடி வெற்றிக்கு வழிவகுத்துக்கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், சொய்ப் அக்தர், மொஹமட் ஹபீஸ், சயீத் அப்ரிடி, சயீட் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக தெரோன் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடரின் நாயகனாக போத்தா தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியிலும் வெற்றிபெற்றதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' தொடரையும் தென்னாபிரிக்கா கைப்பற்றியது.



# ராஜஸ்தான் ரோயல்ஸ் மனு: மீண்டும் இன்று விசாரணைக்கு

மும்பை, ஒக்.29


ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து ராஜஸ்தான் அணி நீக்கப்பட்டதை எதிர்த்து, அந்த அணி நிர்வாகம் தொடர்ந்த வழக்கின் விசாரணைகள் இன்று மீண்டும் நடைபெறவுள்ளன.

ஐ.பி.எல். விதிமுறைகளுக்குப் புறம்பாக - முறைகேடுகளில் ஈடுபட்டது எனக் கூறி ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கடந்த 10ஆம் திகதி நீக்கப்பட்டது.



பின்னர், தமது அணியின் நீக்கம் குறித்த முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி நிர்வாகம் விடுத்த வேண்டுகோளை, இந்திய கிரிக்கெட் சபை ஏற்க மறுத்தது.

இந்நிலையில், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி நிர்வாகம் சார்பாக, ஐ.பி.எல். தொடரிலிருந்து தமது அணி நீக்கப்பட்டதை எதிர்த்து மும்பை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.




இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஹரிஷ்சால்வே வாதாடுகையில்,

''ஐ.பி.எல். நிர்வாகத்துடனான பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி ராஜஸ்தான் ரோயல்ஸ் நிர்வாகம் கேட்டுக் கொண்டதை, இந்தியக் கிரிக்கெட் சபை இதுவரை கண்டுகொள்ளவில்லை. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி நீக்கத்துக்கு நீதிமன்றம் தடை விதிக்க வேண்டும். அணியின் பெயர் தொடர்பான வர்த்தகத்தை மேற்கொள்ளவும், வீரர்களுடனான ஒப்பந்தத்தை அந்த அணி தொடரவும் அனுமதி அளிக்க வேண்டும்'' - என்று வற்புறுத்தினார்.

இந்திய கிரிக்கெட் சபை சார்பாக ஆஜரான சட்டத்தரணி, பதில் மனு தாக்கல்செய்ய கால அவகாசம் வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

இதற்கு முன்னதாக அடுத்த ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம், வரும் டிசம்பர் மாத இறுதிவரை நடக்காது என்றும் அவர் உத்தரவாதம் அளித்தார்.

நீதிபதிகள், இந்த வழக்கின் விசாரணையை இன்றைய தினத்துக்குத் தள்ளிவைத்தனர்.

மும்பை உயர்நீதிமன்றில் நடைபெற்ற இந்த விசாரணையை நேரில் பார்க்க, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை ஷில்பா ஷெட்டி, தமது கணவரும், பங்குதாரருமான ராஜ்குந்த்ராவுடன் வந்திருந்தார்.

பின்னர், இதுகுறித்து ஷில்பா ஷெட்டி கருத்துத் தெரிவிக்கையில்,

''நீதி வெல்லும் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்காக இறைவனை வேண்டுகிறோம்'' - என்றார்.

# ரெய்னா விவகாரம் குறித்து விளக்கமளிக்க ஐ.சி.சி. மறுப்பு

மும்பை,ஒக்.29

சூதாட்டத் தரகருக்கு நெருக்கமான பெண் ஒருவருடன் இந்திய வீரரான சுரேஷ்ரெய்னா, ஹோட்டலில் தங்கியிருந்தார் என வெளியான தகவல்கள் குறித்த சர்ச்சைக்கு விளக்கமளிக்க ஐ.சி.சி. மறுத்துள்ளது.

மும்பையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில், சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தலைமை செயல் அதிகாரியான ஹரூன் லார்கட் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எங்களது வர்த்தக பங்குதாரர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத் தொகை விவரங்களை நாங்கள் வெளியில் சொல்லமாட்டோம். அதேபோல்தான் இதுவும். கிரிக்கெட் சபையின் மூலம் ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு குழு மற்றும் பாதுகாப்புக் குழுவிற்கு அனுப்பப்படும் அறிக்கைகளின் விவரத்தையும் நாங்கள் வெளியிடமாட்டோம். சம்பந்தப்பட்ட கிரிக்கெட் சபையுடன் இதுகுறித்து நாங்கள் பேசுவோம். இதுதான் வழக்கமான நடைமுறை.'' - என்றார்.

டெஸ்ட் கிரிக்கெட்டின்போது நடுவர்களின் முடிவில் சந்தேகம் இருந்தால் அதை எதிர்த்து 3ஆவது நடுவரின் தீர்ப்பை எதிர்பார்க்கும் முறைமைக்கு இந்தியா தொடர்ந்து அதிருப்தி தெரிவித்து வருகிறது.

அதேவேளை, இந்திய அணி பங்கேற்கும் தொடர்களில் மட்டும் இந்த முறை இடம்பெறு வதில்லை. என் லாகர்ட்டிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது,

''நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையில் தொழில்நுட்பத்தைப் பற்றிய நம்பகத்தன்மையில் இந்திய கிரிக்கெட் சபை இன்னும் திருப்தியடையவில்லை.

இந்திய அணி டிசம்பர் மாதம் தென்னாபிரிக்கா சென்று டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரின்போது நடுவரின் தீர்ப்பை ஆட்சேபிக்கும் முறை இருக்குமா என்பதை இந்திய கிரிக்கெட் சபை, தென்னாபிரிக்கக் கிரிக்கெட்



இரண்டும் இணைந்துதான் முடிவு செய்ய வேண்டும். நாங்கள் இதில் தலையிட மாட்டோம். இந்த முறையால் நிறைய வீரர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இனிவரும் காலங்களில் இந்த முறைக்கு இந்தியக் கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவிக்கும் என்று நம்புகிறேன்'' - என்றார்.

# மரடோனாவுக்கு நாளை 50ஆவது பிறந்த நாள்



ஒக்டோபர் மாதத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இரு உதைபந்தாட்ட ஜாம்பவான்களை உலகுக்குத் தந்த மாதம் இது. ஒருவர் பீலே இன்னொருவர் மரடோனா.

கடந்த வாரம் பீலே தனது 70ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். நாளை சனிக்கிழமை (ஒக்டோபர் 30ஆம் திகதி) மரடோனா தமது 50ஆவது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார்.

இந்த முறை மரடோனா தமது பிறந்தநாளை நேபோலி அணி வீரர்களுடன் கொண்டாடவுள்ளார். 1987ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை மரடோனா இந்தக் கழகத்திற்காக விளையாடும்போதுதான் நேபோலி அணி, சீரி 'ஏ' தொடரில் பட்டம் வென்றது.

நேபோலி வீரர்களுடன் இணைந்து தமது பிறந்த நாள் கொண்டாடுவது குறித்து மரடோனா கூறியவை வருமாறு:-

என்னை எதிர்பார்த்து நேபள்ஸ் நகரமே காத்திருக்கிறது. பணத்தையோ அல்லது வேறு எதையும் எதிர்பார்த்து நேபள்ஸ் செல்லவில்லை. என்னைப் பொறுத்தவரை நேபோலி என்றதும் ஓர் உணர்வுபூர்வமான மகிழ்ச்சி ஏற்படும்.'' - என்றார்.

மரடோனாவின் பிறந்த நாள் நெருங்கி வருவதையொட்டி அவருக்கு இப்போதே வாழ்த்துகள் குவியத் தொடங்கியுள்ளன.

'யூபா' தலைவர் மைக்கல் பிளாட்டினி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இவர் இத்தாலி அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியை செலுத்திவிட்டுத்தான் மரடோனா நேபள்ஸுக்குள் கால் வைக்க வேண்டும் என்று கூறியவர்.

ஆனால், முதல் ஆளாக பிளாட்டினிதான் மரடோனாவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மரடோனா இத்தாலியில் விளையாடிய காலகட்டத்தில், 37 மில்லியன் யூரோ, இத்தாலி அரசுக்கு வரியாக வழங்கவேண்டியிருந்தது. அதனை வசூலிக்க இத்தாலி அரசு முயற்சி எடுத்து வருகிறது.

## அளவெட்டியில் நாளை 'அற்றைத் திங்கள்' மேடையேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினரின் தயாரிப்பான "அற்றைத் திங்கள்" எனும் நவீன கூத்துருவ நாடகம் நாளை சனிக்கிழமை அளவெட்டி சிவாய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலைய திறந்த வெளி அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

அளவெட்டி மகா ஜனசபை கலைஞர் வட்டத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் சிறப்பு நிலாக் காலம் எனும் கலை நிகழ்விலேயே இந்நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

அளவெட்டி மகா ஜன சபை கலைஞர் வட்டம் நடாத்தும் இந்நிகழ்வில் பிரான்சிலிருந்து வருகை தந்துள்ள அளவெட்டியைச் சேர்ந்த சிவராசு சுந்தரம் (குஞ்சன்) குழுவினரின் வில்லிசை நிகழ்வும் நடைபெறவுள்ளது. • (ஐ)

## 'நீதம்' மலர் வெளியீடும் கலாசார நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'நீதம்' மலர் வெளியீடும் வருடாந்த கலாசார நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதனும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி ஏ.பிரேம்சங்கரும் கலந்துகொள்வர். (ஐ-10)

## தசாக கிரஹயக்ஞ அழைப்பு



நிகழும் விகிர்தி வருஷம் ஐப்பசித் திங்கள் 04ஆம் நாள் (21.10.2010) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### பிரம்மஸ்ரீ. பிக்ஷாடனக் குருக்கள் சோமசுந்தரக் குருக்கள்

*(சுப்பண்ணா குருக்கள்)*

*அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.*

| | | |
|---|---|---|
| 30.10.2010 சனிக்கிழமை | காலை 10.00 மணிக்கு | தசாகம் |
| 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணிக்கு | ஏகோதிஷ்டம், மாசிகம் |
| 01.11.2010 திங்கட்கிழமை | காலை10.00 மணிக்கு | சபிண்டீகரணம் |
| 02.11.2010 செவ்வாய்க்கிழமை | காலை 08.00 மணிக்கு | கிரஹயக்ஞம் |
| | பகல் 11.00 மணிக்கு | சமாராதனை |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

*குறிப்பு- தயவுசெய்து இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 * 03 * 1926



மறைவு 29 * 09 * 2010

### திருமதி துரைச்சாமி கனகம்மா

கல்லுக்குள் ஈரமாய் அன்பினை உங்கள்
நெஞ்சுக்குள் நிறைத்துவைத்து
கண்டிப்பான அம்மாவாய் உங்களைக் காட்டி
இன்று கண் காணாத இடத்திற்கு சென்றுவிட்ட
எங்கள் அன்பு அம்மாவே இன்று நீங்கள்
இல்லாத வீடு வெறுமையாய் கிடக்கிறது.

**உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்**

*44, முதலியார் லேன்,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (105304)

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.




## மரண அறிவித்தல்கள்

### முருகன் இராசையா (இராசு)



**(முன்னாள் சாரதி, இ.போ.ச.)**

சோடாக்கடை ஒழுங்கை, ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் இராசையா (26.10.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் நேசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம், சின்னக்கிளி, தம்பையா, தங்கன் மற்றும் இராசம்மா, செல்லத்தம்பி (சின்னராசா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜகுமாரி (அமெரிக்கா), இராஜேஸ்வரன் (அமெரிக்கா), இராஜலஷ்சுமி (லண்டன்), இராஜரமணன், இராஜகாந்தன், இராஜகமலம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயபாலன் (அமெரிக்கா), சிறீஸ்கந்தராசா (லண்டன்), ரஜினாவதி (கனடா), நிமாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகாஷ், நர்மதா, மதுசன் (அமெரிக்கா), டிலக்ஷன், கரிஷனா, பவித்திரன், அஜந்தன் (லண்டன்), விதுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2010) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோடாக் கம்பனி ஒழுங்கை,*
*ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.*
T.P. : 0776224038 (சி/572228)

*தகவல் :* குடும்பத்தினர்.

### யோசேப் அன்ரனி லாசரஸ் புள்ளே



(General Manager of Palace Hotel, Negombo, Old student, St.Patricks College)

167, கேன்முள்ள, கொச்சிக்கடையைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோசேப் அன்ரனி 17.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியா லாசரஸ் புள்ளே தம்பதியரின் இளைய மகனும், காலம் சென்றவர்களான மரியசீலி சின்னப்பு ஆகியோரின் மருமகனும், சிறிரஜனியின் அன்புக் கணவரும், சாமேன் சுபத்திரா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மனோஜ் பிரவீன் (மாணவன், கொச்சிக்கடை R.C.T.M.V) ஆகியோரின் தந்தையும், லோறன்ஸ், எலிசபேத், பிலிப், மாகிறேற், மேரி, வினிபிறீடா, திரேசா, வின்சன்ற், றொமில்டா ஆகியோரின் சகோதரனும், காலம்சென்ற சிறி (பிரான்ஸ்) மற்றும் பவானி, கைலாயினி (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சுதர்சினி (பிரான்ஸ்), சுதாகரன் (ஆசிரியர், புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை), மைதிலி (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், சகாயநாயகம் (Sewa Lanka, Vavuniya), சகாயராஜா (ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி), திருமதி. ஜோய் சிறி (பிரான்ஸ்), திருமதி. கனிமொழி சுதாகரன் (ஆசிரியை, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.10.2010 அன்று கொச்சிக்கடை தொப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.

167, கேன்முள்ள,
கொச்சிகடை.

தகவல்:
சிறி ரஜனி (மனைவி)
(பழைய மாணவி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) (105301)

## A/L 2010 மாணவர்கள்

? உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, **(UK, Canada, Australia, India, Ukraine, Malaysia, USA, New Zealand, Singapore)** கல்வி கற்பதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கின்றீர்களா?

இன்றே எமது **STUDENTS DATA BANK**ல் உங்களை பதிவு செய்து கல்வி சம்பந்தமான முழுமையான விபரங்களையும் இலவசமாக பெற்றுக் கொள்ளவும்.

Name : ..................
Address : ..................
..................
.................. Tel : ..................
**Name of your School** : ..................
A/L Stream : BIO / MATHS/ COMMERCE/ ARTS (Circle)
A/L Exam Index No : ..................
E-mail : ..................

உங்கள் விபரங்களை கடிதத்திலோ/ தபாலட்டையிலோ எழுதி அனுப்பவேண்டிய முகவரி

**SIC CENTRE**
734, Hospital Road, Jaffna.
TEL: 0777-767818

## களுத்தோட்ட பினான்ஸ் தனியார் நிறுவனம்

இலங்கையில் மிகக் குறைந்த வட்டியில் உங்களிடம் உள்ள வாகனத்துக்கோ அல்லது புதிய வாகனத்துக்கோ வாகனப் புத்தகத்தை மாத்திரம் சமர்ப்பித்து ஒரு மணித்தியாலத்துக்குள் உங்கள் கைகளில் பணம். பிணையாளிகள், வாகனத் தரநிர்ணயம் தேவையில்லை. எந்நாளும் எங்கள் சேவை அவசியமாயின் உங்கள் இல்லத்துக்கே வந்து தொடருவோம். இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் எங்கள் கிளை நிறுவனங்கள் அமைந்திருக்கின்றன.

யாழ்ப்பாணக் கிளை
இல. 88, மாட்டீன் றோட்,
ஆஸ்பத்திரி வீதி.

களுத்தோட்ட பினான்ஸ்
தனியார் நிறுவனம்
தொடர்புகளுக்கு
S. கிருஷாந்தன் 0770638705, 0777696991. (105302)

## பணிநிலை வெற்றிடம்

கொழும்பைத் தலைமைக் காரியாலயமாகக் கொண்டியங்கும் கூட்டு நிறுவனத்துக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | |
|---|---|
| Marketing Executive | O/L சித்தி, (இருபாலார்) |
| Air Ticketing Officers | A/L சித்தி (இருபாலார், கணனி அறிவு, ஆங்கில அறிவு) |
| Customer Service Officers | A/L சித்தி (மும்மொழி பாண்டித்தியம்) |
| General Manager | (அரச, தனியார் நிறுவன 5 வருட அனுபவம், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பூர்த்தி, மும்மொழி பாண்டித்தியம்) |

சுயவிவரக் கோவையுடன், புகைப்படம், அனைத்து ஆவணங்களின் பிரதியுடன் எதிர்வரும் 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 - 2 மணிவரை கீழ்வரும் முகவரிக்கு சமுகம் தரவும்.

**CNNP Group's**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பொருமாள் கோயில் முன்பாக)

Hotline: 0214920920
Tel: 0773083820
E-mail: cnnpgroup's @gmail.com

(C/572227)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி இராசகுமார் தம்பதியரின் புதல்வன்

**நிதுர்சன்**

(யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

2010 ஆம் ஆண்டுதரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகள் பெற்றமையையிட்டு அவரைப் பராட்டுவதோடு அவரை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:

அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பம்மா,அண்ணாமார், அக்காமார், தம்பிமார், மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார் மச்சாள்மார்.

மீசாலை கிழக்கு.
மீசாலை.


# வன்னியிலிருந்து பழைய இரும்புகளை தெற்கே எடுத்துச் செல்ல மீண்டும் தடை

கொழும்பு,ஒக்.29

வன்னிப் பிரதேசத்திலிருந்து பழைய இரும்புகளை தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி கடந்த 25 ஆம் திகதி முதல் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவொன்றின் பேரில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் காணப்படும் பழைய இரும்புகளை தெற்குக்கு எடுத்துச் செல்ல கடந்த ஜனவரி மாதம் முதல் பாதுகாப்பு அமைச்சினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளதாகவும் -

பின்னர் மார்ச் மாதத்தில் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடைமுறை இடைநிறுத்தப்பட்டு பின்னர் மீளவும் கடந்த 18ஆம் திகதி முதல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்ததாகவும்- அவர் தெரிவித்தார்.

தெற்கிலிருந்து பெருமளவிலான வர்த்தகர்கள் பழைய இரும்புகளை கொள்முதல் செய்வதற்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்குச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், மீட்கப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடிய மர்ந்துள்ள மக்கள் தெற்கிலிருந்து வருவோருக்கு இரும்புகளைச் சேகரித்து வழங்குவதை தமது முக்கிய வாழ் வாதாரமாகக் கொண்டிருப்பதாக்வும், அவர்களால் கொள் முதல் செய்யப்படும் பழைய இரும்புகளை இராணுவத்தினரின் கண்காணிப்புடனேயே லொறிகளில் ஏற்றப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, பாதுகாப்பு அமைச்சிடமிருந்து முறைப்படியான அனுமதிபெறாது சட்ட விரோதமாக பழைய இரும்புகளை தென்பகுதிக்கு எடுத்துச்சென்ற 30 பேர் வரையில் அண்மையில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-22)


## குருக்கள் உடன் தேவை

உருத்திரபுரீஸ்வரம் சிவன்கோயிலுக்கு குருக்கள், உதவிக் குருக்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். விண்ணப்பம் செய்வோர் 05.11.2010 இற்கு முன் நேரில்வரவும் (விடுதி வசதியுண்டு)

தி.இராசநாயகம்
தலைவர்,
உருத்திரபுரீஸ்வரம்,உருத்திரபுரம்.

தொ.பே.
0773868566
0263267571

(அ/572233)

## பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான கூறு விலை கோரல்

1. சிவப்பு நாட்டரிசி
2. சீனி
3. மஞ்சள் பருப்பு

இப்பொருள்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் கடித உறையின் மேல் மூலையில் '' கூறுவிலை'' எனக் குறிப்பிட்டு 03.11.2010 முற்பகல் 10 மணிக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாக அல்லது பதிவுப் தபால் மூலம் 'சீல்' இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது அப்பொருள்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(அ-572230)

## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Accounting Package 1000/= 3 Months | Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 1000/-
Diploma in Multimedia 4Months 1000/-

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i -29.10.2010 - 9am or 3pm
Batch ii -30.10.2010 - 9am or 3pm
Batch iii -31.10.2010 - 9am or 3pm
Batch iv -03.11.2010 - 9am or 3pm

10.11.2010க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

முதன்முறையாக...
Full Version Software Tally-9.0
Tallyஇல் Date மாற்றலாமா???

NEW Batch :- Saturday & Sunday (30.10.2010) (31.10.2010) 2pm to 3pm

## வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவும் முகமாக...

LIONS CLUB OF COLOMBO CAPITAL CITY - DIS.306 B2
LIONS CLUB OF MANIPAY CIRCLE - DIS. 306 B1

வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
வெற்றி FM
இணைந்து வழங்கும்

உலகப்புகழ் பெற்ற மாயாஜால சக்கரவர்த்தி



PROF. P.M. மித்ராவின்

மாயாஜால் வியக்கவைக்கும் மாய உலகம்

அக்டோபர் 29/30/31 திகதிகளில்

29/30ம் திகதிகள் 2.08 மற்றும் 6.04 மணிக்கு
31 ம் திகதி 11.08 மற்றும் 2.08 மணிக்கு

யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம்

டிக்கட்டுகள் V.I.P 500/- 300/-

மாயாஜால் பம்பர் குலுக்கல்

டிக்கட்டுகளை வாங்குங்கள்! பரிசுகளை வெல்லுங்கள்!!

நவம்பர் மாதம் 3ம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வீரகேசரி காரியாலயத்தில் நடைபெறும் குலுக்கலில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு வியக்க வைக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன!

கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் நிகழ்ச்சிகளுக்கான டிக்கட்டுகள் மட்டுமே குலுக்கலில் சேர்த்துக்கொள்ளப்படும்.

1. SPICE TRAVELS வழங்கும் - BANGKOK சென்றுவர விமான டிக்கட்
2. SPICE TRAVELS வழங்கும் - SINGAPORE சென்றுவர விமான டிக்கட்
3. SPICE TRAVELS வழங்கும் - CHENNAI சென்றுவர விமான டிக்கட்
4. ஜனதா ஸ்டீல்ஸ் வழங்கும் - DIGITAL CAMERA
5. நவீன் செரமிக்ஸ் வழங்கும் - MOBILE PHONE
6. MELWARE ROLLING வழங்கும் - MOBILE PHONE
7. கணேஷ் டெக்டைல்ஸ் வழங்கும் - பெறுமதியான சாரி, சல்வார்
8. சிட்டி பொய்ண்ட் வழங்கும் - 20 பம்பரம் மார்க் சாரங்கள்
9. EDNA CHOCOLATES வழங்கும் - EDNA சொக்கலட் பொதி

### டிக்கட்டுகள் கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| கோசி ரெஸ்ரோரன்ட் | - 15, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2225 899, 021 222 7100 |
| ஈஸ்வரன் டிரான்ஸ்போர்ட் | - 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2222 813 |
| வீரகேசரி காரியாலயம் | - 117, ஸ்டேசன் ரோட், யாழ்ப்பாணம். | - ☎: 021 5670 100 |
| வாணி டெக்ஸ் | - 81, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். | - ☎: 021 2225 578 |
| ஸ்பைஸ் டிரவல்ஸ் | - 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2228 591 |
| பாக்கியரத்னம் ஹாட்வெயார் ஸ்டோர் | - 163, 165, பிரதான வீதி, சங்கானை | - ☎: 021 3212 713, 021 225 015 |
| சீமாட்டி புடவைக்கடல் | - 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2228 564 |
| கரண்ட் இலக்ரிகல் | - 100, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2223 916 |
| நீலாம்பரி உணவகம் | - 744, KKS வீதி, தட்டார் தெரு | - ☎: 021 5100 245 |
| சங்கீதா மொபைல் லிங்க் (பிரை) லிமிடட் | - 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | - ☎: 021 2222 525, 021 2228 559 |

GANESH TEXTILES 61, 63, Main Street, Colombo-11. Tel: 2325128, 2343078
NAVEEN CERAMIC KOTAHENA WAWALA
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
Melwire Rolling (Pvt) Ltd. MANUFACTURERS OF STEEL
CITY POINT 20TH ANNIVERSARY 1990-2010
JANATHA STEEL Importers & General Hardware Merchants 20, QUARRY ROAD, COLOMBO 12. TEL: 0112 544 289
Edna CHOCOLATES
LBN LANKA BROADBAND NETWORKS

Cosy RESTAURANT (PVT) Ltd. MANIYAMS BUILDING 15, OFF STANLEY ROAD, JAFFNA. TEL: 021-222 5899, 021-2227100
NEW KOSALAI TRADERS 265, OLD MOOR STREET, COLOMBO 12. TEL: 011 2458823, 011 4994238
MANOJ Express Services 67/A, WOLFENDHAL STREET, COLOMBO 13. TEL: 2390128
ESWARRAN TRANSPORT SERVICES 69, 115, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL: +94 021 2222813
வாணி டெக்ஸ் 81, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம். தொ.இல: 021 2225578.
SPICE TRAVELS & TOURS (PVT) LTD 412, HOSPITAL ROAD, JAFFNA. TEL: 021 2228591
PAKIYARATNAM HARDWARE STORES 163, 165, MAIN STREET, CHANKANAI TEL: 021-3212713, 021 225015.
சீமாட்டி புடவைக்கடல் 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2228564

## டக்ளஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக மக்கள் உரிமை கழகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இதை அடுத்து தான்னை அந்த வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கேட்டு டக்ளஸ் தேவானந்தா, சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தார். நீதிபதி அக்பர்அலி இந்த வழக்கின் விவரம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டு இருந்தார்.

இந்த வழக்கு சில தினங்களுக்கு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது விசாரணை முடிந்து, அரசின் அறிக்கைக்காக தீர்ப்பு தள்ளி வைக்கப்பட்டது.

நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை வழக்கில், 1994ஆம் ஆண்டு அவர் ஒரு தேடப்படும் குற்றவாளி என அறிவித்து விசாரணை நீதிமன்றம் உத்தரவு பறப்பித்தது உண்மைதான் என்றும், அவர் இப்போதும் ஒரு தேடப்படும் குற்றவாளியே என்றும் நீதிபதி கூறினார். (உ)

## மின்னல் தாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விருவரும் மாடுகளை மேய்த்துக் கொண்டு செல்லும் போது மின்னல் தாக்கியேலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை கைகாட்டி தெருவைச் சேர்ந்த ஆதம்லெப்பை (வயது-37) என்பவரே மேற்படி சம்பவத்தில் மரணமானவராவார்.

## நல்லிணக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரணடைந்தனர். அவர்களில் 5,120 இளைஞர், யுவதிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு ஒகஸ்ட் 11ஆம் திகதி விசாரணைகளை ஆரம்பித்தது. குறுகிய காலத்தில் செப்ரெம்பர் 13ஆம் திகதி நல்லிணக்க ஆணைக்குழு, தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது.

ஆணைக்குழுவால் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகள், பரிந்துரைகள் ஆகியவற்றை அமுல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அதில் ஓர் அங்கமாக சகல குடிமக்களதும் மொழி உரிமையை உறுதிப்படுத்துவது குறித்தும் அரசு கவனம் செலுத்தி வருகின்றது எனவும் அவர் சொன்னார்.


**SPECIAL ENGLISH**

- சகலருக்கும் உரியது
- சகல மொழித் திறன்களையும் கொண்டது
- மொழியினை பூரணமாக கற்க விரும்புவேருக்கு ஏற்றது.

வார இறுதி நாட்களில் நடைபெறுகின்றது.

ஆசிரியர்: த.ந.பஞ்சாட்சரம்

விபரங்களுக்கு: Director, New Science Hall, Kannathiddy.

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் உள்ள ஸ்தாபனம் ஒன்றுக்கு தமிழ், ஆங்கிலத்தில் பில் போடுவதற்கு 45 வயதுக்கு மேற்பட்டோர் 01.11.2010இற்கு முன்பதாக தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல. 0750430863


## அச்சுவேலியில் திங்களன்று சிறுவர் காப்பகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29

கடவுளின் சொந்தப் பிள்ளைகள் நிறுவனத்தின் காப்பகம் ஒன்றை எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் காப்பகத் திறப்பு விழா சம்பந்தமான பத்திரிகையாளர் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் மு.ப.10 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-10)

## அரசமைப்புக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு இன்று முடிவு எடுக்க உள்ளது. சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை முடியும்வரை நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அவருக்கு அனுமதி அளிக்க வேண்டும் என மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் சரத் பொன்சேகா தரப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கூறப்பட்டுள்ளது.

எனினும் அந்த விடயம் தொடர்பில் நீதியரசர்கள் இருவரிடமும் வெவ்வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன என நீதியரசர் ரஞ்சித் டி சில்வா நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றில் கூறினார்.

தமது நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே நீதியரசர் ரஞ்சித் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என்று நீதியரசர் ரஞ்சித் டி சில்வா கூறினார். எனினும், மனு பரிசீலனையின் போது இராணுவ நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா, இல்லையா என்பது குறித்து ஏற்பட்ட பிரச்சினையை ஆராய்வதற்காக குறித்த மனுவை உயர்நீதி மன்றத்துக்கு அனுப்பிவைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (சி)


**விக்னா** கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

தமிழ் - திரு.குழந்தை

A/L - 2011 : 8-9 (am) / A/L - 2012 : 10-11 (am) > Sat, Sun.

ஆரம்பம் : 30.10.2010

**விக்னா** கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

அரசறிவியல் - திரு.ஸ்ரீரங்கநாத்

A/L - 2011 Paper Class : 9-10 (am) / A/L - 2012 : 8-9 (am) > Sat, Sun.

ஆரம்பம் : 30.10.2010

**விக்னா** கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

புவியியல் - திரு. செல்வா

A/L - 2011 : 10-11 / A/L - 2012 : 11-12 > Sat, Sun.

ஆரம்பம் : 30.10.2010

**தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வகுப்பும் மாதிரிப் பரீட்சையும்-2011**

(நாவலர் வெளியீடு)

ஆரம்பம் : 30.10.2010 சனி பி.ப. 3 மணி

பிரபல புலமைப் பரிசில் ஆசான் S.கோவர்த்தன் B.A. (Dip. in. Edu)

★ அனுமதிகள் இன்றுமுதல் பெறலாம்.
★ ஒரு பிரிவில் 30 மாணவர்கள் மட்டும்.
★ வாரத்தில் 5 நாள்கள் வகுப்புகள்.

நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## தமிழ் மக்களிடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''ஆசிய கலாச்சாரத்தையோ, நாகரீகங்களையோ நேர்வே சமூகம் அறிந்திருப்பதற்கான நியாயம் கிடையாது. இதனால், சமாதான ஏற்பாட்டாளராக மேற்குலக நாடொன்றைத் தெரிவு செய்தமை பொருத்தமற்றது.

''தமிழ் - சிங்கள மக்களின் மன நிலையை நோர்வே அரசோ அல்லது எரிக் சொல்ஹெய்மோ அறிந்திருக்க வாய்ப்பில்லை.''

- இப்படி அவர் தெரிவித்தார்.

## தூத்துக்குடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக 2004 ஆம் ஆண்டு இரு நாட்டு அரசுகளுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டது. எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவில்லை.

தூத்துக்குடி துறைமுகத்தில் அமைக்கப்படவுள்ள பயணிகளுக்கான சோதனை இடத்தில் கடவுச்சீட்டைப் பரிசோதிக்கும் கருவி, சுங்கப் பகுதி போன்ற பாதுகாப்புச் சோதனை முறைமைகள் ஏற்படுத்தப் படவுள்ளன.

கடந்த 14, 15 ஆம் திகதிகளில் இந்தியாவிலிருந்து சென்ற தூதுக்குழு ஒன்று கொழும்பில் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிப் பயணிகள் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெறவேண்டிய அம்சங்களை உறுதிசெய்துள்ளது.

மத்திய கப்பல்துறை அமைச்சர் வி.கே. வாசன் இதனை தெரி வித்தார்.

இதனையடுத்து சேவையை ஆரம்பிப்பதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படவுள்ளன. இச்சேவை ஆரம்பிக்கப்பட்டால் இருநாடுகளுக்கும் இடையேயான பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (10)


**தேவை**

★ அலுவலக உதவியாளர் (Clerk) (ஆண்/பெண்)
★ தரம் 1 முதல் தரம் 5 வரை சகல பாடங்களும் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை.

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.Phone No : 0774598440

**தவறிவிட்டது**

திக்கத்தில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை செல்வராஜினி என்பவரது கடவுச்சீட்டு (பாஸ்போட்) கடந்த சனிக்கிழமை அன்று (23.10.2010) யாழ்ப்பாணத்துக்கும் திக்கத்துக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் நல்மனத்துடன் அல்வாய் வடமேற்கு, திக்கம் என்ற முகவரிக்குத் தொடர்புகொண்டு ஒப்படைக்கவும்.
சன்மானம் வழங்கப்படும். T.P : 2262218


## கண்டியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல மணித்தியாலங்கள் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

தொழிலாளர்களுக்கு 2 ,500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குதல், தற்காலிக தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்குதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைத்தல், ஊழியர் சேமலாப நிதிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுத்தல், ஓய்வூதியம் வழங்குதல் உள்ளிட்ட ப்ல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தனர். மக்கள் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு செயற்படுவது முறையா?

பதில்:- இது குறித்த அறிக்கை எமக்கு இன்னும் கிடைக்கவில்லை.

கேள்வி:- பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டது குறித்து அறிக்கை கிடைத்ததா?

பதில்:- இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் சாட்சிமளிக்க வேண்டும். அப்படி இல்லாமல் அறிக்கையை எதிர்பார்க்க முடியுமா?

கேள்வி :- நல்லிணக்க ஆணைக்குழு முன்னால் கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் சாட்சியமளிக்கும்போது 900 பொலிஸார் கொல்லப்பட்டதற்கு கருணாவே காரணம் எனத் தெரிவித் துள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுக்கப் படுமா?

பதில்:- இறுதி அறிக்கை கிடைத்ததும் இது குறித்து ஆராயப்படும். அப்போது நீங்கள் இருப்பீர்களா என்பது சந்தேகமாகவுள்ளது.

கேள்வி:- ஏன் என்னைக் கடத்திக் காணாமலாக்கப் போகின்றீர்களா?

பதில்:- நீங்கள் இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை. (இ-01)


**யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக!**

25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகக் கற்கைநெறிகள்

- கணனியுடன் ஊடகவியல்
- வானொலி ஊடகவியல்
- தொலைக்காட்சி ஊடகவியல்
- பத்திரிகை பக்க வடிவமைப்பு
- கிராஃபிக் டிசைனிங்
- ஃபோட்டோ கிராஃபி

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம், அச்சகம், ஸ்ருடியோ, போட்டோ, வீடியோ, அறிவிப்பாளர், விற்பனை ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல், விளம்பரத்துறை இன்னும் பல...

டென்மார்க்கில் பயிற்சி பெற்ற ஊடகவியளாளரினால் நடாத்தப்படுகிறது

Audio - Video Lab - Recording Studio

3 மாத கற்கைநெறி - 2 மாத பயிற்சி

கற்கைநெறிகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் பற்றிய விளக்கக் கருத்தரங்கு

ஒக்டோபர் 31 ஞாயிறு காலை 10 மணி

சிகரம் ஊடக இல்லம்

இல.22, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 93

பதிவுகளுக்கு

**Register Now Computer Engineering**

Pay per Module Rs.4800 was Rs.15000

- More career option
- Competitive salary
- Senior IT management position
- International job opportunities
- Msc admission from USA,UK universities

Schol. From States

Free (Course fees)

IELTS / TOEFL
ICDL | BCS
CISCO-CCNA
A+ | N+

MCS Supported By UNDP/JRRP

SMS your name & course to 772 395 895 & Get Schol.

324,Palaly Road,Parameswara Junction

Closing Date 30.10.2010

**January கற்கை துறைக்கான**

**EUROPEAN COLLEGE OF HIGHER STUDIES**

வழங்கும்

மாபெரும் கட்டணக் குறைப்புடனான லண்டன் (UK) பயணம்

1) London Richmond College
2) Victoria College
3) Thames College of Technology
4) Interling College
5) Bickenhall College
6) Union College

Study in UK

ஆகியவற்றுடன் நேரடி முகவர்களாக செயற்படுகின்றோம் இன்னமும்.

(ஆரம்பத்தில் எவ்வித கட்டணமும் அறவிடமாட்டோம்)

★ போலி வாக்குறுதிகள் இல்லை
★ IELTS அவசியமில்லை
★ ஆரம்பக்கட்டணம் எதுவும் இல்லை
★ கல்லூரிக் கட்டணம் 2000 பவுன்ட்ஸிலிருந்து
★ Sponsor வசதி (25 லட்சம் ரூபா- 130, 000/=)

Study in UK

நம்பிக்கை மிக்க பயணம்.

தொடர்புகளுக்கு:

315 1/2, European College Of Higher Studies,
Parameshwara Juntion, Palaly Road, Jaffna.

T.P: 0773537378, 0773823872, 021 3734747


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.